உ

சிவமயம்

சாந்தை - பண்டத்தரிப்பு - யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்
கொழும்பு கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியை வசிப்பிடமாகவும்
கொண்ட



அமரர்

# உயர் திரு. பொன்னுத்துரை சக்திவேல்

அவர்களின் சிவபத நிலை எய்திய

# நினைவு மலர்

01.03.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



எம் அன்புத் தெய்வத்திற்கு

# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவராக இருந்து
எம்மை அன்போடு காத்து வளர்த்து
நல்வழி காட்டி உயர் வழி அளித்த
எம் அன்புத் தெய்வத்தின்
திருவடிகளுக்கு இம்மலர் சமர்ப்பணம்



**என்றும் அவர் தம்**
**ஆத்ம நிழலில்**
**வாழும் மனைவி, மகள்மார்,**
**மருமகன், பேத்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்

**28.01.1956**

சிவன் அரவணைப்பில்

**30.01.2010**

அமரர்

**உயர்திரு. பொன்னுத்துரை சக்திவேல்** அவர்களின்

திதி வெண்பா

விரோதி வருடத்து தைமாதச்சனி
பிரதமை தேய்திதியில் - பேராசான்
பொன்சக்திவேல் இப்புவிநீத்து
பொன்னுலகு எய்தினார் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## தேவாரம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திருப்புலியூர்த்
தோன்றாத் துணையிருந் தனன் தன்னடி யோங்களுக்கே.

## திருவாசகம்

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன்றறியேனே.

## திருவிசைப்பா

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாரு வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிர ரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நாண்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையானாடுமா னந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தேன் பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பேறு அடைந்த அமரர் உயர் திரு. பொன்னுத்துரை சக்திவேல் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

இந்து சமுத்திரத்தின் முத்து எனப்பல வரலாறுகளால் புகழாரம் சூட்டப்பட்ட ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ் நன்நகரிலே, சைவமும் தமிழும் ஓங்கி வளர்ந்து மணம் பரப்பும் பண்டத்தரிப்பு பட்டினத்தில், வினைதீர்க்கும் அருள்மிகு சித்தி விநாயகர் பள்ளி கொண்டு அருளும் சாந்தை எனும் சிற்றூரில் சிவபக்தி, குருபக்தியில் மிகுந்தவரும், இறையுணர்வில் சதா கலந்தவருமான பொன்னுத்துரை தவமணி தம்பதியினரின் தவப்பயனால் 1956ம் ஆண்டு தைமாதம் இருபத்தெட்டாம் திகதி மூத்த புதல்வனாய் அவதரித்தார் திரு. சக்திவேல் அவர்கள்.

இவர் பிறந்த பொழுது கொழுத்த உருவமும், சிவந்த மேனியும், அழகிய வதனமும் கண்டு குழந்தைக்கு "சக்திவேல்" எனும் இறைநாமம் சூட்டினார்கள். இவர் தனது ஆரம்பக்கல்வியை சாந்தை சிற்றம்பல வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லுரி, கொழும்பு மத்திய கல்லூரிகளிலும், மேல்நிலைக்கல்வியை கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியிலும் பட்டப் படிப்பை வெளிவாரி மாணவராக நாவல - திறந்த பல்கலைக்கழகத்திலும், ஆங்கில பட்டக்கல்வியை கொழும்பு பல்கலைக் கழகத்திலும் கற்றதுடன் கல்விசார் நிகழ்ச்சிகளிலும், கல்விசாரா சமூக நிகழ்ச்சிகளிலும் பெரும் பங்காற்றி தனது திறமைகளை வெளிப்படுத்தினார்.

மாணவப் பருவம் கடந்து சமூகப்பணி செய்வதற்காக கொழும்பில் அறிவொளி மன்றத்தலைவராகவும், இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளராகவும் நீண்ட காலம் பணியாற்றினார்.

குடும்பத்தின் தலைமகனான இவர் தனது 22ஆவது வயதிலேயே இலங்கை பொலிஸ் சேமிப்பு வங்கியில் கணக்குப் பதிவாளராக கடமையாற்றி இருவருடங்களின் பின் உயர்கல்வி பெறுபேறுகளின் அடிப்படையில் மகாராஜா நிறுவனத்தில் உதவிக் கணக்காளராக பதவியேற்று சுமார் நான்கு வருடங்கள் கடமையாற்றிய பின் "திரைகடல் ஓடித் திரவியம் தேடு" எனும் மொழிக்கிணங்க சவூதி நாட்டின் பிரபல கொம்பனியான EAST WEST EXPRESS நிறுவனத்தில் உயர் கணக்காளராக சுமார் நான்கு ஆண்டுகள் கடமையாற்றினார்.

இவர் தனது 26வது வயதில் தனது தந்தையின் ஆத்ம நண்பனும் முன்னாள் சுங்க இலாகா உதவிப் பணிப்பாளருமான திரு.சபாபதி அழகரத்தினம் தம்பதியினரின் மூத்த புதல்வியாகிய கௌரியை பெற்றோர் சம்மதத்துடனும் உறவினர் ஆசியுடனும் திருமணம் புரிந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகிழ்ச்சியான இல்லறத்தின் அடையாளமாக கண்ணிரு மணிகளாக சித்திரா, மயூரி எனும் இரு செல்ல மகள்மாரை பெற்றார். நன் மக்களை பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று சீரும் சிறப்புமாக அவர்களுக்கு கல்விச் செல்வங்களை வழங்கி மூத்த புத்திரி சித்திராவை அவ்வூர் பிரபல சமூக சேவையாளரும் மிகச் சிறந்த விவசாயியும், மாவட்டச் செயலகத்தின் பிரதம இலிகிதருமான பொன்னம்பலம் சுப்பிரமணியம் அவர்களின கடைசி மகனான, டென்மார்க்கில் வசித்து வந்த குகதாசனின் இல்லறக்கிழத்தியாக கையளித்தார். குகதாசன் சித்ராவின் இல்லறப்பேறாக நிலானி எனும் பாசமிகு பேரப்பிள்ளையைக் கண்டு இன்புற்றார். இளைய மகள் மயூராவை இந்தியா பெங்களூர் Garden city College இன் Physiotherapy கற்கை நெறியில் புகுத்தியுள்ளார். Rajiv Gandhi University பரீட்சைகளில் மயூராவின் சிறப்பு பெறுபேறுகள் அறிந்து அகமிக மகிழ்ந்து பூரித்தார்.

பல நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவமும் இயற்கையான திறமையாற்றல்களும் ஒருங்கு சேர கொழும்பு மாநகர் மத்திய சந்தைத்தொகுதியில் Bright Book Centre எனும் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக (பல நூற்றுக் கணக்கான) பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக கல்வி வரையான மாணவர்களுக்கு பயன் தரும் நூல்களை வெளியிட்டு சிறப்புப் பட்டங்கள், பதவிகள் பல பெற்றார். இக்கால கட்டத்தில் புலம் பெயர்ந்த இலண்டன் வாழ் தமிழ் அறிஞர்களின் அழைப்பை ஏற்று இலண்டன் மாநகர் சென்று தாய்மொழிக் கற்கையின் சிறப்புப் பற்றி சிறந்த சிறப்புரை நிகழ்த்தி பல்லோரின் பாராட்டையும் பெற்றார்.

தந்தை வழியில் கொச்சிக்கடை சிவன் கோயிலில் பல ஆன்மீகச் சேவைகள் செய்தார். கோயில் வரும் பக்தர்களின் ஓர் அன்பான நண்பரானார். அர்ச்சகர்களால் போற்றப்படும் ஒரு சிறந்த பக்தரானார்.

சகோதரி சரோஜினி சகோதரன் அம்பிகைபாகனின் பிள்ளைகளுக்கு பாசமிகு மாமாவாக, பெரியப்பாவாக உறவாடி, வழிகாட்டியாக திகழ்ந்தார்.

தனது 54வது பிறந்தநாளைப் பூர்த்தி செய்து இரு நாட்களில் கொடிய புற்றுநோய் வடிவில் காலன் அழைக்கவுள்ளான் என்பதை அறியாது தனது மனைவி மைத்துனர், மாமா மகள்மார், மருமக்கள் பெறாமக்கள், உற்றார் உறவினருடன் செல்லக் கிரந்தம் பேசி தேவார திருவாசக பஜனைகள் பாட இனிதே இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னுத்துரை சக்திவேல் அவர்கள் எழுதிய பல்லாயிரக் கணக்கான ஆக்கங்களில் இறுதியாக அவர் எழுதிய ஆக்கம்

## 1. வெற்றியை அடையும் சிறிய வழி

ஒவ்வொரு மனிதனும் நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளை கற்று அறிதல் வேண்டும். அத்தோடு அதனைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். இத்தகைய இரு முறைகளுமே வெற்றியை அடையும் சிறிய வழி முறையாகும். இதனை ஓர் மனோதத்துவ ஆய்வாக எடுத்துக் கொள்ளலாம்.

நிஜவாழ்க்கையில் வெற்றியை அடையும் நிச்சயமான ஒரே வழி எப்படி சாத்தியமானது என்பதை பார்ப்போம்.

★ ஒவ்வொரு நிரூபிக்கப்பட்ட வெற்றி முறையையும் கற்க வேண்டும்.

★ முடிந்தவரை நிருபிக்கப்பட்ட வெற்றி முறைகளைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

★ உங்கள் வாழ்வின் இலட்சியம் எதுவாயினும் அதை அடைய முடியும்

★ நீங்கள் விரும்பிய மனிதனாக மாறலாம்

★ உங்களுக்கு தேவையானது எதுவாயினும் பெறலாம்.

★ உங்களை நீங்களே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து எந்தவொரு தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் விடை காணலாம்.

★ உங்கள் அமைதியை நிலைப்படுத்தி மற்றவர்களோடு அமைதியாக வாழலாம்.

சக்தி வாய்ந்த நிருபிக்கப்பட்ட வெற்றி முறைகளானது அனைத்து வாழ்க்கைக்கும் எந்தவொரு நல்ல முடிவுக்கும் வழிகாட்டி ஆகும்.

நிருபிக்கப்பட்ட வெற்றி முறைகள் எப்பொழுதும் பயனளிக்குமோ? என நீங்கள் வினாவினால் “ஆம்” என்பதே பதிலாக அமையும். இந்த முறைகளை நீங்கள் தினந்தோறும் விடாப்பிடியாக, உறுதியாக எப்பொழுதும் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். இதனை மிக அழுத்தமாகச் சொல்ல வேண்டும். ஏனெனில் உங்கள் தொழிலை வெற்றிகரமாக செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு.

வாழ்க்கையில் எதை நீங்கள் அடைய விரும்பினாலும் நிருபிக்கப்பட்ட வெற்றி முறை மூலம் அற்புதமான பலாபலனை அடையலாம். நிருபிக்கப்பட்ட வெற்றி முறைக்கு நீங்கள் நுழைகின்ற வேளையில் இரண்டு நிபந்தனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. "முடிவைப்பற்றிய முழுமையான சிந்தனை இருந்தால் நினைத்ததை முடிக்கலாம். பணக்காரனாக வேண்டும் என நினைத்தால் குபேரனாகலாம். படித்தவனாக வேண்டும் என்று கருதுவீர்களானால் பட்டம் பெறலாம். நல்லவனாக இருக்க வேண்டும் என்று விரும்பினால் உத்தமனாக மாறலாம். இவற்றை உண்மையிலே நீங்கள் நினைத்து பார்க்க வேண்டும்.

எதை அடைய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதைப்பற்றி நிச்சயமாக முழுமையான சிந்தனையில் ஈடுபட வேண்டும்.

2. முதல் நிலையில் வெற்றி கண்ட பிறகு எதைச் செய்யவேண்டும் என்பதில் முழுமையான சிந்தனையில் ஈடுபட வேண்டும். அதற்கு எப்போதும் தொடர்ந்து தீவிரமாக நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளை பற்றி முழுமையான சிந்தனை செய்ய வேண்டும். எப்போதும் நிரூபிக்கப்பட்ட வெற்றிமுறைகள் எவ்வாறு வெற்றி அடைகிறது. என்பதும், அவை உங்களுக்கு பலன் தரும் என்பதும் தெட்டத்தெளிவு.

அடிப்படை ஆதார முறைகளை எடுத்துக்கொள்வோம் மாறாத, எங்கும் நிறைந்துள்ள, பரிபூரண சக்திக்கு உட்பட்டு உலகில் எல்லாம் இருக்கிறது. இயங்குகிறது, பலன் அளிக்கிறது. இந்த பிரபஞ்சம் முழுமைக்கும், அந்த அளவிட முடியாத சக்தி ஆதாரம் ஆகின்றது. எல்லையில்லாத வானத்தையும், பல கிரகங்களையும் நிலை நிறுத்தும் சக்தி அது. ஏன்? உங்கள் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கட்டுப்படுத்த முடியாதா?

உதாரணத்தைப் பார்ப்போமானால் யாவும் புரியும்.

1. புவி ஈர்ப்பு சக்தி, காரண காரிய நிலை போன்ற எண்ணற்ற பௌதிக விதிகளைச் சொல்லலாம்.

2. அது போன்று மனம் சம்பந்தப்பட்ட விதிகளும் உண்டு, உங்கள் மனம், உள் மனம், இவைகளுள் பிரபஞ்சத்தின் மனதோடு தொடர்பு கொள்ள முடியும். அவ்வேளையிலே அளவில்லாத அற்புத சக்திகள் உங்களுக்கு கிடைக்கும். மனச்சக்தியைப் பயன்படுத்தி எண்ணங்களை நிச்சயமாகவே நடத்திக் காட்டலாம். இவைகளை பின்வரும் பகுதிகளில் அறிய முடியும்.

3. உணர்ச்சி சம்பந்தப்பட்ட விதிகளும் உண்டு. கவலை, கோபம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகளால் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

4. இறைவன் எல்லையற்ற பரம்பொருள், நித்திய சத்தியம் போன்றவற்றோடு தொடர்பு கொள்ளும் ஆன்மீக விதிகளும் உண்டு. மிகவும் துல்லியமாக நடைபெறும் நிகழ்ச்சிகள் எண்ணற்ற யுகங்களாக நிகழும் இந்த பிரபஞ்ச காரியங்கள் மாறாத விதிகளுக்கு உட்பட்டன என்பது புரிகிறது. பிரபஞ்சங்களை ஆராய்வது நோக்கன்று அதை ஓரளவு புரிந்து கொள்ளுதலே எம் நோக்கம். அதாவது

1. மாறாத பரிபூரணசக்தி இருக்கிறது.

2. அந்த சக்தியுடன் தொடர்புபட்ட நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள் பரிந்துரைக்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் மிகக் கடினமானதோ, இரகசியமானதோ, சிக்கலானதோ ஒன்றும் இல்லை. நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளானவை மிகவும் சுலபமானவை, தெளிவானவை, சுருக்கமானவை, எவராலும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் அமைந்துள்ளன அவற்றினை பரிசீலித்து நீங்களே பயன்படுத்தி வெற்றிகரமான பலனை அடைய வேண்டும் என்பதனால் இங்கு அவை படிமுறைப்படி தரப்படுகின்றன.

1. உங்கள் வாழ்வின் இலட்சியம் எதுவாயினும் அடையலாம்.

2. நீங்கள் விரும்பிய மனிதனாக மாறலாம்.

3. உங்களுக்கு தேவையானது எதுவானாலும் பெறலாம்.

4. மக்கள் தொடர்பு பிரச்சனைகளுக்கு விடை காணலாம்.

5. உங்களது எந்த தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் விடை காணலாம்.

6. உள்மன அமைதியைப் பெற்று நிலைநிறுத்தி நீங்களும் மற்றவர்களோடு அமைதியாக வாழலாம்.

மேற்கூறிய அனைத்தையும் நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளைப் பயன்படுத்தி நீங்கள் அன்றாட வாழ்வில் பலன் பெறலாம். இவ்வழியில் உங்கள் வாழ்வின் இலட்சியத்தை அடையலாம். உங்களின் தற்போதைய நிலை எதுவாயினும் உங்கள் வாழ்க்கையின் நிரூபிக்கப்பட்ட வெற்றியை அடைய முடியும்.

உங்கள் இலட்சியம் மிகவும் உயர்வானதாகவும் ஊக்கம் அளிக்க கூடியதாகவும் இருத்தல் வேண்டும். கஸ்டங்களை வெற்றி கொள்வதற்கு கடினமாக உழைத்துக் கொள்வதற்கான தூண்டுதலும் தேவையும் அவசியம். சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அதிக முயற்சி தேவை.

உங்கள் வாழ்க்கையின் இலட்சியங்கள் உயர்ந்தவையாகவும், உயர்ச்சியளிக்க கூடியவையாகவும் இருத்தல் வேண்டும். எனவே உயர்தரமான இலட்சியத்துடன் கூடிய எண்ணங்கள் உங்களின் உள் மனதில் பதிய வேண்டும் அத்தகைய உயர்தர எண்ணங்கள் தொடர்ந்து தொடர்ச்சியாக எண்ணப்பட வேண்டும். அவ்வாறு தொடர்ச்சியாக எண்ணப்படும் எண்ணங்கள் வெற்றியை அளிக்கும்.

எமக்கு உரிய எண்ணம் உயர்வானதாகவும் வெற்றி கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். உள் மனதிற்கு தொடர்ந்து கட்டளை இடுதல் மூலம் பரிபூரணமான வெற்றியை அடைய முடியும்.

உள் மனதிற்கு நீங்கள் இடும் கட்டளையானது குறைந்தது மூன்று சொற்களை கொண்டதாகவோ எட்டு சொற்களுக்கு மேற்படாது இருக்க கூடிய வகையில் அமைந்து இருத்தல் வேண்டும்.

நீங்கள் வாழ்க்கையில் செல்வாக்குள்ளவன் ஆகவும் உங்களுடைய சொற்களை எவரும் மதிக்க வேண்டும். எனவே நீங்கள் ஓர் உன்னத இடத்தில் இருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உங்கள் கட்டளையானது "நான் எல்லாவற்றிலும் வெற்றி பெற வேண்டும்" என்பதாக அமைதல் வேண்டும். இதனை தொடர் கட்டளையாக உங்கள் உள் மனதிற்கு தெரிவிப்பது முக்கியமானதாகும்.

தொடர்ந்து ஒவ்வொரு நாளும் உங்கள் கட்டளைகளை சொல்ல தொடங்குவதுடன் அதற்கான முயற்சியை செய்ய ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுது உங்களது செயற்பாடு வெற்றிகரமாக அமையும். உங்கள் உயர்ந்த இலட்சியம் "நான் எல்லாவற்றிலும் வெற்றி பெற வேண்டும் என்பதை நிலை நிறுத்த தினமும் இருபது நிமிடம் செலவழிக்க வேண்டும். அதற்கென சில வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளது.

1. அமைதியான ஜெப முறை

2. முடி கயிறு முறை

3. மந்திர காசு முறை

5. மனக்காட்சி முறை

6. திருப்பி வரும் அட்டை முறை

7. சுயப்பிரமை முறை

மேற்காணும் முறைகளில் ஏதாவதொன்றை பின்பற்றுதல் வேண்டும்.

உங்களின் கட்டளைகளை நிலை நிறுத்தும் போது எந்த வேளையிலாவது, உடை அணியும் போது, குளிக்கும் போது, முகச்சவரம் செய்யும் போது, எப்போது நேரம் கிடைக்கின்றதோ அப்போது எல்லாம் கட்டளைகளை தொடர்ந்து தியானிக்க வேண்டும்.

ஒரு மனிதனால் எப்படிப்பட்ட வேலையிருந்தாலும் பயண நேரம், காத்திருக்கும் நேரம் போன்ற வேளைகளில் உங்கள் இலட்சிய கட்டளைகளை திரும்ப திரும்ப எண்ணுவதோடு அதோடு ஒட்டிய பல வகையான கட்டளைகளையும் எண்ண முடியும். அவ் எண்ணங்களானது புதியனவாகவும் எழுச்சி தரக்கூடியதாகவும் உங்கள் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். உங்கள் கட்டளைகளைப் பொறுத்து உங்கள் உள்மனம் வாய்ப்புகளை ஏற்படுத்தும். அப்போது சந்தர்ப்பங்களையும், நிலைகளையும், தொடர்புகளையும் பயன்படுத்தி உங்கள் இலட்சியத்திற்கு உறுதுணையாக எடுத்துக் கொள்ளவும்.

இதைச்செய்வது மூலம் நீங்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்கும் அதன் மூலம் வாழ்வில் அற்புதமான ஆச்சர்யமான நிகழ்வுகள் கூட ஏற்பட வாய்ப்புண்டு.

உங்கள் வாழ்வின் இலட்சிய நோக்கமானது "நான் எல்லாவற்றிலும் வெற்றி பெற வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெறுவதே உங்களது குறிக்கோளாக இருக்கின்ற வேலையில் அது பற்றியே சிந்தனையாக இருக்க வேண்டும். எனவே தான் உள்மனமானது உங்கள் பலம் பொருந்திய கட்டளையை பதிவு செய்கின்றது. இதன் மூலம் உற்சாகமான சக்தி வாய்ந்த கட்டளைகளை உங்கள் வாழ்க்கையின் போக்கை நிட்சயிக்கும்.

உங்கள் உள்மனமானது உணர்ச்சியற்றது. அதற்கு வேலை செய்ய மட்டுமே தெரியும். உத்தரவுகளுக்கு ஏற்றவாறு அது உற்பத்தி செய்கிறது. அதன் மூலம் உங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்து மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

"நான் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவேன்" எனும் இலட்சிய நோக்கு வாழ்க்கையின் இலட்சியங்களுக்கு நோக்கம் பற்றிய கட்டளைகளை இடுகின்றது. எனவே இதனை உதாரணமாகக் கொண்டு தீவிரமாக உள்மனதுக்கு உத்தரவுகளை வழங்குங்கள். குளிக்கும் போதோ உடை உடுக்கும் போதோ சாப்பிடும் போதோ எப்பொழுது முடியுமோ அப்போதெல்லாம் தொடர்ந்து உங்கள் இலட்சியத்தை சொல்லிக்கொண்டே இருங்கள்.

ஒருதடவை உங்கள் இலட்சியத்தை உன் மனதில் சிந்திக்கும் போது ஒரு நிமிடம் பிடிக்கும் எனவே இப்படி நாள் தோறும் ஆயிரம் தடவைக்கு மேல் உங்கள் இலட்சியம் உள் மனச் சிந்தையாக இருந்து கொண்டே இருக்க வேண்டும். நோக்கம் பற்றிய கட்டளையை கூறிக்கொண்டு இருக்கும் வேளை அவை தீவிரமான படக்காட்சிகளை உருவாக்கும். உங்களின் வெற்றிக்கு அதுவே வழிவகுக்கும் எல்லாவற்றிலும் வெற்றி காண்பதே உமது இலட்சிய நோக்கம் அதனை நோக்கியே உங்கள் கட்டளையும் இலட்சியமும் அமைகின்றது.

இவ் எண்ணங்கள் தீர்க்கமான மனக்காட்சிகளாகி உங்கள் சிந்தனையை வளப்படுத்தும். இதற்காகவே நீங்கள் தீவிரமாக நாம் மேலே கூறியவாறு சிந்திக்க வேண்டும் அவை உங்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் இதன் மூலம் உங்களின் உயர்தர இலட்சியங்கள் உள்மனதில் வளர்ப்பதோடு வெற்றிக்கு இட்டுச் செல்லும் மார்க்கமாகவும் அமையும்.

எண்ணங்கள் என்பன கற்பனா சக்தியின் உருவாக எம் மனதினில் தோன்றுகின்றன. அவற்றினை பயன்படுத்தி அவற்றை வளப்படுத்தும் கலையும் மனோதத்துவ கலையில் முக்கியமானது ஆகும். உங்கள் வாழ்வை கட்டுப்படுத்தி வரும் காலத்தை திட்டமிட்ட முறையில் முன்னேற்றம் செய்வதற்கும் எண்ணங்களால் தீர்மானிக்கும் நிரூபிக்கப்பட்ட வெற்றி முறையின் ஆரம்ப நிலையாகும்.

எண்ணங்கள் எண்ணப்படும் போது விருப்புடன் எண்ணப்படுவதனால் அவை வெற்றியை பெற்றுத்தரும். நீங்கள் எண்ணுவது வீடாகவோ, அல்லது வாகனம் வாங்குவதாகவோ இருக்கலாம் அப்படி எண்ணும் அவை உங்கள் மனத்திரையில் தோன்றும் மனத்திரையில் காண்பவற்றை நீங்கள் முடிவு செய்வீர்களானால் அவை பயனுள்ளதாக இருக்கும்.

மனத்திரையில் நீங்கள் தீர்மானமாக எடுப்பது திரும்ப திரும்ப உங்கள் காட்சிகளாக மாறும். இவை உள்மன உந்தலாக நிலை நிறுத்தப்படும். இதுவே வாழ்வின் வழி காட்டியாகவும் மனக்காட்சியாகவும் நடைமுறையில் காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நினைப்பது போலவே மனிதன் இருக்கின்றான்" என்ற பைபிளின் கருத்து ஆன்மீக உண்மை மனோதத்துவ மெய்ப்பொருளாகின்றது. இதுவே இயல்பான நடைமுறை, சந்தேகமில்லாமல் நீங்கள் நினைப்பது போல நீங்கள் மாறுகிறீர்கள், அதாவது மனக்காட்சி போலவே மாறுகிறீர்கள். உங்கள் எண்ணங்களே மனக்காட்சிகளாக மாறுவதோடு மனக்காட்சியாகவும் பரிமாணிக்கின்றது.

மனக்காட்சிகளைக் கட்டுப்படுத்தி

1. உங்கள் வாழ்வின் இலட்சியங்களை அடைவது எப்படி?

2. விருப்பம் போல் மாறுவது எப்படி?

3. தேவைகளை அடைவது எப்படி?

இவற்றினை அடைவதற்கு எண்ணங்களை வளப்படுத்தல் வேண்டும். உங்கள் உள்மனதில் காட்சிகளை ஒழுங்கு படுத்துதல் வேண்டும். உங்களுக்கு தேவையான வற்றை நீங்கள் மனத்திரைப்படமாகத் தொடர்ந்து காண வேண்டும். இல்லாவிடின் நோக்கம் தவறிவிடும். உங்கள் தேவையை மனக்காட்சி செய்யாவிட்டால் அது கிடையாது. வரைபடம் இல்லாமல் வீடு கட்ட முடியாது, போக வேண்டிய ஊர் தெரியாமல் அங்கு செல்ல முடியாது, உங்களுக்கு என்ன தேவையென்று அறியாமல் எதையும் அடைய முடியாது.

உங்கள் வாழ்வின் இலட்சியத்தைப்பற்றி எண்ணக்கரு கொள்ளாமல் இருப்பதனால் அது திசை தெரியாது அலைந்து கொண்டிருக்கும். எனவே முதலில் எண்ணங்கள் உங்கள் மனதில் தோற்றம் அடைய வேண்டும். அதுவே உங்கள் மனத்திரையாக கற்பனா சக்தி மூலம் வளர்ச்சி அடைய வேண்டும்.

ஓர் எண்ணம் இன்னொரு கருத்தாக உருவாகின்றது. ஒரு யோசனை அதனோடு தொடர்புடைய இன்னொரு கருத்துக்கு இட்டு செல்கின்றது. முன்பு சொன்னது போலவே உங்கள் எண்ணங்களே மனக்காட்சிகளாகின்றன. மனக்காட்சிகள் தொடர்ந்து கோவையாக நிகழும் போது மனத்திரைப்படமாக மாறுகிறது. காட்சிகள் தொடர்ந்து தீர்மானமாய் ஆழ்ந்து சிந்தனை செய்யும் போது உள்மனம் கிளர்ந்து எழுகின்றது. உங்கள் மனக் காட்சிகள் வாழ்வில் நடக்க ஆரம்பிக்கின்றன.

நமது எண்ணங்கள் போலவே வாழ்க்கை அமைகின்றது என்கிறார் அறிஞர் மார்கஸ் அரேலியஸ். மக்கள் தங்கள் கருத்துகளைப் பற்றி மனக்காட்சி மூலம் காண்பதை - நடைமுறையாக்குகிறார்கள் என்கின்றனர் மனோதத்துவ நிபுணர்கள்.

இதையே வரலாற்று நிகழ்ச்சிகளும் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் நிரூபிக்கின்றன. இது சீர்தன்மை விதி எனப்படும்.

ஒரு எண்ணக்கருத்தை காட்சியில் காணாமல் தொடர் காட்சிகளாக திரைப்படம் போல் கற்பனை செய்யுங்கள். நிலையான காட்சியாகக் கருதாமல் உங்கள் எண்ணத் திரையை கண்டு களியுங்கள். அதுவே சீரிய வாழ்க்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபிக்கப்பட்ட வெற்றி முறையில் கற்றவற்றுக் கேற்ற வகையில் விருப்பத்தை அடையும் வகையில் நினைத்து பாருங்கள்.

உங்களை எப்படி நீங்கள் கருதுகிறீர்களோ அப்படியே வாழ்வில் வெற்றியும் வசந்தமும் தேடி வரும் என்பதே சீர்தன்மை விதியாகும்.

ஏழ்மையை நினைத்தால் ஏழையாவீர்கள், பணத்தை நினைத்தால் ஜெயம் அடைவீர்கள், வெற்றியை எண்ணினால் ஜெயிப்பீர்கள். நல்ல எண்ணங்கள் எண்ணப்படும் போது நன்மையே நிகழும், அன்பு செலுத்தினால் நேசிக்கப்படுவீர்கள். அது அப்படித்தான் சீர்த்தன்மை விதி நினைப்பது போலவே மனிதன் மாறுகிறான்.

மனோ சக்தி மூன்று நிலைகளில் இயங்குகிறது. அந்த மூன்று சக்திகளையும் தனித்தனியே பார்ப்போம். இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. இவை மனதின் மூன்று பகுதிகள்.

**1. அறிவு சார்ந்த பகுதி:**

இது மூளை, இதனை சோதிக்க சோதனை செய்ய முடியும். மனோதத்துவ பரிசோதனை செய்ய முடியும். பிரக்ஞை உள்ள இந்தப் பகுதி மூலமே சிந்தனை செய்கிறீர்கள். இந்த அறிவுப் பகுதியே உள் மனத்திரையில் காட்சிகளை உருவாக்கும், உங்கள் மனக்காட்சிகளை நீங்களே உண்டு பண்ணி நீங்களே இயக்க முடியும்.

**2. உள் மனம்:**

அறிவு சார்ந்த பகுதிக்கும் கட்டுப்படாமல் இயங்குவது உள்மனமாகும். ஆனால் நினைக்கும் மனமான அறிவுப் பகுதியால் காட்சிகளை காணவும் உள் மனத்தை ஓரளவு ஒழுங்குப் படுத்தவும் முடியும். உங்கள் உள் மனதின் செயற்பாடுகள் சிலவற்றைப் பார்ப்போம். நீங்கள் உயிர் வாழத் தேவையான இருதய துடிப்பு, சுவாசம், ஜீரணம் போன்ற எல்லாவற்றையும் உங்கள் கட்டுக்குள் வைத்திருக்கிறது.

உள்மனம் என்ற உன்னத சக்தியை இயற்கை எமக்கு அளித்துள்ளது. மனிதனின் அளவிட முடியாத ஆனந்த நிலைக்கும் உள்மனம் அற்புத சக்தியாக விளங்குகிறது. எல்லையில்லா அறிவுக்கும் சர்வ வல்லமை பொருந்திய சக்திக்கும் இடையே உள்ள பாலம் இதனை உணர்ந்து மனிதன் செயல்பட வேண்டும். எந்த தேவைக்கும் எப்போதும் தேவைப்படும் சக்திக்கும் எல்லாத் தொடர்புகட்கும் உள்மனம் அவசியம்.

உள் மனமானது உங்களின் அறிவுப் பகுதி எதையாவது மறந்து போனாலும் உள் மனதில் தோன்றிய காட்சிகள் பதிவாகி ஞாபக சக்தியாக நிலை பெற்றிருக்கும். ஆகவே தான் நீங்கள் மறந்து போன குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் கூட மனோதத்துவியாளரால் சோதனை மூலம் வெளிக்கொணர முடிகிறது. உங்கள் உள் மனதில் பதிந்த கடந்த கால நிகழ்ச்சிகள் தற்போதைய காட்சிகள் மனக்காட்சி தீவிரத்தை பொறுத்தே அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் மனமானது நியாயம் பார்ப்பதில்லை. நீங்கள் காணும் மனக்காட்சிகளை எவ்வித தீர்மானமும் இல்லாமல் ஏற்கிறது. இதன் மூலமே உங்கள் வாழ்க்கை அமைகிறது. மனக்காட்சியானது ஆரம்பத்திலிருந்தே செம்மைப்படுத்தியும் உங்கள் வாழ்க்கையை மேம்பட செய்யலாம்.

**3. ஆனந்த நிலை மனம்:**

இந்த பிரபஞ்சத்திற்கு எல்லை காணமுடியுமா? ஆரம்பமும் முடிவும் இல்லாத காலத்தை அளக்க முடியுமா? எல்லா சக்தியும், அறிவும், எல்லாம் ஒன்று என்று சொல்லி ஒரு வரையறைக்குள் கொண்டு வர முடியுமா?

ஆனந்தம் என்பது முடிவில்லாத - எல்லாம் சேர்ந்த ஒன்று. நாம் கேட்டு அனுபவித்த எல்லாவற்றையும் பெற வேண்டும் என்ற தீவிர விருப்பங்கள், அதை அடையும் சாதனங்கள் நம் எல்லோரையும் ஒன்று சேர்த்து தான் ஆனந்த நிலை. மனம் சுருங்கச் சொல்ல வேண்டுமானால் மனம் மூன்று நிலையில் இயங்குகிறது, அந்த மனக்காட்சிகளே வாழ்க்கையாகின்றன.

வாழ்க்கை நிஜமானது, வாழ்க்கையில் எண்ணங்கள் உயர்ந்தது எனவே எண்ணங்களை நிர்ணயிக்கும் போது வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாக எண்ண வேண்டும்.

எண்ணங்கள் நிர்ணயிக்கும் வேளையில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு மிகையாக உணர்ச்சி வசப்பட்டு மிகையான மதிப்பு கொடுத்தல் உயர் வாழ்க்கையிலிருந்து நழுவ வழிவகுக்கும். எனவே எண்ணங்களுக்கு உணர்ச்சி வசப்படக் கூடாது. ஒவ்வொரு வெற்றியும் அடைய முடியும் என்பதும் உங்கள் இலட்சிய பாதையின் எண்ணமாக இருக்க வேண்டும்.

இதே போன்று எண்ணங்கள் தோல்வி அடையும் போது மீள முடியாத ஆபத்து எனக் கருதக் கூடாது. உங்கள் வாழ்க்கையில் தோல்வி தடைக்கல்லாக இருந்த போதும் அதை எண்ணி துவளுதல் கூடாது.

இயற்கையான நிகழ்ச்சி போல எண்ணங்கள் அமையும். எனவே வாழ்க்கையின் நிகழ்ச்சிகளும் இயற்கை போன்ற அமைப்பேயாகும். எனவே **நடந்ததை ஏற்றுக் கொள்ளுங்கள், இவ்வாறு ஏற்றுக் கொள்ளும் எண்ணமானது எந்த துயரத்தின் விளைவையும் ஏற்றுக் கொள்ளும், வாழ்க்கையை வளப்படுத்தும் சிந்தனைகளை மனதில் ஏற்படுத்தி எண்ணங்களை சீர் செய்ய உதவும்.**

**விதி ஒரு கதவைச் சாத்தும் போது நம்பிக்கையான எண்ணம் மற்றொரு கதவைத் திறக்கிறது எனவே திறந்த கதவை நாடி எண்ணங்களை நிர்ணயிக்க வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு தினக்குரல் 01 ஏப்ரல் 2001.

# மாணவர்களுக்கு கல்விக்கனி கொடுக்கும் 'பிறைட்'

**'பிறைட்' புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் தலைவர் பொன். சக்திவேலுடன் ஒரு நேர்முகம்**



-எஸ்.செபரட்ணம்-

அன்ன சத்திரங்கள் ஆயிரம் வேண்டாம். ஆலயங்கள் பதினாயிரமும் வேண்டாம். ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே போதும் என்றான் மகாகவி. ஏழைக்கு எழுத்தறிவிக்கிறாரோ இல்லையோ! கடந்த 13 வருடங்களாக, கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பாட நூல்களை வெளியிடுவதிலேயே தனது காலத்தைக் கழித்து வருகிறார் பொன்னுத்துரை சக்திவேல்.

Bright என்ற ஆங்கில வார்த்தைக்கு ஒளிர்கிற, ஒளிமிக்க, பளபளப்பான, விளக்கமான, முனைப்பான, தெளிந்த, அறிவுக்கூர்மையான, முன்னறிவுடைய, புகழ் சான்ற, சிறப்பு வாய்ந்த என்ற பொருள்கள் உண்டு. இத்தனை வார்த்தைகளையும் உள்ளடக்கி Bright Book Centre மிளிர்கிறது என்றால் மிகையாகாது.

இந்த நிறுவனத்தின் எல்லாமும் ஆக இருக்கும் சக்திவேலை ஒரு மாலைப்பொழுதில் சந்தித்து அவரது பதிப்பு செயற்பாடுகள் பற்றிக் கேட்டோம்.

இந்த 13 வருடங்களிலே 200 க்கும் மேற்பட்ட பாடநூல்களைப் பதித்திருக்கிறார். ''எமது கல்வி நிறுவனம் கடந்த 13 வருடங்களாக கல்விச்சேவை ஆற்றி வருவதோடு மாணவ சமுதாயத்திற்கு அவர்களது வகுப்புகளுக்கேற்ற தவணை நூல்களை உடனுக்குடன் வெளியிட்டு வந்துள்ளோம்'' என பெருமிதத்துடன் தெரியப்படுத்தினார்.

**கல்விப்பணியில் ஊன்றி கால்பதித்திருக்கும் தாங்கள், மாணவ மாணவியருக்கு சலுகையளிக்கும் வகையில் எதனையும் சாதித்திருக்கிறீர்களா?**

வருடா வருடம் யுனெஸ்கோ நிறுவனம், தேசிய கல்வி நிறுவனம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து எழுத்தறிவு தினத்தை ஒவ்வொரு வருடமும் ஏற்படுத்தி வருகின்றோம். பத்து நாட்கள் நடைபெறும் இந்த எழுத்தறிவு தினத்தை அறிவொளி சுற்றுலா வாரமாக பிரகடனப்படுத்தி கொழும்பு நகருக்கு மாணவ, மாணவிகளைக் கூட்டி வருமாறு பாடசாலைகளை ஊக்குவித்து, எமது மலிவு சந்தைக்கும், புத்தகக் கண்காட்சிக்கும் வரும் பாடசாலைகளின் நூல் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா பெறுமதியான பாடநூல்களை இலவசமாக வழங்குகிறோம்.

குழந்தைகள் தங்கள் மழலையை மறந்துவிட்டு பேசக்கற்றுக் கொண்டு ஆரம்பக் கல்விக்குள் நுழைகின்ற பொழுது அவர்களுக்குத் தேவையான அடிப்படை நூல்களை எங்கள் நிறுவனம் வெளியிடுகின்றது. 'பாலர் பாலபோதினி', 'பாடலும் குழலும்' ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

**பாடநூல்களைத் தவிர வேறு நூல்கள் வெளியிடுகிறீர்களா?**

ஏன் இல்லை. பாடநூல்களைத் தவிர வேறு துறைகளையும் தொட்டிருக்கிறோம். வெற்றிக்கனி களஞ்சியம் I, வெற்றிக்கனி களஞ்சியம்II, வெற்றிக்கனி களஞ்சியம் III மற்றும் அலிபாபாவும் நாற்பது திருடர்களும், அலாவுதீனும் அற்புத விளக்கும், பாலைவனத்து நரி, தென்னாலி இராமன் கதைகள், ஆசிய விளையாட்டுப் போட்டி, இலங்கை கிரிக்கெட் வளர்ச்சியும் புத்துயிர்ப்பும் போன்ற நூல்களையும் வெளியிட்டிருக்கிறோம்.

**தாங்கள் வெளியிட்ட நூல்களில் அதிக வரவேற்பைப் பெற்ற நூல்கள்?**

எல்லா நூல்களும் மாணவ, மாணவியர்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றவை. ஆனால், Bright இன் வெற்றிப்படி 2000/2001 என்ற பெயரில் பொது அறிவுக் களஞ்சியம் என்ற நூலை க.பொ.த.உயர்தர பொது சாதாரண பரீட்சைக்கு ஏற்ற நூலாக வெளியிட்டிருக்கிறோம். காலம் காலமாக வைத்திருக்கக்கூடிய தகவல் களஞ்சியமான இந்நூல், கிட்டத்தட்ட 500 பக்கங்களைக் கொண்டது. இந்த நூல்.

'இலங்கையில் ஏறத்தாழ எந்த நூற்றாண்டில் ஆரியர்கள் குடியேறினார்கள்' என்ற கேள்வியில் ஆரம்பித்து சோழரின் ஆட்சியில் தலைநகராக விளங்கியது எது? என்ற கேள்வி வரை சுமார் 300 க்கும் மேற்பட்ட கேள்விகள் இலங்கை வரலாறு பற்றி மட்டுமே இந்நூலில் அடங்கியிருக்கின்றன. இது தவிர விஞ்ஞான கண்டுபிடிப்புகள் பலதும், பத்தும், உலக நாடுகள் பற்றிய விபரங்கள், ஐக்கியநாடுகள் சபை, அதனோடு இணைந்த நிறுவனங்கள், அண்டவெளி, ஊடுமண்டலம், சூரிய மண்டலமும் கோள்களும் போன்றவை குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு தினக்குரல் 11 யூன் 2000

# கௌரவ பேராசிரியர்



இலங்கையின் கல்வி வெளியீட்டுத் துறையில் பெரும் பங்களிப்புச் செலுத்தி மாணவர்களுக்கான துணை நூல்கள் நூற்றுக்கும் மேற்பட்டவற்றை வெளியிட்டு வைத்த பிரைட் கல்வி நிலைய அதிபர் பொன் சக்திவேலுக்கு ஜப்பானிய தேசிய பல்கலைக்கழகத்தால் கௌரவ பேராசிரியர் பட்டம் வழங்கப்படுகிறது.

இது தொடர்பான வைபவம் கொழும்பு 3 இல் அமைந்துள்ள ஜப்பானிய கலாசார நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பிரதம அதிதிகளாக இலங்கைக்கான மாலைதீவு தூதுவர் அப்துல் அஸீஸ் யூசுப் மற்றும் முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

அமைச்சர்கள், கல்விமான்கள், இராஜ தந்திரிகள் உட்பட மேலும் பலரும் இந்த வைபவத்தில் பங்கேற்கவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DAILY NEWS 7/2/2007 AND 14/2 2007

# Hinduism for society

**Prof. Pon Sakthivel**

**HISTORY:** Hinduism is world's oldest living religion, over 8,500 years old. The Rig Veda mentions a winter solstice in 6500 BCE, confirming the existence of an advanced civilisation much earlier. It is also the most colorants, most resilient mot peace-loving of all religions. Its roots originates in the vast Indian subcontinent, in the Indus Valley which had 300 advanced settlements as early as 5,000 BCE. The people living around the river Sindhu (Indus) came to be known as the Hindus. Also known as the Aryans, these people were local inhabitants and not foreign invaders.

There is no one single founder. Through penance and prayers, intuition and introspection. Ancient seers gained the ultimate experience of God. These collective experiences formed the foundation of the Vedic civilisation from which emerged the Hindu Dharma.

In those ancient days even China had not worked it all out practically, and even Egypt inherited much of it sacred knowledge from India. Subsequently to pass it on to Greece and then Europe still sunk in sleep. India held the palm of civilisation and soon spread it all around her.

By 5,000 BCE a sophisticated civilisation flourished in India with over 300 settlements in a belt extending 1,520 kms. Villages of mud brick houses were being built. The formative phases culminate into a cultural uniformity and single province - the Harappan culture. The Harappan town by 3,000 BCE were well planned with Citadels and walls laid out in a grid fashion. The houses had rooms and compartments with one or two courtyards, a stair leading often to two storeys. In some places 80 feet wide the street and lanes had drains roofed in brick with regular inspection holes.

Individual bathrooms and lavatories were impressively drained into a larger system. The amazing thing is that all construction was done with baked bricks which were of a standard size - 24 x 14 x 7 cms found throughout the Indus Valley at this period. The larger cities like Harappa and Moherya-Daro probably sheltered 20 to 25 thousand inhabitants.

What makes the Hindus special is that they honour the whole of creation, see the presence of God in everything to them there are no heathens or enemies. Everyone has right to evolve spiritually and shall, at some time realise the truth.

Hinduism is liberal! it does not set man a limit of one life, but offers many lives. At the same time, Hinduism is strict, it makes man feel responsible for every action he performs through the law of *Karma*.

Some of the most startling discoveries of the world have been the great contributions of Hinduism to our society. Hinduism is not narrow nor fanatic. It is broad-minded and has encouraged a high level of social and scientific advancement.

The Vedas transcend recorded history, and have not been created by any moral. The vedas are the eternal truths revealed by God to the Great Seers of India.

*(To be continued)*

**Prof. Pon Sakthivel**

**HISTORY:** For generations, they were passed on through experience and word of mouth until documented. There are four Vedas: 1) Rig Veda has 10,552 mantras. 2) Yajur Veda has 1,975 mantras. 3) Sam Veda has 1,875 mantras. 4) Atharva Veda has 5,987 mantras. Veda means knowledge. Two types of knowledge are necessary to perfect human life. 1) Apara Vidya: Knowledge of the world. 2) Para Vidya: Knowledge of the Divine.

Hence, the Vedas are the reservoir of all wisdom of the universe. They contain the knowledge of art, music, linguistics, literature, economics, religion, weaponry, space science, geometry, logic, technology, hypnotism, mathematics, philosophy, ritual, health and long life, magic, medicine, architecture, aeronautics, spiritual wisdom.

Thoreau (American Thinker) said, "whenever I have read any part of the Vedas. I have felt that some unearthly and unknown light illuminated me.

In the great teaching of the Vedas, there is no touch of sectarianism. It is of all ages, climes and nationalities and is the royal road for the attainment of the great knowledge.




When I am at it, I feel that I am under the spangled heavens of a summer night.

**World's first university around 2,700 years ago**

As early as 700 BCE there existed a giant university at Takshashila, located in north-west region of India. Not only Indians but students from Babylonia, Greece, Syria, Arabia and China came to study.

India invented the zero, without which there would be no binary system. No computers, counting would be clumsy and cumbersome. The earliest record date, an inscription of zero on Sankheda copper plate was found in Gujarat, India (585-586 CE).

In Brahama - Phula - Siddhanta of Brahmagupta, the zero is lucidly explained and was rendered into Arabic books around 770 CE. From these it was carried to Europe in the 8th century. However, the concept of zero is referred to as Shunya in the early Sanskrit texts of 4th century BCE and clearly explained in Pingalas Chandah Sutra of the 2nd century.

**Plastic surgery in India 2600 years ago**

Shushrula known as the father of surgery, practised his skill as early as 600 BCE. He used cheek skin to perform plastic surgery to restore or reshape the nose, ears and lips with incredible results. Modern plastic surgery acknowledges his contributions by calling this methods as the Indian method. 125 types of surgical instruments could cut a hair longitudinally.**Concluded**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

பொன்னுத்துரை சக்திவேல்

அவர்கள் பாலர் வகுப்பு முதல்
பல்கலைக்கழக கல்வி வரை
படைத்த பல்வேறு கலைக்
களஞ்சியங்களில் சிறுவர் நலன்
கருதி வெளியிட்ட

# பல்வேறு

# கட்டுரைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.10.2002

# முன்னுரை

6, 7, 8 மாணவர்களுக்கான கட்டுரை மஞ்சரியில் மாணவர்களுக்கு தேவையான எழுபத்தியேழு கட்டுரைகளை தொகுத்து வழங்கியுள்ளோம்.

இன்றைய நவீன காலத்திற்கு ஏற்றமுறையில் பாடசாலைகள் தோறும் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் எனும் நோக்குகளை பிரதிபலிக்க கூடியதாகவும், மாணவரிடையே கட்டுரை எழுதும் திறனை வளர்க்கவும் இந்நூல் உதவும்.

மாணவர்கள் இக்கட்டுரை மஞ்சரி மூலம் அதிக பயன் பெற வேண்டும் எனும் நோக்கோடு பல்வேறு சுயசரிதை கட்டுரைகளும், அறிவியல் கட்டுரைகளும் விண்ணப்பங்களும், கடிதங்களும், இணைத்துள்ளோம்.

மாணவர்கள் பாடசாலையில் கட்டுரை எழுதப் பழகவும், கட்டுரைகளை அறிந்து கொள்ளவும் ஒரு துணை நூலாக ஏற்று செயற்பட முடியும்.

இதனை ஆசிரியப் பெருந்தகைகளும், மாணவர்களும் மனம் உவர்ந்து ஏற்பார்களாக.

நன்றி

பேராசிரியர். பொன். சக்திவேல்

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S - 27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P-434770

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தைத்திருநாள் | 1 |
| 2. | சூரியோதயம் | 2 |
| 3. | நான் வளர்க்கும் செல்லப்பிராணி | 3 |
| 4. | எனக்கு சிறகிருந்தால் | 4 |
| 5. | தேர்த்திருவிழா | 5 |
| 6. | சுத்தம் சுகம் தரும் | 6 |
| 7. | அழியாத செல்வம் கல்வி | 6 |
| 8. | நான் கண்ட கனவு | 8 |
| 9. | ஐயம் இட்டு உண் | 9 |
| 10. | கிழிந்த புடவை - சுயசரிதை | 10 |
| 11. | பாடசாலை விளையாட்டுப் போட்டி | 11 |
| 12. | நான் கண்ட விபத்து | 13 |
| 13. | எனது ஊர் | 13 |
| 14. | பௌர்ணமி நாள் | 14 |
| 15. | எனது நண்பன் | 15 |
| 16. | மதியால் கிடைத்த வெகுமதி | 16 |
| 17. | மழைநாள் | 18 |
| 18. | உழவுத் தொழில் | 19 |
| 19. | நன்றி மறவேல் | 20 |
| 20. | எமது சூழலைப் பாதுகாப்போம் | 21 |
| 21. | பாடசாலைக்கச் சென்ற முதல் நாள் | 22 |
| 22. | ஆலயம் தொழுவது சாலவும் நன்று | 24 |
| 23. | எங்கள் வீட்டில் நடந்த ஓர் சம்பவம் | 25 |
| 24. | எனது கிராமம் | 26 |
| 25. | வானொலியின் பயன்கள் | 27 |
| 26. | எனது பேனா | 28 |
| 27. | விஞ்ஞான வளர்ச்சியின் பயன்க்ள் | 30 |
| 28. | பாடசாலை வாரம் | 31 |
| 29. | சிறுதுளி பெரு வெள்ளம் | 32 |
| 30. | சேர். பொன். இராமநாதன் | 34 |
| 31. | மகாகவி பாரதியார் பாடல்கள் | 35 |
| 32. | ஔவைப் பாட்டி | 36 |
| 33. | நான் கண்ட மறக்க முடியாத சம்பவம் | 37 |
| 34. | நான் விரும்பும் தொழில் | 38 |
| 35. | நான் கேட்ட அறிவுரை | 39 |
| 36. | நான் சென்ற கல்விச் சுற்றுலா | 39 |
| 37. | எனது பாடசாலை | 41 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 38. | எனது நாடு | 41 |
| 39. | எனது பொழுது போக்கு | 42 |
| 40. | எனது குறிக்கோள் | 42 |
| 41. | எனது அன்னை தந்தை | 43 |
| 42. | எனது வீட்டுத் தோட்டம் | 44 |
| 43. | உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் | 44 |
| 44. | ஆசிரியர் | 45 |
| 45. | பேருந்து நடத்துநர் | 46 |
| 46. | தாதி | 46 |
| 47. | நூலகம் | 47 |
| 48. | எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் | 47 |
| 49. | யாதும் ஊரே யாவரும் கேளீர் | 48 |
| 50. | தர்மம் தலைகாக்கும் | 49 |
| 51. | ஆற்றில் போட்டாலும் அளந்து போடு | 50 |
| 52. | மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம் | 50 |
| 53. | மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கலாமா? | 51 |
| 54. | காற்றாங்க ஒழுகு | 52 |
| 55. | சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது | 53 |
| 56. | விளையும் பயிரை முளையில் தெரியும் | 53 |
| 57. | சூரியன் | 54 |
| 58. | தாவரங்கள் | 54 |
| 59. | வியத்தகு விஞ்ஞானம் | 55 |
| 60. | இறைவழிபாடு | 56 |
| 61. | சந்தை நாள் | 57 |
| 62. | புகையிரத நிலையம் | 58 |
| 63. | பேனாவின் சுயசரிதை | 59 |
| 64. | கடிகாரத்தின் சுயசரிதை | 60 |
| 65. | வாழைமரத்தின் சுயசரிதை | 61 |
| 66. | கடையின் சுயசரிதை | 61 |
| 67. | நண்பனுக்கு கடிதம் | 62 |
| 68. | ஆசிரியருககு கடிதம் | 63 |
| 69. | மாமாவிற்கு நன்றி கூறிக் கடிதம் | 64 |
| 70. | விடுமுறையைக்கழித்தவிதம்பற்றி நண்பனுக்குக் கடிதம் | 65 |
| 71. | பாடசாலைக்கு பொருட்காட்சியைப் பார்வையிட வரும்படி நண்பனுக்கு கடிதம் | 66 |
| 72. | பெற்றோரது திருமண நாளுக்கு வாழ்த்துக் கடிதம் | 67 |
| 73. | விண்ணப்பக்கடிதம் | 67 |
| 74. | புதுமனைப் புகுவிழா அழைப்பிதழ் | 68 |
| 75. | அறிவித்தல் | 68 |
| 76. | விளம்பர அறிக்கை | 69 |
| 77. | பத்திரிகைச் செய்தி | 69 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 தைத்திருநாள்

மார்கழிப் பெண் மனமின்றிப் பிரிந்து செல்ல, தைமகள் வந்து பிறந்தாள். தமிழர்கள் மனங்களில் ஆனந்தவெள்ளம் பொங்கி வழிந்தது. ஆனந்த மிகுதியால் தைத்திருமகளை வரவேற்க அவர்கள் செய்யும் கொண்டாட்டங்களும் கோலாகலங்களும் கொஞ்சமல்ல. இவ்வருடம் நடந்து முடிந்த தைப்பொங்கல் திருநாள் நிகழ்வுகள் இன்றும் எனது மனதில் நிறைந்து நிற்கின்றன.

தைத்திருநாள் "உழவர் திருநாள்" , "தைப்பொங்கல்" என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. உழவுத் தொழிலுக்கு உதவி செய்த சூரிய பகவானிற்கு நன்றி செலுத்துவதற்காக தைப்பொங்கல் தமிழ் தை மாதத்தின் முதலாம் திகதியில் கொண்டாடப்படுகின்றது. தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாளே ஊரெங்கும் விண்ணைப் பிளக்கும் பட்டாசுச் சத்தம் ஓயாது கேட்டுக் கொண்டேயிருந்தது. எங்கும் ஒரே குதூகலம்.

தைப்பொங்கல் தினத்தன்று அம்மா அதிகாலையில் எழுந்து வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து மாட்டின் சாணத்தால் முற்றத்தை அழகாக மெழுகிக் கோலமிட்டார். அப்பாவும் நானும் மாவிலைத் தோரணம் கட்டினோம். பிள்ளையார் பிடித்து விளக்கேற்றி அவற்றின் அருகே அடுப்பு வைத்துப்பொங்க ஆயத்தங்கள் செய்தார் அம்மா. தங்கை வண்ண மலர்களைப் பறித்து வந்து அலங்கரித்தாள். எங்கள் வீட்டில் மட்டுமல்லாமல், இந்நிகழ்ச்சிகள் ஊரெங்குமுள்ள தமிழர் இல்லங்களில் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதனைப் பறைசாற்ற பட்டாசு ஒலி விடாது கேட்ட வண்ணமே இருந்தது.

நீர் நிறைந்த புதுப் பானையில் இஞ்சி இலை, மஞ்சள் இலை கட்டி விபூதிப் பொட்டிட்டு அடுப்பில் ஏற்றி பால் விட்டு கொதிக்க வைத்திருந்தார் அம்மா. கொதித்துப் பொங்கிவரும்போது கழுவிச் சுத்தம் செய்து தயாராக வைத்திருந்த அரிசியை அம்மா பானையில் இட்டார். முந்திரிகைப்பருபபு முந்திரிகை வற்றல் என்பவற்றுடன் பொங்கல் நறுமணம் பெறுவதற்காக ஏலக்காயும் இட்டார் அம்மா. நன்கு பொங்கி வந்ததும் முற்றதில் வைத்தே பொங்கலுடன் வெற்றிலை, பாக்கு, பழம், கரும்பு, இளநீர், பால் என்பன சூரியபகவானுக்கு நைவேத்தியம் செய்யப்பட்டன. தேங்காய் உடைத்து, கற்பூரம் ஏற்றி, மலர்கள் தூவி சூரியபகவானுக்கு நன்றி கூறி வணக்கம் செலுத்தினோம். வணக்கம் முடிந்ததும் அப்பா, அம்மா தங்கையுடன் கோவிலுக்குச் சென்றோம்.

கோவிலிலும் பொங்கியிருந்தார்கள். சுவாமி அழகாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது விசேட பூசைகள் நடைபெற்றன. சுவாமியை வணங்கிவிட்டு வீடு வந்து நானும் தங்கையும் அப்பா, அம்மா கால்களில் வீழ்ந்து நமஸ்காரம் செய்தோம். அவர்கள் எம்மை ஆசீர்வதித்தனர்.

அம்மா எம் அனைவருக்கும் பொங்கல் பரிமாறினார். பொங்கல் சுவையாக இருந்தது. மகிழ்வுடன் சுவைத்து உண்டோம். அனைவர் மனதிலும் மகிழ்ச்சியே நிரம்பியிருந்தது. பின்னர் உறவினர் நண்பர்களிற்கு பொங்கல் வழங்கி வாழ்த்துக்களையும் தெரிவித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முழுவதும் ஒரே மகிழ்வாக இருந்தது. இனிக்கும் பொங்கல் போலவே அனைவர் வாழ்வும் இனிக்க வேண்டும்.

**"பொங்கலோ பொங்கல் எனப்**
**பொங்கிடுவோம் நாங்கள்**
**பொங்கிடும் இன்பம் எங்கும் பொங்கிட**
**பொங்கிடும் இடமெல்லாம் மங்களம் தங்கிடப்**
**பொங்கலோ பொங்கல்**
**என்று பொங்கிடுவோம்."**

## 2 சூரியோதயம்.

இருளை விலக்கி உலகிற்கு ஒளிகொடுக்க ஆசைகொண்டு, ஆதவன் மலையிடுக்கு வழியே தலையை வெளியே நீட்டித் தன் பொற்கதிர்களைப் பரப்ப முனைந்தான்.

கிழக்கில் செவ்வானம் வர்ண ஜாலம் காட்டியது. குங்குமமும், சந்தனமும் சேர்த்துக் குழைத்துத் தெளித்து விட்டதுபோல் வானம் முழுவதும் ஒரே வர்ண ஜாலம். இதுவரை இரவிரவாய் கண் சிமிட்டியதால் களைப்படைந்த விண்மீன்கள் ஓய்வெடுப்பதற்காக ஓடி ஒழிந்து கொண்டன. இதனாலே நிலவும் ஓடிப்போய் மேற்திசைவானில் நீந்தத் தொடங்கியது.

கீழ்வானைக் கிழித்துக்கொண்டு பகலவன் புறப்படுவதை அறிந்துகொண்ட குயில்களும், சேவல்களும், குருவிகளும் புள்ளினங்களும் தத்தம் பாசையில் கூவியும், கரைந்தும் சந்தோசத்தில் ஆரவாரித்து வரவேற்புக்கீதம் வாசித்துக்கொண்டிருந்தன. புள்ளினங்களின் பாடல் கேட்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த தாமரை மொட்டுக்கள், ஆதவன் வரவறிந்து சத்தமின்றி கண் விழித்தன. அதுவரை உலகை குளிரின் பிடியில் நடுங்கி ஒடுங்க வைத்திருந்த பனிமுட்டம் பயந்து மறைந்து போனது.

ஆயிரம் கோடி மின்னல்கள் ஒன்று சேர்ந்து திரண்டு மின்னுவதுபோல் ஜெகஜோதியாய், தங்கத்தாம்பாளம் போல், ஒளித்திரளாய் ஒளிவீசிய ஆதவன் மெல்ல மெல்ல மேலெழுந்தான். வானமகள் நெற்றியில் வட்டமாய் ஒரு பொட்டு இட்டுக்கொண்டாள் என எண்ணத்தோன்றியது. அவளது நீல நிற வதனம் நாணத்தால் சிவந்து செந்நிறமானது. இதனைப் பறைசாற்ற இதுவரை ஓரிடத்தில் இருந்து கூவிய குயில்களும் பறவைகளும் பறந்து பறந்து கரைந்து கொண்டிருந்தன. தூங்கும் மனிதனைத் துயில் எழுப்பி இந்தக் கோலாகலத்தைப் பார்க்க வரும்படி பாடலில் கேட்டன. அதை உணர்ந்து கண்விழித்தெழுந்த மக்களது நடமாட்டம் அங்கும் இங்குமாக அதிகரிக்கத் தொடங்கியது. உலகம் உற்சாகம் பெற்றுக்கொண்டது.

உயிர் கொடுக்கவென உதித்து வந்த அந்த ஆதவன் இந்தப் பெருமிதத்தில் மேலும் மேலும் மேலெழுந்து கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 நான் வளர்க்கும் செல்லப்பிராணி

என் செல்லப்பிராணி பஞ்சுத்திரள் உயிர்கொண்டெழுந்து துள்ளித்திரிவது போல், என்னையே எப்போதும் வளைய வரும் வெண்ணிறப் பூனைக்குட்டியாகும். அன்று சுத்தமாய் வெண்மையாய் எந்த மறுவுமற்று இருந்தபோதிலும், அனாதையாய் தெருவோரத்தில் நின்ற அதனைக் கண்டதுமே வீதியை விட்டு நகர எனக்கு மனமே இல்லை. சிறிது நேரம் அதனைப் பார்த்தபடி நின்ற என் மனதில் "இந்தப் பூனைக்குட்டி எனக்குச் சொந்தமாயிருந்தால் இப்படி யாருமற்று தெருவோரத்தில் விட்டுவிடுவேனா?"என்று எண்ணிக்கொண்டேன். இதன் சொந்தக்காரர்கள் யார் என்று சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டேன். யாரும் அருகிலில்லை. மேலும் சிறிது நேரம் அதனைப் பார்த்தபடியே நின்றேன். வேகமாய் வீதியில் வந்தும், போயும் கொண்டிருந்த வாகனங்களைப்பற்றி எந்தவிதமான பயமோ, எண்ணமோ இன்றி துள்ளித் துள்ளி இங்கும் அங்கும் புற்களின் பின்னால் பதுங்கியும் பாய்ந்தும் விளையாடிக்கொண்டிருந்தது. என்னை மறந்து அப்படியே நெடுநேரம் நின்று அதனை ரசித்துக்கொண்டிருந்த நான் நேரம் போவதை உணர்ந்து அவ்விடத்தைவிட்டு விலக மனமின்றி விலகி நடந்தேன். என்ன அதிசயம்! அந்தக் குட்டிப்பூனையும் என் பின்னாலேயே ஓடியும் நடந்தும் வந்து கொண்டிருந்தது. அசையாமல் நின்றேன். என் கால்களில் தன் உடலை தேய்த்து உரசியபடி சுற்றிச் சுற்றி வந்தது. ஓ! நெடுநேரம்

அதனருகில் நின்று விட்டு இப்போ நான் நகர்ந்ததும் தானும் என் பின்னே வருகிறது, என்று உணர்ந்து கொண்டேன். மிக அருகில் என் வீடு இருந்ததால் நான் வீட்டினுள் நுழைய தானும் என்னுடன் நுழைந்து கொண்டது. யாரோ அனாதையாய் தெருவில் விட்டுச்சென்றது அன்றிலிருந்து என் செல்லப்பிராணியாகியது.

அது எனக்கு என்றுமே பிரியமானதாலும், அதனை என்றுமே பிரிய எனக்கு மனமில்லை என்பதாலும் என் செல்லப்பிராணிக்கு "பிரியா" என்று பெயரிட்டேன். என் பிரியாவிற்கு பால் குடிப்பதென்றால் கொள்ளைப் பிரியம். தினமும் பாடசாலைக்குச் செல்லுமுன் நானே ஊட்டிவிடுவேன். நான் பாடசாலை செல்லும்போது வாசல்வரை வந்து என்னை வழியனுப்பிவிட்டு பிரியா கூடத்தினுள் இருக்கும் கதிரைகளில் ஒன்றில் ஏறி உறங்கிவிடும். மதியம் நான் வரும் நேரம் எனக்காக வாசலில் காத்திருக்கும். தொலைவிலேயே என்னைக்கண்டதும் துள்ளிக்கொண்டு ஓடிவந்து என் கால்களை வளைத்துக்கொள்ளும். புத்தகப்பையை தோளில் மாட்டிக் கொண்டு மறுகையில் பிரியாவைக் கையில் எடுத்துக்கொண்டு வீடு வருவேன். வீட்டில் என் அம்மா என்னைக் கண்டதும் "வாடா ராஜா நான் சாப்பாடு போட்டும் சாப்பிடாமல் வாசலில் வந்து உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தது பிரியா" என்பாள். எனக்கு பிரியாவை எண்ணிப் பெருமையாக இருக்கும். பிரியாவுக்கு ஊட்டிவிட்ட பின்பே நான் உண்பேன். தினமும் மாலையில் சிறுபந்து ஒன்றை வைத்து பிரியாவுடன் விளையாடுவேன். பந்து விளையாடுவதில் பிரியாவுக்குக் கொள்ளை விருப்பம். இரவினில் நான் உறங்கும் போது எனது கட்டிலின் கீழேயே பிரியாவும் உறங்கும். ஒரு தடவை நான் கடுமையான சுகயீனத்தால் தொடர்ந்து மூன்று நாள் படுக்கையில் இருந்தேன். அந்நாட்களில் பிரியா என்னைவிட்டுப் பிரியவே இல்லை. என் அம்மா, அப்பா, அதற்கு எவ்வளவோ உணவு வைத்தும் உண்ணவேயில்லை. சோகமாக என்னருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து என்னையே பார்த்தபடி இருந்தது. இச்சம்பவத்தை இன்று நினைத்தாலும் என் விழியில் நீர் துளிர்க்கும்.

என் செல்லப்பிராணியின்மேல் எனக்கு மட்டும் அன்பில்லை. அதுவும் என் மேல் கொள்ளைப்பிரியமாகவே உள்ளது.

## 4 எனக்கும் சிறகிருந்தால்

விண்ணை முட்டும் மேகங்களை மெல்லப் பறந்து தொட்டுவர என மேலெழுந்து பறக்கும் பறவைகளைக் கண்டால் எனக்குள்ளும் ஓர் ஏக்கம். எனக்கும் சிறகிருந்தால் ஆகா.......... ! நினைக்கவே எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. எண்ணிப்பார்க்கிறேன் எனக்கும் சிறகிருந்தால்..........!

சிறகுகளை விரித்து சுதந்திரமாக மேலெழுந்து வானத்தில் வட்டமடிப்பேன். கரையும் காக்கைகளுடனும், கூவும் குயில்களுடனும், குறுகுறுக்கும் புறாக்களுடனும் கைகோர்த்து கரையில்லா வானவெளியில் நீந்திவருவேன்.

எண்ணற்ற விண்மீன்கள் வானில் கண்சிமிட்டும் அந்த இரவு நேரத்தில் விண்ணிற்கும் பறந்து சென்று அவை ஒவ்வொன்றின் அருகிலும் ஓய்வெடுத்துக் கொள்வேன். நீலவானில் நீந்திவரும் வண்ணநிலவின் அருகில் சென்று அதன் தண்ணொளியில் குளிப்பேன்.

எழில் கொஞ்சும் மலையகத்தை சுற்றிப் பார்க்க வேண்டும் என்று எனக்கு நீண்ட நாள் ஆசை. இயற்கை அன்னையின் எழில் காணப் பறந்து சென்றுவிடுவேன். ஒரு விடுமுறையை அந்த மலையகத்தில் மகிழ்வோடு கழிப்பேன். மலைச்சிகரங்களிற்கிடையில் பறந்து திரிந்து என் விருப்பப்படி பாடித் திரிவேன். பச்சைப் பசேலென்ற கம்பளம் விரித்தது போன்ற பரந்த புல்வெளிகளில் மெல்லத் தரையிறங்கி இளைப்பாறுவேன்.

மாமரங்களின் கிளைகளில் கனிந்துள்ள பழங்களை இனம் கண்டு உண்ணுவேன். தேன் சொரியும் மலர்களில் அமர்ந்து தேன் அருந்துவேன். ஊர்க்கோடியில் இருக்கும் வயது முதிர்ந்த அந்தப் பாட்டிக்கு பழங்கள் பறித்துத் தினமும் கொடுப்பேன். அந்தப் பாட்டி உண்ணும்போது மனம் நிறைவேன்.

இவ்வளவா? இன்னும் எவ்வளவோ! எதற்கும் சிறகு வேண்டுமே..........?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 தேர்த்திருவிழா

எம் ஊரின் காவல் தெய்வம், எங்கள் குலதெய்வம் இந்தக் கருணைமிகு அம்மன் தான். கருணை மிகுந்த கண்களும், ஒளிசிந்தும் முகமும், அபயம் அளிக்கும் கரமும் எம்தாயின் அருளை வெளிகாட்டும் சிறப்பம்சங்கள்.

அம்மனிற்கு கொடியேறித் திருவிழா தொடங்கிவிட்டால் ஊரிலே ஒவ்வோர் இல்லத்திலும் திருவிழாதான். அதிலும் தேர்த்திருவிழா என்றால் சொல்லவும் வேண்டுமா? வெளியூரில் இருக்கும் நம் ஊர்மக்கள் எல்லோரும் ஊரில் திரண்டு விடுவார்கள். வீதிகளின் இருமருங்கிலும் சாரிசாரியாக பெண்கள் வண்ணவண்ணச் சேலைகளிலும், ஆண்கள் வேட்டி சால்வையுடனும் பக்தியுடன் விடியற்காலையிலேயே செல்லத் தொடங்கிவிடுவர்.

காலை ஆறுமணிக்கு வசந்த மண்டபத்தில் அம்மனுக்குப் பூசை ஆரம்பமாகும். பூசை முடிந்ததும் செந்நிறப் பட்டாடை உடுத்திய தங்கநிற மேனித்தாய் உள்வீதி வலம் வந்து வெளியே வரும்போது வெளிவீதியில் நிற்கும் பக்தர்கள், கருணைமிகு எம் தாயைக் கண்டதும் "அன்னையே, தாயே" என்று பலவாறு பக்தியுடன் தம்மை மறந்து அழைப்பதைக் காணலாம். அம்மனை சனக்கூட்டத்திலிருந்து தேரடிக்குக் கொண்டு சென்று தேரில் ஏற்றித் தீபாராதனை காட்டும்போது "அரோஹரா! அரோஹகா!" எனும் சத்தம் விண்ணைப் பிளக்கும். தீபாராதனை முடிந்ததும் தேரின் முன் குவிக்கப்பட்டிருக்கும் தேங்காய்கள் உடைக்கப்படும்.

கடலா, கடலலையா? என எண்ணுமளவிற்கு மக்கள் கூட்டம் எங்குமே நிறைந்து காணப்படும். எள் போட்டால் எண்ணையாகும் என்பார்களே அவ்வாறு மக்கள் வெள்ளம் முட்டிமோதி அலைமோதும். வடம் பிடித்து தேரிழுக்க போட்டியிட்டு மக்கள் முன்வருவர். அதில் அவர்களது பக்தியின் உச்சத்தைக் காணலாம்.

தேர் இழுக்கத் தொடங்கியதும் தேரின் பின்னே அம்மனின் கீதங்களை இசைத்தபடியும், பிரதட்டை செய்தபடியும், கைகளைச் சிரசுமேல் உயர்த்தி தாயை வணங்கியபடியும் மக்கள் வெள்ளம் பின்தொடரும். கற்பூரச்சட்டி ஏந்தியபடியும், காவடி எடுத்தபடியும் தொலைதூரத்திலிருந்தும் பக்த கோடிகள் தாயைப் போற்றியபடி பாடிவரும் காட்சிகள் மெய்சிலிர்க்க வைக்கும். இவ்வாறு காலையிலிருந்து வரும் பக்தர்கள் ஓய்வெடுத்துத், தண்ணீர்த் தாகம் தீர்த்துப் பசியாற ஊர்ச் சந்திகள் தோறும் தண்ணீர்ப் பந்தல்களும், மடங்களும் அன்னதானமும் பானங்களும் வழங்கிக் கொண்டிருக்கும்.

"தேரேறிவருவாய் தாயே எங்கள்
குறைதீர்த்து அருள்வாய் தாயே"

என்று பக்தியுடன் தனை மறந்து பாடிப் பரவசமாகும் மெய்யடியார்களில் நானும் ஒருவனாகிவிடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 சுத்தம் சுகம் தரும்

எமது உடலையும் நாம் வசிக்கும் வீட்டையும், எமது சுற்றாடலையும் எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். இதேபோன்று மற்றோர் சுத்தமாக இருப்பதற்கும் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். சுத்தமாக இல்லாவிடின் சூழல் அழுக்காகி, துர்நாற்றம் வீசும். தொற்றுநோய்களைப் பரப்பும் நுண்ணிய கிருமிகள் பெருகி வளரும். இதனால் தொற்று நோய்கள் பரவும்.

எமது உடலில் அழுக்குப்படிவதால் வியர்வை வெளியேற முடியாது, வியர்வைத் துவாரங்கள் அடைபட்டுவிடும். தோல் வியாதிகள் ஏற்படும். உடல் துர்நாற்றம் வீசும் இவை மட்டுமன்றி எமது தோற்றத்தின் அழகு கெட்டுப்போகும். எம்மைக்காண்போர் முகம் சுழிப்பர். விலகிச் செல்வர்.

இல்லமே வெளியிடங்களில் எமக்கு ஏற்படும் களைப்பை நீக்கி மனதிற்கும், உடலிற்கும் உற்சாகத்தைத் தரும் இடமாகும். இவ்வில்லங்கள் சுத்தமாகவும் காற்றோட்ட முடையவையாகவும், சூரிய ஒளி பெறுவனவாகவும் இருத்தல் அவசியம்.

நாம் கல்வி கற்கும் எமது பாடசாலை, தொழில் செய்யும் அலுவலகம், எமது சுற்றாடலில் உள்ள வீதிகள், தெருக்கள், விளையாட்டு மைதானம், பொழுதுபோக்கும் இடங்கள், ஆலயங்கள் யாவும் எமது அன்றாட வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடைய இடங்களாகும். இவை எங்கும் சுத்தம் பேணப்படுதல் அவசியமாகும்.

சுத்தமாய் இல்லாதிருப்பின் நோய்கள் ஏற்படும். இது உடல் நலத்தைப் பாதிப்பதுடன் பணவிரயம், நேரவிரயம் என்பவற்றையும் ஏற்படுத்தும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாறு நோயற்ற வாழ்வு வாழ சுத்தம் அவசியம். எத்தனை செல்வங்கள் இருப்பினும் நோய் ஏற்படின், இருக்கும் செல்வத்தால் எந்தவொரு பிரயோசனமும் இல்லை.

எனவே உடலிற்கும் உள்ளத்திற்கும் இன்பம் சேர்க்கும் வண்ணம் சுத்தமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சிறு வயதிலேயே எம்மையும் எமது சுற்றாடலையும் சுத்தமாகப் பேணுவதற்கு பழக வேண்டும்.

## 7 அழியாச் செல்வம் கல்வி

கடலாலும், காற்றாலும், மழையாலும், தீயாலும் மட்டுமின்றி சதியாலும், சூழ்ச்சியாலும், சண்டையாலும் அணு ஆயுதங்களினாலும்கூட அழிக்க முடியாத செல்வம் ஒன்று உண்டெனில் அது கல்வி எனும் நிரந்தரமான செல்வம் ஒன்றேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி மூலம் நாம் பெற்ற அறிவு எக்காலத்திலும் எம்மைவிட்டு அழியாதது. காலத்தால் அழியாத நிலையான செல்வம் கல்வியே. ஏனைய செல்வங்கள் எதை எடுத்துப் பார்த்தாலும் பொன்னோ, பொருளோ, பண்டமோ, பணமோ,

முத்தோ, மணியோ - எதுவுமே நிலையில்லாதது. இயற்கை அழிவுகளாலும், சதி சூழ்ச்சிகளாலும், காலவோட்டத்தினாலும் கரைந்துவிடக்கூடியன. ஆனால் கல்வி எனும் அருந்தனம் அழியாத பெருந்தனமாகும்.

இது மட்டுமின்றி கல்வியின் இன்னுமோர் பெருஞ்சிறப்பு யாதெனில், சாதாரண மக்களில் சிலரிற்கு இருக்கக்கூடிய அறியாமை, வெகுளித்தனம், கோபம், மூடநம்பிக்கைகள், அகங்காரம் இவற்றை நீக்கி உண்மையினை விளக்கி, நல்லது தீயதைப் பகுத்தறிந்து சீர்தூக்கிப்பார்த்து செம்மையான வழி நடக்கச் செய்யும்.

கல்வியின் இன்னோர் சிறப்பு என்னவெனில், கற்ற கல்வியறிவில் ஒரு துளி கூட சிதைந்து குறைந்து போகாமலேயே மற்றவர்க்கும் வழங்கக்கூடியது. ஒரு விளக்கை ஏற்றி வைத்து அதிலிருந்து ஆயிரம் ஆயிரம் விளக்குகள் ஏற்றி ஊரெங்கும் ஒளிபெறச்செய்வது போலவே கல்வி எனும் ஒளியும் ஒரு கல்விமானின் அறிவும் போதும், ஆயிரம் ஆயிரம் கல்விமான்களை உருவாக்க! இப்படி ஓர் சிறப்புத்தன்மை உடைய செல்வம் உண்டெனின் அது கல்விச் செல்வம் ஒன்றேதான்.

கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பர் அரசன் முதல் ஆண்டிவரை கல்வியறிவுடையோரை மதிப்பதையும் காண்கின்றோம். எண்ணும் எழுத்தும் கண்களைப் போன்றன என்பார் வேறு சிலர். எமது உடலிற்கு கண்கள் எவ்வளவு பிரதானமோ அது போல வாழ்விற்கு கல்வி அவசியம்.

இப்படியான கல்விச் செல்வத்தை இளமையிலேயே கற்க வேண்டும். இளமையில் கல் என்பது பெரியோர் வாக்கு. இதற்குக் காரணம் இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதனாலேயே ஆகும். ஆம்! நாம் இளமையில் கற்கும் கல்வி சிலையில் செதுக்கி எழுதிய எழுத்தைப் போல் நிலையாக மனதில் நிற்கும்.

இவ்வாறு இளமையில் கற்கும் போது ஐயம் ஏதும் இன்றித் தெளிவாக கற்க வேண்டும். இதனையே திருவள்ளுவப்பெருமான் "*கற்க கசடற*" என்கிறார். இவ்வாறு ஐயம் இன்றித் தெளிவாக கற்றபின் கற்றபடி ஒழுகுதல் வேண்டும். இல்லையேல் கல்வி அர்த்தமற்றதாகிவிடும். கல்வி கற்பதன் நோக்கம் சீரிய செம்மையான நல்வாழ்வு வாழவே. எனவே வள்ளுவர் வாக்கிற்கிணங்க,

**"கற்க கசடறக் கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

மாணவர்களும் அழியாத செல்வமாகிய கல்வியை நன்கு கற்றுணர்ந்து நற்பிரசைகளாகத் திகழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 நான் கண்ட கனவு

அன்று பாடசாலை விட்டபின், நான் நண்பர்களுடன் மாலையில் நன்கு இருள் சூழும்வரை விளையாடி விட்டு, மிகவும் நேரங்கழித்து வீடு நோக்கி வரும் வழியில், மின்சாரம் தடைபட்டு வீதி எங்கும் ஏன் ஊரெங்கும் இருளில் மூழ்கி இருந்தது. தனியே வயல்வெளிகளைக் கடந்து வீடு செல்லப்பயமாக இருந்தது. பயத்தினால் கால்கள் பின்னிக்கொள்கின்றன. நடக்கவே முடியவில்லை. வியர்வையினால் உடல் தெப்பமாக நனைந்து விட்டிருந்தது. நாவரண்டு போனது. அடிக்கடி பின்பக்கம் திரும்பிப்பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தேன்.

திடீரென ஏதோ சலசலப்பு! திடுக்குற்றுத் திரும்பிப்பார்க்கிறேன். என் பின்னே பிரமாண்டமான மூன்று கரிய உருவங்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தன. என் பயம் மேலும் அதிகரித்தது. கால்கள் இடறின. எனினும் ஓட முற்பட்டேன். ஓடவே முடியவில்லை. அதற்கிடையில் அம்மூன்று உருவங்களும் என்னை நெருங்கி வந்து என் தலையினைப்பிடித்துக் கொண்டன. கத்த முயன்றேன். வார்த்தை தொண்டைக்குழியிலிருந்து மேலே வரவில்லை. சிவந்த கண்களும், பனைமரம்போல் கறுத்த மேனியும், நீண்ட நகங்களுடன் தொங்கும் கைகளும், அகன்ற பாதங்களும், பெரிய பற்களும் கொண்டிருந்தன அவ்வுருவங்கள். இமயமலைப்பிரதேசங்களில் உலவுவதாக கருதப்படும் பனிமனிதனின் உருவை நான் புத்தகங்களில் படிக்கும்போது இப்படித்தான் கற்பனை பண்ணி வைத்திருந்தேன். இவை அவ்வாறே இருந்தன. இந்த நினைவு என் பயத்தை மேலும் அதிகரித்தது. என் தலையை பற்றிய உருவம் அப்படியே அலக்காகத்தூக்கி சுழற்றி இடுப்பில் வைத்துக்கொண்டு முன்னே நடக்க ஏனைய இரு உருவங்களும் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. ஓர் அடர்ந்த காட்டுப்பாதையூடாக சென்று ஓர் குகையினுள் புகுந்தன.

குகையின் தோற்றம் இரத்தத்தை உறை வைத்தது. ஓர் மூலையில் பல மனித மண்டை ஓடுகள் சிதறிக் கிடந்தன. எலும்புகளும், துண்டுகளும் ஆங்காங்கு காணப்பட்டன. இரத்தம் சிந்திய அடையாளங்கள் காணப்பட்டன. மூலையில் போன்றதோர் கருவி காணப்பட்டது. இரத்தம் உறைந்து துர்வாடை வீசிக்கொண்டிருந்தது. நடுவே பெரியதெர்ரு பாறாங்கல் காணப்பட்டது. அக்கல்லிலும் இரத்தம் வடிந்து காணப்பட்டிருந்தது. என்னை கொண்டு போன அவ்வுருவம் அப்பாறையுடன் சேர்த்துக்கட்டியது. குகையின் வாயில் அருகில் அண்டா போன்றதொரு பாத்திரத்தில் ஏதோவோர் திரவம் "தழதழ" எனக் கொதித்துக்கொண்டிருந்தது. ஓர் உருவம் என் அருகிலும் மற்றைய இரண்டும் கொதிக்கும் பாத்திரத்தைப் பார்த்துக்கொண்டும் நின்றன. அவற்றில் ஒரு உருவம் அந்த மூலையில் கிடந்த கோடரி போன்ற கருவியை எடுத்துக்கொண்டு என்னை நோக்கி வந்துகொண்டிருந்தது.

என் முடிவு நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்தேன். இறுதிய கட்டுக்குள் இருந்தும் என் உடல் நடுங்கியது. என் பெற்றோரை நினைத்தேன். பாடசாலை முடிந்ததும் உடனேயே வீடு வர வேண்டும் என அடிக்கடி கூறும் அம்மாவின் சொல் கேட்டு நடந்திருந்தால் இப்படி ஆகியிருக்காதே என நினைத்தேன். என் தங்கையுடன் அடிக்கடி விளையாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டையிட்டுக் கொள்வேன், இப்போ நினைக்க வேதனையாக இருந்தது. அழுகை வந்தது. கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வழிந்து ஓடியது. அந்த உருவம் என்னை மிகவும் நெருங்கிவிட்டது. "ஆண்டவனே என்னைக் காப்பாற்று" என பலமாக அலறினேன். அவ்வளவுதான்!

"ராஜா..............ராஜா............" என்று என் அம்மா என்னை எழுப்புவதும், "அண்ணா........அண்ணா.." என்று விம்மியபடி என் தங்கை என் கால்களைப்பற்றி அழுதபடி நிற்பதுவும் கூடி எனக்குப் புரியவில்லை. நான்

"இல்லை.......இல்லை.....என்னைக் கொல்ல வேண்டாம்........... கடவுளே என்னைக் காப்பாற்றுங்கள்......" என அவர்களின் கையைப்பற்றியபடி கதறினேன். கண்களைத் திறக்கவே இல்லை. அப்பா சென்று உடனே நீர் எடுத்துவந்து என் முகத்தில் தெளித்தார். அப்போதுதான் நான் கண்விழித்தேன். "என்னடா ராஜா கனவு கண்டியா" என்றபடி அழுது கொண்டிருந்த என்னை என் அம்மா ஆதரவாக அணைத்தபோதுதான் நான் சுய உணர்வு பெற்றேன். தங்கை "அண்ணா அழவேண்டாம், அண்ணா அழவேண்டாம். அண்ணா நீ, அழுதா எனக்கும் அழுகை வரும்........" என்று என் கண்களைத் துடைத்துவிட்டபடி கூறினாள். நான் கண்டது பயங்கர கனவு என்று எனக்கு புரிந்தது. அப்போதே பெற்றோர் சொல்லை மீறி நடப்பதில்லை எனவும், தங்கை சங்கீதாவுடன் சண்டையிட்டுக் கொள்வதில்லை எனவும் மனதில் திடசங்கற்பம் பூண்டு கொண்டேன்.

## 9 ஐயம் இட்டு உண்

இறைவனின் கருணாகடாட்சத்தில் பலர் சகல சௌபாக்கியங்களும் பெற்று எந்தக் குறையும் இன்றி வாழுகின்றனர். சில சில குறைகளுடன் பிறர் கையை எதிர்பார்த்து வாழுகின்றனர். இவ்வாறான சிலரை ஆதரிக்க வேண்டும். அவர்கள் சொந்தம், பந்தம் எதுவுமின்றி இருக்கவும் கூடும். சிலர் இனசனங்கள் உள்ளவராயும் இருக்கக்கூடும். பலர் வீதிகளிலும், பொது இடங்களிலும் பிச்சை கேட்டுச் சீவியம் நடத்துவதையும் பார்த்திருக்கின்றோம்.

ஒரு மனிதனின் சீரிய வாழ்வில் தானமும் தர்மமும் அவனை என்றும் பாதுகாக்கும். "தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும்" என்பதை நாம் என்றும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எமக்கு இறைவன் அளித்த செல்வத்தில் மேலதிகமாக இருப்பதில் ஒரு பகுதியையாவது இல்லாதவர்க்கு வழங்குவதில் ஏற்படும் மகிழ்வும் மனநிறைவும் வேறு எங்கும் பெறமுடியாத இன்பமாகும். தான் கண்ட ஓர் சிறு உணவுப்பொருளைத் தன் இனத்தை அழைத்து ஒன்றாக உண்டு மகிழும் காக்கையைப் பார்த்திருக்கின்றோம். அத்தகைய பண்பு எமக்கும் வரவேண்டும்.

எம்மால் அடக்கிவிட முடியாத உணர்வு பசி, தாகம். ஆம்! பசி வந்தால் பத்தும் பறந்துபோம் என்பர். உள்ளவர்கள் பசிக்கும்போது உண்கின்றனர். இல்லாதவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனைபேர் அந்நேரம் பசியால் வாடுவர் என நாம் சிந்திக்கவேண்டும். இரக்கம், அன்பு, கருணை அவசியம். ஆறறிவு கொண்ட விசேட விலங்கு மனிதனாவான். எனவே தன்னைப் போல் பிறரையும் நேசிக்கவும், பிறரது உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும். இத்தகைய ஆற்றல் இருப்பதால்தான் மனிதனாக பிறந்ததையிட்டு பெருமைப்படுகிறோம்.

நாம் உண்ணும் உணவினை மற்றவர்கட்கும், இல்லாதவர்கட்கும் இட்டு உண்ண வேண்டும். அவர்களது வயிறு குளிர்வதைப் பார்த்து நாம் மனம் குளிர வேண்டும். எம் முன்னோர்கள், அரசர்கள் யாவரும் இல்லாதவர்கட்கு உணவளித்து உயர்ந்ததை அறிகின்றோம். நாமும் அவ்வாறு அவர்களைப் பின்பற்ற வேண்டும். மேலதிகமாக இருப்பதைக் கொடுப்பது மட்டுமன்றி உணவைக் கொட்டிச் சிந்தாது வீணே எறியாது உணவிற்கு மதிப்பளிக்கப் பழகுதலும் வேண்டும்.

இறைவனின் நற்குழந்தைகளாக திகழ இப்பண்புகளும் அவசியமே.

## 10 கிழிந்த புடவை – சுயசரிதை

எனது தாயகம் இந்தியாவாகும். பம்பாய் நகரிற்கு அருகிலே உள்ள ஓர் பருத்தித்தோட்டத்தில் முதன்முதலாக பஞ்சுவடிவில் பிறந்த என்னையும் என்போன்ற பலரையும் சேகரித்து சுத்தமாக்கி இரசாயனக் கலவையிட்டு இயந்திரங்களின் உதவியோடு நூலாக்கிப் பின் நூலை இயந்திர த் தறிகளில் இட்டுப் புடவையாக்கினர். அழகிய வர்ண நூல்களை இணைத்துப் புடவையாக்கினர். எங்கள் தொழிற்சாலையிலிருந்து என்னைப்போல் பல புடவைகள் தயாரிக்கப்பட்டன. எம்மையெல்லாம் பலவேறு ஒழுங்கில் தரம் பிரித்துக் கட்டுகளாக அடுக்கி கட்டினர். பின் நாங்கள் ஒரு பெரிய வாகனத்தில் ஏற்றப்பட்டோம். எம்மைத் திருச்சி எனும் இந்தியாவின் இன்னுமொரு நகரிற்குக் கொண்டு சென்று ஓர் புடவைக்கடையில் இறக்கினர். அப்போது தான் எனக்குப் புரிந்தது எம் தொழிற்சாலை முதலாளி எம்மை இந்தக் கடை முதலாளிக்கு விற்று விட்டார் என்பது.

அக்கடையில் முன்னே இருந்த கண்ணாடி அலுமாரியில் எங்களை அழகாக அடுக்கினர். அதிலிருந்து வீதியால் போவோர் வருவோரை எல்லாம் வேடிக்கை பார்த்தபடி இருந்தேன். பண்டிகைக்காலம் நெருங்கி வந்து கொண்டிருந்ததால் கடைக்கு வரும் பலர் என்னைப் புரட்டி புரட்டி பார்த்தனர். என்னை வாங்க ஆசைப்பட்டனர். ஆனாலும் என் அழகினால் எனக்கு விலையும் உயர்வாகவே இருந்தது. பாவம் அவர்களிடம் வசதி இருக்கவில்லை.

ஒரு நாள் இப்போது நான் இருக்கும் வீட்டு முதலாளி எம் கடைக்கு வந்திருந்தார். இவர் பேசியதிலிருந்து இவர் இலங்கையர் என அறிந்து கொண்டேன். நீண்ட நாளாகவே அழகிய இலங்கைத்தீவை என் வாழ்வில் ஒரு தடவையாவது சென்று பார்க்க வேண்டும் என்று ஆவல். இந்த முதலாளியும் என்னைக் கடைப்பையனிடம் கேட்டு கைகளில் எடுத்துப்பார்த்து, இறுதியில் வாங்கிக்கொண்டார். மறுநாளே திருச்சியிலிருந்து விமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இலங்கையை வந்தடைந்தேன். என் தாயகத்தை விட்டு வந்ததில் வருத்தமாக இருந்தபோதிலும் இலங்கைக்கு வந்ததில் எனக்கு கொள்ளை மகிழ்ச்சியாகவே இருந்தது.

முதலாளி வீட்டில் அவரைக் கண்டதும் அவரது மனைவி குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்து வரவேற்றனர். சிறிது இளைப்பாறி உணவு உண்ட பின்னர், அவர் என்னை எடுத்துத் தன் வயதான தாயிடம் கொடுத்து "அம்மா இந்தாருங்கள், தீபாவளிப் பண்டிகைக்காக உங்களுக்கு வாங்கினேன்" என்று என்னை அந்தப்பாட்டியின் கையில் கொடுத்தார். பாட்டி மிகவும் மகிழ்வுடன் என்னை வாங்கி "நல்லா இருக்குதப்பா" என்று கூறினார். மறுநாள் பாட்டி என்னை உடுத்திக் கொண்டு தாத்தாவுடன் கோயிலுக்கு போய்வந்து எல்லோரையும் ஆசீர்வதித்தாள். எனக்குப் பெருமையாக இருந்தது.

அன்று மட்டுமல்ல, அதன் பின்பும் பாட்டி பல இடங்களுக்கு என்னை உடுத்திச் செல்லும் போதெல்லாம் பார்ப்போர் என்னைத் தொட்டுப்பார்த்து ஆசைப்படுவார்கள். பாட்டி "என் மகன் இந்தியாவில் இருந்து எனக்கு வாங்கி வந்தது" என்று பெருமையாகக் கூறுவாள். என் அழகை நினைத்து எனக்கு இளமையில் கர்வமாக இருக்கும்.

காலம் போகப்போக பாட்டியிடம் என்னைப்போல பல சேலைகள் வந்தன. என் மதிப்பும் குறையத்தொடங்கியது. வெளியிடங்களுக்கு என்னை உடுத்தி வந்த பாட்டி வீட்டில் மட்டுமே உடுக்கத்தொடங்கினாள். பின்னர் என் உடலில் கிழிசல் ஏற்படத் தொடங்கியது. ஊசி கொண்டு என்னைத் தைத்தும் பாட்டி உடுத்தி வந்தாள். எனினும் சிறிது காலத்தில் என்னை உடுப்பதை நிறுத்தி விட்டாள். பழந்துணி தேவைப்படும்போது என்னைத் துண்டு துண்டா கிழித்து எடுக்கின்றனர்.

இன்று என்னைக் கவனிப்பாரேயில்லை. இந்த பழந்துணிகள் போடும் பெட்டியில் என்னையும் போட்டு விட்டனர். என் இளமைக்காலத்தில் எத்தனை கர்வம் கொண்டிருந்தேன். அப்போது பழசாயிருந்த புடவைகளைப் பார்த்து ஏளனம் செய்திருக்கின்றேன். அது என் அறியாமை. நானும் ஒரு காலத்தில் கிழிந்து பழசாகிப்போவேன் என அன்று நான் உணர்ந்திருக்கவில்லை. அப்போதைய என் நிலை ''காவோலை விழக் குருத்தோலை சிரித்தது போலவே" இருந்தது. இன்று இந்த நிலையில் இருந்தாலும் இந்த வீட்டிற்காக இறுதிவரை உழைத்திருக்கின்றேன் என்று நினைக்கும்போது திருப்தியாகவே உள்ளது.

## 11 பாடாசலை விளையாட்டுப்போட்டி

விளையாட்டு மனதிற்கு உற்சாகத்தையும், மாணவர்களிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கையும் வளர்க்கின்றது. இவற்றுடன் உடலின் தசைகளும், நரம்புகளும் சிறப்பாக இயங்குவதற்கும் விளையாட்டு உதவுகின்றது.

எமது பாடசாலையில் இல்லங்களிற்கிடையிலான விளையாட்டுப்போட்டி வருடாந்தம் ஆவணி மாதத்தில் நடைபெறுவது வழக்கம். பாடசாலை மைதானத்தில் விளையாட்டு போட்டிக்கு முன்பே விளையாட்டு பயிற்சிகள் ஆரம்பமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையில் நான்கு இல்லங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே நிறங்களும் உள்ளன.

நாச்சியார் இல்லம், இவ்வில்லத்திற்குரிய நிறம் சிவப்பு ஆகும். எமது பாடசாலையின் தாபகர் நாச்சியார் அம்மையாரின் நினைவாகவே இவ்வில்லத்திற்கு இப்பெயர் இடப்பட்டது. அடுத்து திருமகள் இல்லம். இதற்குரிய நிறம் மஞ்சள் ஆகும். அடுத்து கண்ணகி இல்லம். இதற்குரிய நிறம் நீலம். நான்காவது மாதுமை இல்லம். இதற்குரிய நிறம் பச்சையாகும்.

கடந்த வருடம் ஆவணி மாதம் பத்தாம் திகதி எமது பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அன்றைய தினம் பாடசாலை விழாக்கோலம் கொண்டிருந்தது. விளையாட்டு மைதானத்தின் மேடைக்கு நேர் எதிரே மைதானத்தின் மறுகோடியில் இல்லங்களிற்கான கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இல்லங்கள் ஒவ்வொன்றினதும் நிறத்திற்கு ஏற்ப அவற்றினது கூடாரங்களை அழகாக அலங்கரித்திருந்தனர்.

பிரதம விருந்தினர் துணைவியாருடன் பிற்பகல் இரண்டு மணிக்கு காரில் வந்து இறங்கினார். அவர்கள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் மரியாதையுடன் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றினர். பின் பாடசாலைக் கொடியை ஏற்றினர். அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். பாடசாலை மாணவர்களால் பாடசாலைக்கீதம் இசைக்கப்பட்டது. அதன்பின் மாணவர்களது அணிவகுப்பு மரியாதையைப் பிரதம விருந்தினர் ஏற்றுக் கொண்டார். இதன் பின்னர் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின.

ஓட்டம், தடையோட்டம், அஞ்சலோட்டம், ஈட்டி எறிதல், தட்டெறிதல் என்பன பல்வேறு வயது அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மாணவர்களது கைதட்டல் ஒலியும், உற்சாகப்படுத்தும் ஆரவாரங்களும் விண்ணை முட்டின. இறுதியில் நடந்த வினோத உடைப்போட்டி மிகவும் சுவாரசியமாக இருந்தது.

மாலை ஐந்தரை மணியளவில் இல்ல விளையாட்டுக்கள் யாவும் நிறைவு பெற்றன. பிரதம விருந்தினர் மாணவர் அனைவரையும் பாராட்டி வாழ்த்தினர். பிரதம விருந்தினரின் மனைவியாரால் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டன. மாதுமை இல்லம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. அதற்குரிய பரிசுக்கேடயத்தை அவ்வில்லத் தலைவரிடம் வழங்கும்போது மாணவர்களது கைதட்டல் ஒலியும் ஆரவாரமும் பாடாசாலை சுவர்களில் பட்டுத் தெறித்தன.

இறுதியாக மாணவர் தலைவரினால் நன்றியுரை கூறப்பட்டது. பாடசாலை மாணவர்களால் விழாவின் இறுதியிலும் பாடசாலைக் கீதம் இசைக்கப்பட்டபோது மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். இவற்றுடன் அன்றைய விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகள் இனிது நிறைவு பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 நான் கண்ட விபத்து

அன்று பாடசாலை விட்டு வீடுநோக்கி வந்து கொண்டிருந்தேன். பல மாணவர்களும் என்னைப் போலவே வீதியின் இருமருங்கிலும் வந்து கொண்டிருந்தனர். எமக்குப் பாடசாலையில் வீதி ஒழுங்கு முறைகளும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியமும் அடிக்கடி எடுத்துரைக்கப்படுகின்றன. நான் இவற்றைக் கடைப்பிடித்தே வீதிகளில் மிகவும் அவதானமாக நடப்பதுண்டு. ஆயினும் பலர் வீதி ஒழுங்கிற்கு முரணாக கண்டபடி நடப்பதும், தவறான இடத்தில் வீதியைக்கடப்பதும் நமறிந்ததே.

அன்றும்கூட எனது வீட்டிற்கு அருகில் உள்ள சந்தியில் நான் வீதியைக் கடப்பதற்காக வீதிச் சைகை விளக்கின் அனுமதிக்காக காத்திருந்தேன். அப்பொழுது சற்றுத் தள்ளி ஓர் வாலிபர் இவை எவற்றையும் கவனியாது வீதியைக் கடந்து கொண்டிருந்தார்.

என்னே! பரிதாபம்......! எதிர்த்திசையிலிருந்து வேகமாக வந்து கொண்டிருந்த வாகனம் அவ்வாலிபரை வேகமாக மோதியது. "ஐயோ........அம்..மா....!" என்று ஊரே அதிரும்படி கத்திய அவ்வாலிபர் பத்து அடி தொலைவில் தூக்கி வீசப்பட்டு, இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்தார். அவரை மோதிய வாகனம் இன்னும் சற்றுத் தொலைவில் போய் நின்றிருந்தது.

வீதியில் நின்றிருந்த மக்கள் ஓடிச்சென்று அந்த வாலிபருக்கு முதலுதவி செய்து கொண்டும் அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டும் இருந்தனர்.

இன்றும்கூட அந்த பயங்கர விபத்து என் கண்களில் நிறைந்துள்ளது. வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் விபத்துக்கள் ஏற்படாது தடுக்கலாம் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

## 13 எனது ஊர்

செந்தமிழும், சைவமும் சேர்ந்து மணம் பரப்ப, ஏனைய மதங்களும் இணைந்து வழிநடத்த சீரோடும் பார் புகழும் பேரோடும், வள்ளிமணாளன் தேரோடும் ஊராகிய நல்லூரே எனது ஊராகும். இது யாழ்ப்பாண நகரிலிருந்து ஒரு மைல் தொலைவில் அமைந்துள்ளது.

முற்காலத்தில் சங்கிலி மன்னனது தலைநகராக நல்லூர் விளங்கியது. நல்லூர் என்ற பெயருக்கு ஏற்றாற்போலவே என் ஊர் நல்ல ஊராகும். தமிழர் பெரும்பான்மையினராக உள்ளனர். சமயரீதியாக இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்கர்கள் எனப் பிரதானமான மூன்று மதத்தைச் சார்ந்தவர்களும் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரின் சிகரம் நல்லைக் கந்தசாமி கோவிலாகும். அழகன் முருகன் எழுந்தருளியிருந்து அருள் பாலித்து எம் ஊர் மக்கள் மட்டுமின்றி நாட்டில் எத்திசையிலிருப் போரையும் காத்து வருகின்றான்.

பிரதான தொழில்கள் என அரசாங்க உத்தியோகத்தையும், விவசாயத்தையும் வியாபாரத்தையும் கூறலாம். கல்வியன்காட்டுச் சந்தை, திருநெல்வேலிச் சந்தை என்பன எனது ஊருக்கு அண்மையிலுள்ள பிரதான சந்தைகளாகும். இங்கு எமது ஊரின் உற்பத்திகள் பெரிதும் விற்பனை செய்யப்படுகின்றன.

எனது ஊரில் 98% மானோர் கல்வி கற்றவர்கள். பிரதான பாடசாலைகள் பல உள்ளன. இந்து ஆலயங்கள் தேவாலயங்கள் என்பனவும் உண்டு.

நல்லூர்க் கந்தசாமி கோவிலில் கொடியேறி 25 நாட்கள் திருவிழா நடக்கும் போது எமது ஊரில் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவரது மனதிலும் குதூகலமும் திருவிழாவும்தான். வெளியூர்களிலிருந்தும் திருவிழாவுக்கு உறவினரும் நண்பர்களும் வந்து தங்கியிருப்பர். எனது ஊரே அந்நாட்களில் விழாக்கோலம் பூண்டிருக்கும் என்றால் மிகையாகாது. இவ்வாறு சமயத்தை வளர்த்தல், சமூக பொருளாதார விருத்தி மற்றும் ஏனைய அம்சங்களிலும சிறந்து விளங்கும் எனது ஊரின் பெருமையையிட்டு நான் சந்தோசப்படுகின்றேன்.

## 14 பௌர்ணமி நாள்

இரவிலும் சூரியன் எழுந்து வந்ததுவோ என்று எண்ணும் அளவிற்கு தண்ணொளி பரப்பியிருந்தாள் நிலவுமகள். நிலாவானில் கோடானுகோடி நட்சத்திரங்கள் மின்னி மின்னி வண்ண விளக்குகள் போல் அலங்கரித்து இருக்க வட்டநிலவு மேலெழுந்து வரும். மரங்கள், கொடிகள், செடிகள், யாவும் மெல்ல அசைந்து வரவேற்கும்.
அல்லி மலர்கள் கண்விழித்துப் பார்க்கும். வாசமுள்ள மல்லிகையும் மொட்டவிழ்ந்து விண்ணில் எழுந்த விந்தையை வியப்புடன் நோக்கும்.

நீலவானத்தை தன்னுள் நிழற்படம் பிடித்து வைத்திருக்கும் நீண்ட கடல் மட்டும் சும்மாயிருக்குமா என்ன? ஒளி உமிழும் அந்த வண்ணத்தட்டினை எட்டிப் பிடித்து வர முட்டிமோதிக்கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக அலைகள் போட்டியிட மேலெழுந்து பார்க்கும். என்றாலும் எட்டாது போகவே மீண்டும் நீரில் விழுந்து வெண்நுரை பொங்கச்சிரித்து ஓடிவந்து கரையைத் தொட்டு மீண்டும் கடலைச் சேரும். இத்தனை மகிழ்வா! பௌர்ணமி நிலவைப் பால் பொழியும் அந்த நிலவை வரவேற்க இத்தனை ஆரவாரமா, என்று எண்ணத்தோன்றும்.

மனிதர்கள் மட்டும் என்ன சும்மாவா இருப்பார்கள்? பகல் முழுவதும் பாடுபட்டு உழைத்த பலர் பால்நிலவில் உணவருந்துவர். உண்ண மறுத்து அடம்பிடிக்கும் சின்னக் குழந்தைகட்கு அன்னை அந்த நிலவைக்காட்டி அமுதூட்டுவாள். சிறுவர்கள் வட்ட நிலவை தம்முடன் விளையாட வரும்படி வருந்தி அழைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் மனதில் பௌர்ணமி நிலவு. கற்பனை ஊற்றைப் பொங்கி வழியச் செய்யும். நிலவைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம்.

மெல்லிய தென்றல் சாமரம் வீச, கோடானுகோடி நட்சத்திர தோழியர் புடைசூழ கடலும், அலையும், பூக்களும், மரங்களும், செடிகொடிகளும், மனிதரும், கவிஞரும் ஆவலுடன் வரவேற்க எல்லோரையும் மகிழ்விக்க மெல்ல மெல்ல மேலெழுந்து வருவாள் பௌர்ணமி நிலவு மகள். அவள் எல்லோர் மனதிலும் இன்பம் பெற தண்ணொளி வீசி வானவீதியில் வலம் வருவாள்.

## 15 என் நண்பன்

நல்ல நண்பனைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் என்பர். ஆம்! அந்தவகையில் நானும் ஓர் பாக்கியசாலிதான். எனக்கு ஓர் உற்ற நண்பன் இருக்கிறான். அவன் பெயர் அறிவழகன். பெயரிற்கு ஏற்ப நல்லறிவு கொண்டவன். சிறு வயதிலிருந்தே அறிவழகனும் நானும் ஒன்றாகவே கற்று வருகிறோம்.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

எனும் திருவள்ளுவர் திருவாக்கிற்கு இணங்க எனக்கு என்ன துன்பம் நேரினும் அங்கே பக்கபலமாக நின்று விளங்குவான். என்னைவிட என் விசயங்களில் அதிக கவனமுடன் தானே முன்னின்று அனைத்தையும் செய்து தருவான்.

பாடசாலையில் பாடங்களில் எனக்கு விளங்காதவற்றை எல்லாம் தெளிவாகப் பொறுமையுடன் எனக்குப் புரியும்படி விளக்குவான். என்னைவிட என் விசயங்களில் அதிக கவனமுடன் தானே முன்னின்று அனைத்தையும் செய்து தருவான்.

அறிவழகன் அவன் குடும்பத்தில் மூத்தவன். அவனிற்கு ஓர் தம்பியும் ஓர் தங்கையும் உள்ளனர். அறிவழகன் ஒழுக்கமும், நற்பண்புகளும் நிறைந்தவன். பெற்றோரைப் பேணுதல், ஆசிரியரைக் கனம் பண்ணுதல் பெரியோரை மதித்தல், உயிர்களிடத்தில் அன்பாயிருத்தல், நேரம் தவறாமை எனப் பல்வேறு நற்பண்புகளைக் கொண்டவன்.

கடவுள் மீது பக்தி கொண்ட அறிவழகன் கல்வியிலும் சிறந்து விளங்குகின்றான். விளையாட்டிலும் சிறந்தவனே அவனிற்கு பிடித்த பொழுதுபோக்கு புத்தகம் படித்தலாகும். அறிவுசார்ந்த நூல்கள் பலவற்றையும் தேடித்தேடி படிப்பான். அவற்றைப்படிக்கும்படி என்னிடமும் தருவான். அன்றாட நடவடிக்கைகள் இயற்கை நிகழ்வுகளிற்கெல்லாம் விஞ்ஞான விளக்கம் கூறி அவற்றின் உண்மையை எனக்குப் புலரவைப்பான்.

சமூகத் தொண்டு செய்வதில் அதிக ஈடுபாடு கொண்டவன். இதனால் எம் ஊர் மக்களாலும் என் நண்பன் மிகவும் விரும்பப்படுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 மதியால் கிடைத்த வெகுமதி

மாணிக்கபுரி பொன்னும், பொருளும் விளையும் பூமி. மாணிக்கபுரியை மணிகண்டன் எனும மன்னன் ஆண்டு வந்தான். அவன் தன் மகளிற்கு திருமணம் செய்ய புத்திசாலித்தனமும், கெட்டிகாரத்தனமும் மிக்க ஓர் வாலிபனை தேர்ந்தெடுக்க வேண்டும் என யோசித்தான். இதற்கு தான் ஒரு போட்டி வைக்கப்போவதாக ஊர் முழுவதும் பறைசாற்றும்படி உத்தரவிட்டான். அயல் ஊர் அரசுகளுக்கும் அறிவித்தான்.

வெவ்வேறு இராச்சியங்களிலிருந்தும் இளவரசர்களும், மன்னர்களும் மந்திரி குமாரர்களும் வந்திருந்தனர். ஊர்மக்களும் கலந்து கொள்ளலாம் என்று மன்னன் அறிவித்தபோதும் மக்கள் எவரும் கலந்து கொள்வில்லை. ஆயினும் இந்தப் போட்டியை பார்க்க யாவரும் அரண்மனையருகில் கூடியிருந்தனர்.

வந்திருந்த இளவரசர்கள், மந்திரிகுமாரர்கள் மத்தியில் மணிகண்ட மன்னன் தோன்றினான். மன்னன் ஆணையின் பேரில் யாவருக்கும் அரைப்படி அரிசி வழங்கப்பட்டது. அனைவரும் போட்டி எதுவோ எப்படியோ என்று வியந்து நிற்க மன்னன் எழுந்து

"வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம், உங்கள் கையிலிருக்கும் அரைப்படி அரிசியில் நீங்கள் செய்ய வேண்டியது, ஆயிரம் உயிர்களுக்கு உணவிட்டு நீங்களும் பசியாறி மீதி கால்படி அரிசியை சேமித்து வைத்திருக்க வேண்டும்." என்றான்.

எல்லோரும் திகைத்தனர் "என்ன அரைப்படி அரிசியில் ஆயிரம் உயிர்கட்கு உணவிட்டு நாமும் உண்டு மீதி கால்படியும் இருக்கவேண்டுமா? என்று முணுமுணுத்தனர். சிலர் "இது முடியாத காரியம், நடக்கக்கூடிய ஏதாவது சொல்ல வேண்டும்." எனக் கேட்டனர். சபையிலிருந்த பெரியோர்களும் "மாணிக்கபுரி மன்னனுக்குப் புத்தி பேதலித்துவிட்டது" என்று முணுமுணுத்தனர்.செய்வதறியாது விழித்தனர். சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

அச்சமயம் ஊரில் வசிக்கும் ஏழை இளைஞன் அரசனின் முன் பணிவாக வந்து நின்றான். "அரசே! பணிவுடன் வணங்குகின்றேன். என் பெயர் மதியழகன். இப்போட்டியில் நானும் கலந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் வழங்கும்படி பணிவுடன் வேண்டுகின்றேன்." என்றான்.

இளவரசர்களும், மந்திரிகுமாரர்களும் வாய்விட்டு நகைத்தனர். பெரியோர்கள் எச்சரித்தனர். ஊர் ஜனங்கள் பயந்தனர். இந்தளவு பெரிய அரசகுமாரர்களால் முடியாததை இவனா செய்யப் போகிறான்? வீணே மன்னனின் கோபத்திற்கு ஆளாகப்போகிறானே என்று வேதனைப்பட்டனர். எனினும் மன்னனோ அவனுக்கும் அரைப்படி அரிசி வழங்க உத்தரவிட்டார். அரிசியைப் பெற்றுக் கொண்ட மதியழகன் மீண்டும் அரசனைப் பார்த்து,

"மன்னா! தங்கள் போட்டியின்படி நானிதனைச் செய்துகாட்ட வேண்டுமானால் நான் அழைக்கும் இடத்திற்கு தாங்கள் என்னுடன் வரவேண்டும் என தாழ்மையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொள்கின்றேன்.'' என்றான். யாவரும் திகைத்தனர். வீணே மன்னனின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்கிறானே என்று பேசிக்கொண்டனர். ஆனால் மன்னனோ''ஆகட்டும்'' என்றதும் மதியழகன் முன்னே நடக்க மன்னனும் பரிவாரங்களும் பின்தொடர்ந்தனர். வந்தவர்களில் பலர் வியப்பும், சிலர் வெறுப்பும், இன்னும் சிலர் பொறாமையும் கொண்டு நடக்கப் போவதைப் பார்க்க பின்னே சென்றனர். சிறிது நேரம் நடந்து ஊர் எல்லையில் உள்ள அடர்ந்த காட்டை அடைந்தனர்.

காட்டில் சுள்ளிகள் சில பொறுக்கிச் சிறிய பானை ஒன்றை எடுத்துக் கால்படி அரிசியைப் போட்டுச் சமைத்த மதியழகன், மீதி கால்படியை பத்திரமாகப் பையில் வைத்தான். சமையல் முடிந்ததும் மூன்று பெரிய இலைகள் எடுத்து வந்து மூன்றிலும் சமமாக சமைத்த சாதத்தை எடுத்து வைத்தான். மன்னன் உட்பட யாவரும் நடப்பவற்றை வியப்புடன் ஆவலுடன் பார்த்தபடியே நின்றனர். மூன்று இலைகளில் ஒன்றிலிருந்த சாதத்தை,

சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருககும் எறும்புகளின் புற்று அருகில் சென்று பிரித்து பரவலாகப் போட்டான்.

சிறிது நேரத்தில் அதில் ஆயிரம் இல்லை, ஆயிரமாயிரம் எறும்புகள் வெளிவந்து மொய்த்துக்கொண்டன. அதன்பின் மன்னனைப் பார்த்துத் திரும்பிய மதியழகன் "மன்னா ஆயிரம் இல்லை, ஆயிரமாயிரம் உயிர்கள் பசியாறுகின்றன. இதோ இரு இலைகளில் சாதம் உள்ளது. உட்காருங்கள் அவை எனக்கும் உங்களுக்கும்'' என்றான்.

மன்னனும் உட்கார்ந்தான் மன்னன் முன் ஓர் இலையின் சாதத்தை வைத்துவிட்டு மறு இலையின் சாதத்தை தான் உண்டு முடித்தான். உணவு முடிந்ததும், முன்னரே மீதப்படுத்தி வைத்திருந்த மீதி கால்படி அரிசியை எடுத்து,

"இந்தாருங்கள் மன்னா! ஆயிரம் உயிர்களுக்கு உணவளித்து, நான் மட்டுமல்ல நீங்களும் உண்டு மீதியாகவுள்ள கால்படி அரிசி, இந்தப் போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகநான் இதில் சேர்ந்து கொள்ள வில்லை. மாணிக்கபுரி மன்னனுக்கு புத்தி பேதலித்து விட்டது என்று கூறிய இழுக்கைப்போக்க, எம் நாட்டின் மன்னன் மட்டுமல்ல மாணிக்கபுரியின் மாடு மேய்க்கும் இளைஞனும் அறிவின் சுடர்கள் என்பதை இந்தப் பெரியோர்க்கு எடுத்துக்காட்டவே இதில் கலந்து கொண்டேன். தங்களுக்குத் தந்த சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும் மன்னா! நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு நடக்க முற்பட்ட மதியழகனை கையில் பிடித்துக் கட்டியணைத்த மன்னன் "மதியழகா! மாணிக்கபுரியின் மானம் காத்தது நீதானப்பா! இனி இந்த மாணிக்கபுரியை ஆளவேண்டியவன், என் மகளுக்கு ஏற்றவன் நீ தான்! நீதான் பொருத்தமானவன்'' என்று கண்ணீர் மல்க கூறினான். எல்லோர் மனதிலும் மகிழ்ச்சியும், நிறைவும் காணப்பட்டது. அனைவரும் மதியழகனைப் புகழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 மழைநாள்

ஐப்பசி மாதத்தில், எமது பகுதியில் நிச்சயமாக ஒரு தடவையாவது வெள்ளம் போடுமளவிற்கு மழை தொடர்ந்து பெய்வது வழக்கம். புரட்டாதி மாதம் தொடங்கவே மழை பெய்யத் தொடங்கிவிடும் எனினும் ஐப்பசியில் பெருமழை பெய்யும். இப்படித்தான் அன்றும் வானம் பிளந்து விட்டதோ எனுமளவிற்கு கொட்டியது மழை.

வானம் பார்த்த பூமி என்பதால் எம் ஊர் மக்களுக்கு மழையைக் கண்டாலே கொண்டாட்டம்! ஏன் சிறுவர்கள் கூட "மழையே மழையே மெத்தப்பெய்........" என்று பாடித்திரிவதைக் காணலாம்.

அன்று அதிகாலையே ஆதவனைக் காண முடியாதபடி மேகம் மூடியிருந்தது. கருமேகம் திரண்டு வானை மூடிக்கொண்டது.

மரங்களும் செடிகளும் மட்டுமல்ல, புல் பூண்டுகளும் வானதேவனிடம் இருந்து தமக்கு வாழ்த்து வரப்போகிறது என்பதுபோல் அசைந்து அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. சிறிது நேரத்தில் பெரும் இரைச்சலுடன் தொடங்கிச் சோவென பொழிந்தது மழை.

செடிகள் நனைந்தன. கொடிகள் குளித்தன. பூக்கள் சிரித்தன. பூவிதழ்கள் மழைத்துளிகளை தாங்கிக்கொண்டன. புள்ளினங்கள் ஒடுங்கித்தம் கூடுகளில் ஒதுங்கிக் கொண்டன.

சிறிது நேரத்தில் சிறுசிறு துளிகள் இணைந்து பெருவெள்ளமாகியது. வீதியில் திரண்டு பாய்ந்து ஓடியது. புற்கள் வெள்ளத்தில் முழுதும் மறைந்து கொண்டன. வெள்ளத்தைக் கண்ட சிறுவர் மனதிலும் ஆனந்தவெள்ளம் பொங்கியது. வண்ணக்கடதாசிகளில் சிறுசிறு கப்பல்கள் செய்து மிதக்கவிட்டனர். தாம் மழையில் நனைந்து போவதைக்கூட மறந்து விளையாடினர்.

வீதிகளில் வாகனங்கள் பகலிலே விளக்குகள் எரியவிட்டவாறே ஓடிக்கொண்டிருந்தன. மக்கள் குடையும், மழைச்சட்டையும் அணிந்தபடியே மிகவும் நிதானமாக நடந்து திரிந்தனர். டலர் வீதியின் இரு மருங்கிலும் மழைக்கு ஒதுங்கி ஒடுங்கி நின்றனர். இவர்கள் கால்கடுக்க இந்தக் கடுங்குளிரில் நின்றதற்கு இரங்குவதுபோல் மழை சற்றுக் குறையத்தொடங்கியது. ஓரிருதுளிகள் மட்டும் துமித்துக்கொண்டிருந்தது. வானத்தின் ஒரு மூலையை மெல்லப் பிரித்து ஆதவன் எட்டிப்பார்த்தான். அவன் ஒளிக் கதிர்கள் துமித்த மழைத்துளியில் பட்டுத்தெறித்து பல்வேறு வண்ணம் காட்டியது.

புற்றீசல்கள் போல், ஒதுங்கியிருந்த மக்கள் வெளிவரத் தொடங்கினர். வீதியில் வழமையான கலகலப்பு ஏற்படத்தொடங்கியது. மக்களிடத்திலும், மரம் செடிகளிடமும் ஓர் புத்துணர்வு காணப்பட்டது. வான்மழைக்கு இவ்வளவு வலிமையுண்டா வியப்பாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 உழவுத்தொழில்

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்**
**உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்**

*-பாரதியார*

என்ற முழக்கம் இன்றும் நம் காதில் முழங்குகின்றது. ஆம்! உழவுத்தொழிலே உலகில் எமக்கெல்லாம் உணவு போடும் தொழிலாகும். ஆதிகாலத்தில் இடத்துக்கிடம் அலைந்து திரிந்த மனிதன் முதன்முதலில் நதிக்கரை ஓரங்களில் விவசாயம் செய்வதற்காகவே நிலையாகத் தங்கி வாழத்தொடங்கினான். உழவுத்தொழில் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் தொழிலாகும்.

உலகில் எங்கு பார்க்கிலும் இவ் உழவுத் தொழில் காணப்படுகின்றது. உழவர்கள் எமக்கு உணவு தரும் தொழிலாளர்களாவர். உழவுத்தொழில் சிறப்புற்று ஓங்கின் அந்த நாடே சிறப்புறும் என்பது நாமறிந்ததே. இதனாலேயே அன்று ஔவைப்பாட்டியும் மன்னன் ஒருவனை வாழ்த்தும்போது "*வரப்புயர*..........." என்றுமட்டும் வாழ்த்தி நின்றார். ஆம் வரம்பு உயர அதனூடே பாயும் நீர் உயரும். அந்த நீர் உயர விளைவிக்கும் நெல்லினளவு உயரும். அப்படி விளைச்சல் அதிகரிக்க அரசன் உயர்வான். அவ்வரசன் உயர மக்களும் உயர்வார்கள் என்பதைப் பின்னணியில் கொண்டே ஔவைப்பாட்டி "வரப்புயர....." என வாழ்த்தினார். இன்றும் நம் கவிஞர்கள்,

**ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை**
**என்றும் நம் வாழ்விலே பஞ்சமே இல்லை**

என்றெல்லாம் பாடுவது உழவுத் தொழிலின் உயர்வையே எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

நம் பண்டைய மன்னர்களும், இன்றைய அரசுகளும் உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல்வேறு உதவிகளையும், மானியங்களையும் வழங்கிக் கொண்டிருப்பதனை நாம் காண்கின்றோம்.

உழவுத் தொழிலுக்கு சிறந்த காலநிலையும், மண்வளமும், நிதியும், தொழிலாளரும் அவசியமாகும். விருத்தியடைந்த நாடுகளில் நவீன இயந்திரங்களின் உதவியுடனும் சிறந்த வளமாக்கிகளைப் பயன்படுத்தியும் உழவுத்தொழில் சிறப்பாக நடைபெறுகின்றது. விருத்தியடைந்துவரும் எமது நாடு போன்ற நாடுகளில் உழவுத் தொழிலில் பாரிய நவீன இயந்திரங்கள் புகுத்தப்படாவிட்டாலும் ஓரளவு நவீன முறைகளும் காணப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் உழவுத்தொழில் சிறப்பாக காணப்படின் பஞ்சம் பறந்தோடிச் செல்வமும் சிறப்பும் மிக்க நாடாக அந்நாடு விளங்கும் இதனாலேயே

**உழுதுண்டு வாழ்வோர்க்கு ஒப்பில்லைக் கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனர போலும்,

உழவுத் தொழில் உயர்வு தரும் ஓர் தொழிலாகும். பசியைப்போக்கிப் பஞ்சத்தையும் நீக்கி விடிவைத் தரக்கூடிய தொழில் ஒன்றுள்ளதெனில் அது உழவுத் தொழிலே எனலாம்.

## 19 நன்றி மறவேல்

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு**

பரந்த இப்பாரினில் நாம் எவரும் மற்றவரின் உதவியின்றி இயங்க முடியாது. ஒவ்வொருவரது தேவைகளை நிறைவேற்றவும் பலரின் உதவிகளும், ஒத்துழைப்பும் அவசியமாகின்றன. இது மட்டுமின்றி எந்த ஒரு நாட்டினை எடுத்துப்பார்க்கினும் அது தனித்து தன் நாட்டு மக்களுக்கு வேண்டிய அனைத்தையும் தானே உற்பத்தி செய்ய முடியாது. வேறு பல நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்தும், தன் நாட்டுப்பொருட்களைப் பிற நாடுகட்கு ஏற்றுமதி செய்தும் வருவதை அவதானிக்கலாம்.

இவ்வாறே தனி ஒருவரோ, ஒரு சமூகமோ, ஒரு நாடோ - நம் அனைவரும் ஒருவரில் ஒருவர் தங்கி உள்ளோம். வாழ்வில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனையோ பேர் எமக்கு உதவுகின்றனர். அது ஓர் சிறு சந்தர்ப்பத்தில் செய்யப்பட்ட சிறு உதவியாக இருக்கலாம். மிகவும் ஆபத்தான சந்தர்ப்பத்தில் செய்த உயிர்காக்கும் உதவியாகவும் இருக்கலாம்.

ஆயினும் உரிய நேரத்தில் உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவி சிறிதாக இருப்பினும் பெறுமதி மிக்கது. இதனையே வள்ளுவப்பெருந்தகை, காலத்தால் செய்த உதவி என்கிறார். இவ்வாறு காலத்தால் செய்த உதவி சிறிது எனினும் அதனை - அதன் பயனை நாம் உலகைவிடப் பெரியதாக மதிக்க வேண்டும் என்கிறார். எனவே நாம் "என்ன செய்தார்கள் சும்மா ஒரு சின்ன உதவிதானே........" என்று இருந்து விடக்கூடாது. அந்தச் சமயம் அவர்கள் அந்தச் சின்ன உதவியைச் செய்யாவிட்டால் என்ன நிகழ்ந்திருக்கும் எனச் சிந்திக்க வேண்டும். இதமாக தகுந்த சந்தர்ப்பத்தில் செய்த உதவியை என்றும் மறவாது நன்றியுடன் இருத்தல் வேண்டும்.

எல்லோரும் நன்றியை எதிர்பார்த்து உதவி செய்வதில்லை. எனினும் செய்த நன்றியை மறப்பது எமக்கு அழகில்லை. இதனையே "நன்றி மறப்பது நன்றன்று.........." என்று வள்ளுவப் பெருமான் கூறுகிறார். அவ்வாறு நன்றி மறக்காது நடப்பது மட்டுமன்றி, நல்லதல்லாதவைகளை அன்றே மறந்துவிட வேண்டும் என்பதை "..........நன்றல்லாதன அன்றே மறப்பது நன்று" என்கிறார்.

எம் புராணக் கதைகளில் கூட நன்றிக்கடன் தீர்ப்பதற்காகவே அநீதி என்று அறிந்தும் அநீதியின் பக்கம் நின்ற பாத்திரங்கள் அனேகம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மறந்தவரை உலகம் "நன்றி கெட்டவன்" என்றும் தூற்றும். மிருகமாக இருந்தும் நாய் நன்றியுடையது. நன்றியில் நாயைப்போல இருக்க வேண்டும் என்பர்.

எனவே நன்றி மறவாமை என்பது நாம் கைக்கொள்ள வேண்டிய ஓர் முக்கியமான பழக்கமாகும். எனவே மாணவர்களாகிய நீங்களும் சிறுவயதிலிருந்தே செய்நன்றி உடையவர்களாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

## 20 எமது சூழலைப் பாதுகாப்போம்.

நாம் வாழும் சூழல் இன்று பல வழிகளாலும் அழுக்காகின்றது. மாசடைகின்றது. இதனால் எமது சுத்தமும், சுகாதாரமும் கெட்டுப் போகின்றன. சுத்தம் சுகம் தரும் எனவே எமது சூழலைப் பாதுகாப்பதும் எம் சுத்தத்தைப்பேணி, எம் சுகத்தைப் பேணவேண்டியதும் எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எமது சூழலில் நிலம், நீர், வளிமண்டலம் என்பன நவீன விஞ்ஞான கைத்தொழில் வளர்ச்சியாலும் மக்களது பழக்கவழக்கங்களாலும் அழுக்காகின்றன. பாரிய இயந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைக் கழிவுகளால் நீர் அழுக்காகின்றது. குறிப்பாக, கைத்தொழில் வசதிக்காக ஆற்றங்கரைகளில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. அவற்றின் கழிவுகள் ஆற்றினுள்ளேயே கலக்க விடப்படுகின்றன. இதனால் ஆற்றுநீர் அழுக்கடைவதுடன் அதில் வாழும் மீன் போன்ற உயிரினங்கள் அழிந்து போகின்றன. அந்த ஆற்று நீர் கடலை அடையும்போது கடலும் மாசடைகின்றது.

தொழிற்சாலைகளிலிருந்து வரும் புகை, வாயுக்கள், தூசிகள் என்பனவும் வாகனங்களின் புகை, அணு ஆயுதங்களின் பாவனை என்பனவும் வளிமண்டலத்தைப் பாதிக்கின்றன. இதனால் நாம் சுவாசிக்கும் வளி அசுத்தமடைகின்றது. இதனால் சூரியனிலிருந்து வரும் தோலைத்தாக்கக்கூடிய கதிர்களைத் தடுக்கும் ''ஓசோன் படை" எனப்படும் வளிமண்டல மேற்பரப்பிலுள்ள படையில் கூட துவாரங்கள் ஏற்பட்டு அத்துவாரங்கள் ஊடாக அந்த நச்சுக் கதிர்கள் புவியை வந்தடைகின்றன. இதனால் மனிதரின் தோலில் பாரிய தோல் வருத்தங்கள் ஏற்படும் என அஞ்சப்படுகின்றது.

விவசாயத்தில் அதிக பயன் பெறுவதற்காக பயன்படுத்தப்படும் நவீன வளமாக்கிகளும் இரசாயனப் பொருட்களும், அணு ஆயுதப்பரிசோதனை என்பவற்றாலும் நிலம் மாசடைகின்றது. இதனால் எதிர்காலத்தில் வளமற்ற நிலமே எஞ்சும் அபாயம் உள்ளது.

இவை மட்டுமன்றி வீதிகளில் குப்பை கூழங்கள் அகற்றப்படாமல் இருப்பதும், அழுகிய பழங்கள், பொருட்கள், இறந்த மிருகங்களின் உடல்கள் அகற்றப்படாது இருப்பதனாலும் அப்பகுதிகளில் துர்நாற்றம் வசுவதும், பல தொற்றுநோய்க்கிருமிகள் பெருகி வளரவும் வாய்ப்பாகின்றது. இவையும் எமது சூழலைப் பாதிப்பனவாகும். இத்தகைய பாதிப்புகளிலிருந்து எமது சூழலைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நீயே திருத்திக்கொள். உலகம் தானாகவே திருந்தும் என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கிணங்க முதலில் நாம் ஒவ்வொருவரும் எம்மையும், எம் இல்லத்தையும், எமது சுற்றாடலையும் சுத்தமாகப் பேணப்பழகிக்கொள்ள வேண்டும். இதன் மூலம் நாடு முழுவதும் சுத்தமாக இருக்கும். வீதிகளில் குப்பைகளையும், தேவையற்ற கடதாசிகளையும் வீசுதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். இவற்றைச் சிறுவயதிலிருந்தே நாம் பழகிக்கொள்ள வேண்டும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" அல்லவா? மேலும் தொழிற்சாலைக் கழிவுகள் ஆறுகளிலும், கடலிலும் கலக்காது இருக்க ஆவன செய்ய வேண்டும். அணு ஆயுதப் பாவனையால் ஏற்படும் அழிவுகளையும் நீண்டகால பாதிப்புகளையும் மக்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும். ஜப்பானின் ஹீரோசிமா, நாகசாஹி நகரங்களில் இரண்டாம் யுத்த காலத்தில் போடப்பட்ட அணுகுண்டுகளின் தாக்கம் இன்றும் அப்பகுதிகளில் சூழலைப்பாதித்து வருவது வருந்தத்தக்கதாகும்.

சூழல் என்பது எமது வளம். எமது இயற்கை வளங்கள் பேணப்பட்டுள்ள இடம் எமது சூழலிலே ஆகும். காடழிப்பினால் மழையின்மை, மண்ணரிப்பு, வரட்சி, கடும்வெப்பம் எனும் தாக்கங்கள் ஏற்படுவதுடன் வனவிலங்குகளும் அழிந்து விடுகின்றன. எனவே சூழல் இயற்கை உமக்களித்த செல்வம். அதை அழியாது பாதுகாக்க வேண்டியது மானிடராகிய எம் அனைவரதும் கடமையாகும்.

## 21 பாடசாலைக்குச் சென்ற முதல்நாள்.

ஒவ்வொருவர் வாழ்விலும் சிற்சில சம்பவங்கள் மனதைவிட்டு நீங்காத சம்பவங்களாக நிலைத்து விடுவதுண்டு. எனக்கும் நான் ஆண்டு ஒன்றிலே பாடசாலைக்குச் சென்ற அந்த நாளின் நினைவு இன்னும் நீங்காமல் நிற்கின்றது.

சின்னஞ்சிறுவனாய் விளையாடித்திரிந்த என்னைப் பள்ளியில் என் பெற்றோர் சேர்த்தனர். அன்று தை மாதம் பதினைந்தாம் திகதி, திங்கட்கிழமை. அதிகாலையிலேயே அப்பா என்னை படுக்கையை விட்டு எழுந்திருக்கச்செய்தார். பல்துலக்கி காலைக்கடன்களை முடித்துவிட்டு அம்மா என்னை குளிக்கச்செய்து வண்ண உடை உடுத்தினார். என் மனதினுள் ஒரே ஆனந்தம். என் அண்ணா, அக்கா தினமும் பாடசாலைக்குச் செல்லும் போது என்னையும் அழைத்துக்கொண்டு போகும்படி கேட்பேன். "நீ வளர்ந்ததும் போகலாம்" என்று கூறுவார்கள்.

"ஓ இன்று பாடசாலை போகப்போகிறேனே.......... அப்போ நான் வளர்ந்து விட்டேனா......." எனக்கு ஒரே ஆனந்தம் ஓடித்திரிந்தேன். நேரம் ஆகிவிட்டது என்று அப்பா என்னைக் கூப்பிட்டபோது, என் முதுகில் பாடசாலைக்குரிய புத்தகங்கள் வைத்த பையினை அம்மா மாட்டிவிட்டு, "நன்றாகப் படித்து கெட்டிக்காரனாக வரவேண்டும்." என்று கூறி உச்சி முகந்தார். அப்பாவின் மோட்டார் வாகனத்தில் பாடசாலைக்குச் சென்றேன். வழியில் வீதியில் என்னைப்போல் சிறுவர்களும், என் அண்ணா அக்கா போன்ற பெரியவர்களும் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்குச் சற்றுத் தொலையிலேயே வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்றோம். பாடசாலையை நெருங்கியதும் எனக்கும் ஒரே ஆச்சரியம். ''அப்பப்பா.......! என்னே பிரமாண்டமான..... இந்தளவு பெரிய பாடசாலையிலா நான் கல்வி கற்கப்போகின்றேன்." கட்டிடங்கள் பிரமாண்டமாகவும், அழகாகவும் காணப்பட்டன. பாடசாலை வாயிலில் பெரியதொரு இரும்பிலான கதவு. அதனருகே நீல நிற உடையும் தொப்பியும் அணிந்தபடி காவலர் ஒருவர் நின்றிருந்தார். அவரைக் கடந்து ஓர் மண்டபத்தை அடைந்தோம். அங்கு என்னைப்போல் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுவர்கள் நின்றிருந்தார்கள். எனக்கு விளையாடுவதற்கு இத்தனை தோழர்களா, என வியப்பாக இருந்தது. வண்ண வண்ண உடைகளில் எத்தனை பேர்! வியந்து கொண்டிருந்தேன். அப்போது அப்பா என்னையும் அழைத்துக்கொண்டு ''அதிபர்" என எழுதப்பட்டிருந்த அறையினுள் நுழைந்தார். அங்கு வெள்ளை உடையணிந்து கண்ணாடி போட்டபடி அதிபர் அமர்ந்திருந்தார். ''ராஜா வா வா............ படிக்க வந்திருக்காயா? ''நல்லது" என்ற கூறியபடியே ஏதோ படிவங்களில் அப்பாவிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் ''சரிப்பா....... நல்லாப் படிக்கணும்" என்று அதிபர் என் முதுகில் தட்டிக்கொடுத்தார். ஓர் சேவகன் வந்து என்னை அழைத்துச்செல்ல அப்பா வெளியேறினார். அப்போது தான் எனக்குப் புரிந்தது, இதற்குமேலும் அப்பா வரமாட்டார் என்று அதுவரை இருந்த மகிழ்ச்சியும் ஆனந்தமும் மறைந்தன. ''அப்பா...... அப்பா......! என்று அழத் தொடங்கினேன். அப்பா என் அருகில் வந்து ''ராஜா .....அங்கே பார் ........உன்னைப்போல் எத்தனைபேர் இருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து படிக்கலாம், விளையாடலாம்....... அப்பா மதியம் வந்து அழைத்து போகிறேன், அழாமல் படிக்க வேண்டும்." என்று அன்பாகத் தட்டிக் கொடுத்தபோதுதான் அரைமனதுடன் உள்ளே சென்றேன்.

அங்கு வர்ணந் தீட்டப்பட்ட கதிரைகளும் மேசைகளும் அழகாக வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன எனக்கு முதலே வந்த மாணவர்கள் அங்கு அமர்ந்திருந்தனர். நடுத்தர வயதுடைய சேலை அணிந்த ஆசிரியை ஒருவர் என்னை வகுப்பறை வாசலில் வந்து கையைப் பிடித்து அழைத்துச் சென்று ஓரிடத்தில் அமர்த்தினார். மேலும் சில மாணவர்கள் வந்து கொண்டிருந்தனர். எமது வகுப்பின் முழுக்கதிரைகளும் மாணவர்கள் சேர்ந்து விட்டனர். அப்போது எனது வகுப்பு ஆசிரியை எழுந்து முன்னே வந்து "அன்பான மாணவர்களே! உங்கள் எல்லோரையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நீங்கள் எல்லோரும் நன்றாகப் படித்து ஒழுங்கான கெட்டித்தனமான மாணவர்களாக திகழ வேண்டும். எங்கே உங்கள் பெயர்களை ஒவ்வொருவராக கூறுங்கள் பார்க்கலாம்" என்று கூறவும் ஒவ்வொருவராக எழுந்து பெயர்களைக் கூறினர். எனது முறை வரும்போது நானும் எழுந்து கூறினேன். அதன்பின் சிறிது நேரம் பாடம் நடந்தது. பின் ஒரு மணிச்சத்தம் கேட்டது. அதனைத் தொடர்ந்து எம்மை விளையாட அனுமதித்தார் எமது ஆசிரியை. வகுப்பினுள்ளே விளையாடச் சில பொருட்கள் இருந்தன. எமக்கு விளையாடுவதற்காக எமது ஆசிரியையும் உதவி செய்தார். அரைமணி நேரத்தில் மீண்டும் மணி ஒலித்தது. எம்மை அவரவர் ஆசனத்தில் அமரும்படி ஆசிரியை கேட்டதும் அமர்ந்து கொண்டோம். ஆசிரியை மிகவும் அன்பாக எமக்கு பாடம் சொல்லித்தந்தார். இறுதியில் எல்லோரும் எழுந்து நின்று பிரார்த்தனை செய்தோம். பிரார்த்தனை முடிந்ததும் ஆசிரியைக்கு நன்றி கூறினோம். இன்று இனி வீடு போகலாம் என உணர்ந்து கொண்டேன். சிறிது நேரத்தில் அப்பா வந்தார். என் ஆசிரியையிடம் கூறிவிட்டு அப்பாவுடன் சென்றேன். வீட்டில் அம்மா என்னை அன்போடு வரவேற்றார். பாடசாலை நினைவு மகிழ்வினைத் தந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் எப்போ விடியும், மீண்டும் எப்போ பாடசாலைக்குச் செல்வேன் என்று ஆவலாக இருந்தது. பாடசாலைக்கு நான் சென்ற முதல்நாள் இன்றும் என் நெஞ்சில் நீங்காது நிலைத்து நிற்கின்றது.

## 22 ஆலயம் தொழுவது சாலவும் நன்று

**கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.**

என்பது பழமொழி

ஆம்! கோவில் என்பது எமது உள்ளத்தினை தூய்மைப்படுத்தவும், நல்ல நினைவுகளையும், நல்ல சிந்தனைகளையும் ஏற்படுத்தும் ஓர் இடமாக உள்ளது. இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்ற போதிலும், எம்மனதை ஒரு நிலைப்படுத்தி ஒரு முகமாக இறை சிந்தனையுடன் இறைவனை வணங்க ஆலயம் சிறந்த இடமாகும். எமது முன்னோர்கள் காலத்தில் ஆலயங்களே பிரதான மக்கள் மையங்களாக சமூக மையங்களாக விளங்கி வந்தன.

மக்களை நல்வழிப்படுத்தவும், கல்வி புகட்டவும் பொருளுதவி, கடனுதவி, நல்லாலோசனைகள் வழங்கவும் ஆலயங்கள் உதவி வந்தன. இன்றுங்கூட ஊரின் மையத்தில் உள்ள ஆலயங்கள் மக்களின் வழிபாட்டுத்தலமாக மட்டுமன்றி சமூக நடவடிக்கைகளின் மையங்களாகவும் விளங்குகின்றன.

ஆலயங்களில், இறைவனின் கருணை மிகுந்த திருவுருவம் எமது மனதின் சஞ்சலத்தை போக்குகின்றன. அங்கு நடக்கும் பூசைகளும், கிரியைகளும் என் மனதின் இருளை அகற்றி ஒளியைக் கொடுக்கின்றன. எமது மனதில் அழுக்கு நீங்கி நல்லன புகுந்து கொள்கின்றன. கோவிலில் தொண்டு செய்யும் போது பிறருக்கு தொண்டு செய்யும் மனப்பக்குவம் ஏற்படுகின்றது. பல மக்களுடன் பழகி விட்டு கொடுக்கும் மனப்பாங்கு வளர்கின்றது.

இவை மட்டுமல்ல, ஆலயத் திருவிழா நிகழ்ச்சிகளில் மக்கள் ஈடுபடும்போது நிர்வகிக்கவும் பயிற்சி ஏற்படுகின்றது. சமயம் மனிதனை முழுமையடையச் செய்கின்றது. சமய வழிபாட்டிற்கு ஆலயமே சிறந்த இடமாகும். எனவே, ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனப்படுகின்றது. ஆன்மீக வளர்ச்சிக்கும், தெய்வீக விருத்திக்கும் மட்டுமன்றி மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் ஆலயம் நல்வழி காட்டுகின்றது.

நமது மதத் துறவிகள், மன்னர்கள், முதாதையர்கள், பெரியார்கள் என யாரை எடுத்துப்பார்க்கினும் ஆலய வழிபாட்டினால் உயர்வு கண்டவர்களாகவேயுள்ளனர். இந்தியாவில் மட்டுமன்றி நம் நாட்டிலும் இன்னும் பல பிற பணிகளிலும் ஈடுபட்டு நற்பண்பும், நல்லொழுக்கமும் மிக்கவர்களாக நாட்டில் நற்பிரசைகளாக வளரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 எங்கள் வீட்டில் நடந்த ஓர் சம்பவம்.

அது கடும் மழைக்காலம். என் அண்ணா வெளிநாடு செல்வதற்காக வீட்டிலிருந்து அன்று இரவு கொழும்பிற்குப் புறப்பட்ட நாள். பகல் முழுவதும் மழைபெய்து கொண்டே இருந்தது. மதியம்தான் ஒருவாறு மழை விட்டிருந்தது. அண்ணாவுக்கு தேவையான உடைகளையும் உணவுப்பொருட்களையும் அக்காவும் அம்மாவும் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தனர். அண்ணாவை விமானம் ஏற்றும் ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக ஒரு கிழமைக்கு முன்பாகவே அப்பா கொழும்பு சென்று விட்டார். மாலை ஆறுமணிக்கு பேருந்து நிலையத்திற்கு செல்ல வேண்டும். பேருந்திலேயே அண்ணா கொழும்பு செல்கின்றார். ஐந்து முப்பது மணியளவில் எமது ஊரின் பேருந்து நிலையத்திற்கு அண்ணாவை அழைத்துக்கொண்டு அம்மா அக்கா நான் மூவரும் சென்றோம். இங்கு சரியாக ஆறுமணிக்கு கொழும்பு செல்லும் பேருந்து வந்து வின்றது. அண்ணாவை உச்சி முகந்து அம்மா ஆறுதல் கூறினார். அண்ணாவின் விழிகள் பனித்தன. எனினும் ஒருவாறு அடக்கிக்கொண்டு புறப்பட்டார். பேருந்து மறையும்வரை கனத்த மனதுடன் கையசைத்தபடியே நின்றோம். எம் விழிகள் போலவே வானமும் அழத்தொடங்கியது. விரைவாக வீட்டை அடைந்தோம். மழையினால் உடை முழவதும் நனைந்து போயிருந்தது. உடையை மாற்றிவிட்டு இருந்தபோது எம் மூவருக்கும் அண்ணாவின் நினைவுதான். இரவு உணவு கூட உண்ண முடியவில்லை. எனினும் ஏதோ உண்டுவிட்டுப் படுத்துக்கொண்டோம்.

இரவு ஒரு மணியளவில் வீட்டின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. மழையோ வானைப்பிளந்து கொட்டியது. பலத்த காற்றும் வீசிக்கொண்டிருந்தது. இடையிடையே மின்னல் கண்ணைப் பறித்தது. இந்த நடுநிசியில் இப்படி யார் கதவைத் தட்டுவது என நினைத்தபடி எழுந்துகொண்டோம். மின்விளக்கைப் போட்டபோதுதான் மின்சாரம் இல்லாதது தெரிந்தது.

எமக்குப் பயம் பிடித்துக்கொண்டது. ஆனால் கதவில் "அம்மா, அம்மா! கதவைத் திறவுங்கள்" எனும் சத்தம் கேட்டது. "யாரது" என துணிவை வரவழைத்து அம்மா உரத்த குரலில் கேட்டார். "அம்மா நான் மோகன் வந்திருக்கிறேன். கதவைத்திறவுங்களம்மா" என்றது அந்தக் குரல் எனது அண்ணாதான் மோகன். ஆனால் அண்ணாவை இன்றுதானே கொழும்புக்கு அனுப்பிவிட்டு வந்தோம். ஒரு கிழமைக்கு முன்பு அயல் ஊரில் வீட்டுக்காரரின் குரலில், வீட்டுக்காரர் பெயரைச் சொல்லியே நடுநிசியில் கதவைத் திறந்து கொள்ளையர் கொள்ளையடித்துவிட்டுப் போயிருந்தனர். எமக்கு விளங்கிவிட்டது. இது கொள்ளையர்தான். மின்சாரத்தையும் வெட்டிவிட்டு நடுச்சாமத்தில் வந்துள்ளனர். மாறிமாறி இரு குரல்கள் கேட்கின்றன. கடவுளை வேண்டிக் கொண்டோம். மழையும் விட்டபாடில்லை அந்தக் கொள்ளையர் ஏதோ ஏதோவெல்லாம் கூறுகின்றனர். எதுவும் மழையின் இரைச்சலில் தெளிவாக கேட்கவில்லை. என் பெயரையும்கூட அவர்கள் கூவி அழைத்தனர். எனக்கு அழுகையே வந்துவிட்டது. அம்மாவை நானும், அக்காவும் இறுகக்கட்டிக்கொண்டோம். அம்மா இறைவன் நாமத்தைக் கூறத் தொடங்கினார். நானும் அக்காவும் அப்படியே கூறினோம். சிறிது நேரத்தில் கொள்ளையர் சத்தத்தைக் காணவில்லை. மழை விடாது பெய்துகொண்டேயிருந்தது. தூங்காமலே விடியும்வரை விழித்திருந்தோம். எமது கிராமத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வீடும் மிகமிகத் தொலைவிலேயே உள்ளன. விடிந்ததும் கூடி எமது பயம் போகவில்லை. நன்கு விடிந்து ஆறுமணியாகிய பின்பே அம்மா வெளிக்கதவைத் திறந்தார்.

என்ன ஆச்சரியம்! வீட்டின் வெளிக் கூடத்தில் என் அண்ணாவும் வேறு ஒரு நபரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். அம்மாவின் கண்களில் நீர் துளித்தது. "மோகன் ........மோகன் என்னப்பா" என்று அண்ணாவை எழுப்பினார். "அம்மா" என்றபடி கண்விழித்த அண்ணாவை நெருங்கி சூழ்ந்து கொண்டோம். "அம்மா இரவு நடுவழியில் கடும் மழையினால் வீதி எங்கும் வெள்ளம். வாகனம் தொடர்ந்து போக முடியாது திரும்பிவிட்டது. இந்த நண்பரும் இன்னும் தொலைவில் இருப்பவர். இரவு தங்கலாம் என நான்தான் இங்கே கூட்டிக்கொண்டு வந்தேன்." என்று அண்ணா கூறியதும் ஒரு புறம் வேதனையாகவும் மறுபுறம் சிரிப்பாகவும் இருந்தது. இரவின் பயமும், மழையின் இரைச்சலும், காற்றும், இடியும், மின்வெட்டும், எம்மை இவ்வளவு தூரம் பயத்தின் பிடியில் வைத்து எம் அண்ணாவையே அடையாளம் காணமுடியாது செய்து விட்டதே என்று வியப்பாக இருந்தது.

## 24 எனது கிராமம்.

எனது கிராமம் கொக்குவில். யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகர்போல விளங்கும் யாழ் நகருக்கு அண்மையில் அமைந்துள்ளது. கொக்குவில் கிராமத்தினூடாக யாழ்நகரில் இருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் காங்கேசன்துறை வீதி செல்கின்றது. இவ்வீதிக்கு மேற்கே உள்ள பகுதி மேற்குக் கொக்குவில் எனவும், கிழக்கே உள்ள பகுதி கிழக்கு கொக்குவில் எனவும் வழங்கப்படுகின்றது.

எனது கிராமத்தின் பிரதான தொழில் விவசாயம். இது தவிர அரசாங்க உத்தியோகத் தர்களும் வியாபாரிகளும் பிற சேவைத்தொழில் செய்வோரும் இன்னும் பலரும் உள்ளனர்.

பச்சைப்பசேல் என்று பரந்த பாய் விரித்தாற்போல் எங்கு பார்த்தாலும் தோட்டமும், காயும் பிஞ்சுகளும் தான். எங்கள் பூமி வானம் பார்த்த பூமி, வானம் பொய்க்காது. பொய்த்தாலும்கூட கிணற்றுநீர் மூலம் பயிர்ச்செய்கை நடைபெறுகின்றது. கத்தரி, பயிற்றங்காய், வெண்டி, தக்காளி, வெங்காயம் போன்றனவும் மலைநாட்டு காய்கறிகளான கோவா போன்றனவும் எங்கள் கிராமத்தில் பயிர் செய்யப்படுகின்றன. எங்கள் கிராமத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள் அயலில் உள்ள திருநெல்வேலியில் உள்ள சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.

பொன் விளையும் பூமி எங்கள் பூமி. மண்ணைக் கிளறி பொன்னை எடுக்கும் கமத்தொழில் எங்கள் தொழில் என்பதால் எங்கள் கிராமத்தில் சீதேவி வாசம் செய்கிறாள். விவசாயம் மட்டுமன்றி அரச உத்தியோத்தர்கள் பலரும் வியாபரிகளும் உள்ளனர். வைத்தியர், சட்டம் முதற்கொண்டு பல்வேறு சேவைகளை வழங்குவோரும் உள்ளனர்.

எங்கள் ஊரில் பாடசாலைகளும், கல்லூரிகளும் உள்ளன. தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றும் உள்ளது. இதனால் கல்வியின் உயர்வு ஓங்கியே உள்ளது. எமது ஊரில் புகையிரத நிலையமும் உண்டு. விளையாட்டுக்கழகங்கள், இளைஞர் முன்னேற்றக்கழகங்கள், வாசிகசாலைகள் என்பனவும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பர். எங்கள் ஊரிலும் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம், வைரவர் ஆலயம் ஆகியவற்றுடன் வேறு மத ஆலயங்களும் உண்டு. ஊர்த்திருவிழாக்களின்போது ஒவ்வோர் இல்லத்திலும் விழாக்கோலத்தைக் காணலாம்.

இனரீதியாக பெருமளவில் தமிழ் மக்களே வாழ்கின்றபோதிலும் மத ரீதியாக பல்லின மதங்களைச் சார்ந்த மக்களும் வாழ்கின்றனர். எனினும் எம்மிடையே பேதங்கள் இல்லை. எல்லோரும் ஒரே மதம் என்பதே எமது எண்ணம் ஆகும்.

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பது எம் ஊரின் தாரக மந்திரமாக மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் ஊறி உள்ளது. "ஒன்றே நமது குலம், ஒற்றுமையே நமது மதம்" என எமது ஊரை எண்ணிப் பெருமையடைகின்றேன்.

## 25 வானொலியின் பயன்கள்.

வானொலி இன்று நமக்குக் கிடைத்ததோர் வரப்பிரசாதம். உலகின் எங்கெங்கோ எல்லாம் நடக்கும் செய்திகளைக் காற்றின் ஊடே காவிவந்து நம் காதுகளில் தரும் ஓர் நண்பன் வானொலி. ஆம்! திக்கெட்டும் நிகழும் செய்திகளை எம்மால் உடனுக்குடன் அறிய முடிகின்றது எனின், அதற்கு உதவுவன வானொலியும் தொலைக்காட்சியுமாகும்.

உலகின் செய்திகளை, உலகத் தலைவர்களது முடிவுகளைப் பற்றி பேச்சுவார்த்தைகள் பற்றி, மக்கள் செய்திகள் பற்றி மட்டுமன்றி விளையாட்டு செய்திகள் என்பனவற்றையும் வானொலி எமக்கு தெரிவிக்கின்றது.

கல்வி பயிலும் மாணவர்களாகிய எமக்கு கல்விச் சேவைகளையும், பொது அறிவுகளையும் உலக நடப்புக்களையும் உடனுக்குடன் அறியத்தருவது வானொலியாகும்.

இவை மட்டுமன்றி எமது உற்றார் உறவினர் நண்பர்களது பிறந்ததின வாழ்த்துக்களையும், பெருநாள் வாழ்த்துக்களையும் சுமந்து வந்து வானலைகளின் ஊடே எம்மை மகிழ்விக்கின்றது.

எனக்குத் தெரிந்தவர்கள் இறந்துவிடினும்கூட அதனை எமக்கு வானொலி மூலமாவது அறிந்து கொள்ள இன்று வசதியுள்ளது.

இயற்கையின் சீற்றம் எம்மை சில சமயம் பேரழிவிற்கு உட்படுத்துவதுண்டு.இவ்வாறான இயற்கை அழிவுகள் ஏற்படும் முன்னரே வானிலை அறிக்கைகள், மீனவர்களுக்கான வானிலை அறிக்கைகள் என்பவற்றைக் கூறுவதன் மூலம் நாம் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து எம்மையும், எம் உடமைகளையும் பாதுகாக்க வானொலி உதவுகின்றது என்றால் அது மிகையாகாது.

பொது அறிவுக்கும், பாதுகாப்பிற்கும் மட்டுமல்ல எமக்கு பயனுள்ள பொழுதுபோக்கிற்கும் உதவுவது வானொலியே. தனிமையில் இருந்து தவிக்கும் பலரின் உற்ற நண்பனாக வானொலி இருக்கின்றது. நாடகங்கள், பாடல்கள் சிறுவர் நிகழ்ச்சிகள் போன்ற பலவற்றின் மூலம் எமது திறமைகளை உலகெங்கும் அறிவிக்கும் சாதனம் வானொலியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத நிகழ்ச்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், தேசிய நிகழ்ச்சிகள் எங்கு நடைபெறும் அங்கு நேரடியாகச் சென்று பங்குபெற எம்மால் முடியாத சமயங்களில் வானொலி நிலையத்தினர் அவற்றை "நேரடி ஒலிபரப்பு" எனும் உடனடி வர்ணனை மூலம் நேருக்குநேர் பார்ப்பதுபோல் எம் மனக்கண்முன்னே கொண்டுவந்து மகிழ்விக்கின்றனர்.

எனவே எமக்கு உற்ற நண்பனாய், ஆசிரியராய், ஆலோசகராய் இன்னும் பல வழிகளில் எம் வாழ்வோடு இணைந்துவிட்ட வானொலி எமக்கு விஞ்ஞானம் வழங்கிய ஓர் வரப்பிரசாதமேயாகும்.

## 26 எனது பேனா

எனது பன்னிரண்டாவது பிறந்ததினத்தின்போது பலர் பலவகையான பொருட்களை பரிசாகத் தந்தனர். எனினும் என் தந்தை எனக்களித்த பேனாவே என்னைக் கவர்ந்த பரிசாகும்.

கருநீல நிறத்தில், அழகிய சிறுபெட்டியில் என்னை வந்தடைந்தது என் பேனா. அன்று இரவு தூங்கவே மனம் வரவில்லை. என் அழகிய பேனாவை திரும்பத் திரும்ப பார்த்துக்கொண்டேயிருந்தேன். மைவிட்டு எழுதும் ஊற்றுப்பேனாவாக இருந்ததால் முதல் தடவையாக என் தந்தையே அதற்கு மைவிட்டுத்தந்தார். முதல் தடவையாக அதனால் எழுதினேன். எவ்வளவு அழகாக எழுதியது. எனக்கு எழுதுவதை நிறுத்தவே மனம் வரவில்லை. உடனேயே ஒரு கட்டுரை எழுதினேன். மறுநாள் பாடசாலைக்குச் சென்று ஆசிரியரிடம் என் பேனாவைக் காட்டினேன். அவர் அதனைப் பாராட்டினார். அதன் மூலம் எழுதிய கட்டுரைகளையும் ஆசிரியரிடம் காண்பித்தேன். அதனைப்படித்த ஆசிரியர் பாராட்டியதுடன் வகுப்பில் அதனை வாசித்துக்காட்டும்படி கூறினார். ஆசிரியரின் பாராட்டும் உற்சாகமும், என் சக மாணவ நண்பர்களது வாழ்த்துக்களும் என்னை ஊக்குவித்தன. அன்று முதல் என் பேனாவின் துணையுடன் பலவேறு கட்டுரைகளையும கவிதைகளையும் பாடசாலைச் சஞ்சிகைகளிலும் வாரப்பத்திரிகைகளிலும் எழுதி வருவதுண்டு. பலரின் பாராட்டுதல்களையும் பெற்று வருகின்றேன்.

கல்வியில் என் முன்னேற்றத்திற்கும் என் பேனாவே துணைபுரிகிறது என்பேன். இதன் மூலம் பரீட்சை எழுதத் தொடங்கியதிலிருந்தே நானே வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்கின்றேன். என் கையெழுத்தும் அச்சுப்போல் அழகாக உள்ளதென ஆசிரியர் பாராட்டினார். இத்தனை பாராட்டும் எனக்கா இல்லை, இவை என் அழகிய பேனாவைச் சாரவேண்டும். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கையெழுத்துப் போட்டியில் மாவட்ட ரீதியில் எனக்கு முதலிடத்தைப் பெற்றுத்தந்தது என் பேனா. பாடசாலையில் மட்டுமன்றி எமது ஊரின் கிராமிய இளைஞர் சங்கத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டுவிழாவின்போது சிறுவர்கட்கு நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் எனக்கு முதலிடத்தைப் பெற்றுத் தந்தது என்பேனா.

இந்தப்பேனா என்னை வந்து சேர்ந்தது முதல் எனக்கு பெயரும் புகழும் வெற்றியும் கிடைத்துக் கொண்டயிருந்தன. என் புகழுக்கும் வெற்றிகளுக்கும் காரணமான பேனா மீது எனக்கு அன்பும், கவனமும் அதிகமாகியது. எப்போதும் என் சட்டைப்பையில் என்னுடனேயே பாதுகாத்து வந்தேன். யாருக்கும் இதனை இரவல் கொடுத்ததே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று எனக்கு வேதனை மிகுந்த நாள். ஆம்! பாடசாலையில் வந்து பார்த்தபோது திடுக்குற்றேன். என் சட்டைப்பையில் என் பேனா இல்லை. திடுக்குற்றேன். என் கண்கள் என்னை மீறிப் பனித்தன. என்னை அறியாமலேயே என் விழிகள் பொழியத்தொடங்கின. நண்பர்கள் ஆறுதல் கூறினார்கள். "வழியில் எங்காவது விழுந்திருக்கும், அல்லது வீட்டில் இருக்கும் பயப்படாதே" என்றனர். என்னால் தேறமுடியவில்லை. என் மனது ஒரு நிலையில் இருப்பதாக இல்லை. பாடசாலை ஆரம்பிப்பதற்கு நேரம் இருந்தமையால் ஆசிரியரிடம் கூறிவிட்டு என் நண்பனுடன் வந்த வழியே என் உயிர்ப்பேனாவைத் தேடிக்கொண்டு சென்றேன். பிள்ளையைத் தொலைத்த தாயின் மனம் போல் என் மனம் பதைபதைத்துக் கொண்டேயிருந்தது. மனதில் இறைவனைப் பிரார்த்தித்தபடி வாயில் இறைமந்திரத்தை உச்சரித்தபடி வீதியில் குனிந்து பார்த்தபடியே ஓட்டமும் நடையுமாக போய்க்கொண்டிருந்தேன். நீண்ட தூரம் போயும் என் பேனாவை வழியில் எங்கும் காணவில்லை. எனக்கு அழுகையை அடக்கவே முடியவில்லை வீடுவரை வந்துவிட்டேன். என் நம்பிக்கை முழுவதுமே அற்றுப்போய்விட்டது. கதவைத்திறந்து உள்ளே நுழைந்த என்கோலத்தைக் கண்ட என் அன்னை பதைபதைத்துப் போனார். அன்னையைக் கண்டதும் கத்தியே அழத்தொடங்கிவிட்டேன். என்னை ஆதரவாக அணைத்துக்கொண்ட என் அம்மா "ராஜா...... என்னப்பா என்ன ஆச்சு.....ஏன் இப்படி அழுகிறாய்......உடம்பு இப்படிக் கொதிக்கிறதே......காய்ச்சலால்" என்று வேதனையுடன் கேட்டபோதுதான் எனக்கு காய்ச்சல் ஏற்பட்டதை உணர்ந்தேன். ஆயினும் என் பேனாவை இழந்த வேதனையை என்னால் அன்னைக்கு கூறமுடியவில்லை. என் நண்பனே நான் பேனாவை தொலைத்ததை அம்மாவிடம் கூறினான். அம்மா என்னை கதிரையில் உட்கார வைத்து "இங்குதான் உன் மேசையில் இருக்கும், தேடிப்பார்க்கலாம்" என்று கூறி என் மேசைப்பக்கம் நகர்ந்து தேட ஆரம்பித்தபோது என் அம்மாவுடன் நண்பனும் இணைந்து கொண்டான். ஆயினும் கூடத்தின் மூலையில் தன் விளையாட்டுப்பொருட்களுடன் விளையாடிக்கொண்டிருந்த என் மூன்று வயதுத்தங்கை வந்து என் அருகில் "அண்ணா அழறியா" என்று தன் பிஞ்சுக்கரங்களால் என் கண்களைத் துடைத்தாள். அப்போதுதான் பார்த்தேன், என் தங்கையின் கைகளில், சட்டையில் எல்லாம் பேனாவின் மை.

"அம்மா" என கூவியபடி தங்கை விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்கு ஓடிச்சென்றேன். ஆம்! அங்கே என் பேனா கிடந்தது. ஆசையுடன் அதனை எடுத்து என் கண்களில் ஒற்றிக்கொண்டேன். இப்போது ஆனந்தத்தில் என் விழிகளில் நீர் வழிந்தது. என் மகிழ்வைக் கண்ட அம்மாவும், நண்பனும் மகிழ்ந்தனர். எதுவும் புரியாது நான் அழுவதைக்கண்டு வேதனைப்பட்ட என் குட்டித்தங்கை நான் சிரிப்பதைக் கண்டு ஏதோ உணர்ந்து கைதட்டி சிரித்தாள். என் உடம்பின் காய்ச்சல் எங்கு பறந்ததோ தெரியவில்லை. அப்போதுதான் நேரத்தைப்பார்த்தேன் பாடசாலை தொடங்கப் பத்தே நிமிடங்கள் தான் இருந்தது. நண்பனும் நானும் அம்மாவிடம் விடைபெற்று மகிழ்வுடன் பாடசாலைக்கு ஓடியே சென்றோம். வழியில் என் பேனாவை திரும்பப் பெற்றுத் தந்த இறைவனுக்கு மனதார நன்றி கூறிக் கொண்டே சென்றேன்.

இன்னும் ஒரு மாதத்தில் எனது பதின்மூன்றாவது பிறந்ததினம். ஆனாலும் அது என் பேனாவின் முதலாவது பிறந்ததினம். அதனை கொண்டாடுவதற்கு நாட்களை ஆவலுடன் எண்ணிக்கொண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 விஞ்ஞான வளர்ச்சியின் பயன்கள்.

கல்லையும் கல்லையும் உரசி தீயைக் கண்டு பிடித்ததிலிருந்தே, மனிதனின் கண்டுபிடிப்புகள் ஆரம்பித்தன. அன்றிலிருந்து இன்றுவரை விஞ்ஞானம் வானளாவி வளர்ந்து விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே விந்தைகள் செய்து கொண்டிருக்கின்றன.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று எமக்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டுள்ளன. மனிதன் கருவிலே தோன்றிய காலத்திலிருந்து அவனது ஆயுள் முடிந்த பின்பு விஞ்ஞானத்தின் பணி தொடர்வதைக் காண்கின்றோம்.

மருத்துவத்துறையில் நோய்களைக் கண்டுபிடிப்பதற்கும், கண்டு பிடித்தபின் அவற்றைக் குணப்படுத்துவதற்கும், விஞ்ஞான உபகரணங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனால் இன்று இறப்புக்கள் குறைந்து மக்களது வாழ்க்கைத் தரம் உயர்கின்றது. வருமுன் காப்பது சிறந்ததல்லவா?

இதற்கும் விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும், மருத்துவ ஆராய்ச்சி முடிவுகளும் உதவுகின்றன.

கல்வித்துறையில் இன்று விஞ்ஞானத்தின் பங்களிப்பு அளப்பரியது. தொலைக்காட்சி வானொலி மட்டுமன்றி கணனியின் உபயோகம், கல்விக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைகள் யாவும் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகளேயாகும்.

போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் ஆற்றிவரும் சேவை குறிப்பிடத்தக்கது. பரந்த உலகம் இன்று சுருங்கியது. போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியாலேயாகும். உலகின் எப்பாகத்திலிருந்தும் நினைத்தவுடன் நினைத்தவிடத்திற்கு சென்றுவிடக் கூடியதாயிருப்பது விரைவான போக்குவரத்து வசதிகளாலேயாகும். விண்வெளிப் பயணங்களும், கோள்கள் வானமண்டலங்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் விஞ்ஞானத்தின் விருத்தியினாலேயாகும்.

விவசாயத்துறையில் நவீனமுறைகள் புகுத்தப்பட்டு விளைச்சல் பெருகியிருக்கிறது. இயற்கை அழிவுகள் முன்கூட்டியே அறியப்பட்டு தவிர்க்கப்படுகின்றன பாதுகாக்கப்படுகின்றன. விளைபொருட்கள் விளைந்தபின் நவீன முறைகளில் பாதுகாக்கப்படுகின்றன. சமையலிலும் இன்று அடுப்புக்கள், மின்சாரத்தினால் இயங்கும் அரைக்கும் கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள் எனப் பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விளையாட்டுத்துறையிலும், பொழுதுபோக்குத் துறையிலும் இன்று நவீனமயம் புகுந்துள்ளது. மக்களது பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இன்று பெருமளவிற்கு விஞ்ஞானத்தின் உதவியால் விரைவாகவும் இலகுவாகவும் செய்து முடிக்கப்படுவதுடன் பொருட்களின் உற்பத்தியும், தரமும் உயர்ந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் நன்மைபுரிந்துவரும் விஞ்ஞான வளர்ச்சியே சில சந்தர்ப்பங்களில் மனிதனின் அழிவுக்கும் காரணமாகிவிடுகின்றது. போர் ஆயுதங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுஆயுதங்கள், யுத்த விமானங்கள், யுத்தக்கப்பல்கள், துப்பாக்கிகள், ஏவுகணைகள் என மனிதகுலத்தின் பேரழிவுக்கு வழிவகுக்கும் இவையும் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளே. இவை இன்று உலகில் பல்வேறு பகுதிகளிலும் அழிவினை விளைவித்து வருவதனை வேதனையுடன் கண்டுவருகின்றோம். தீயவற்றை விடுத்து நல்லனவற்றைப் பகுத்தறிந்து, அன்னப்பறவை நீரைத் தவிர்த்துப் பாலை அருந்துவதுபோல் நாமும் விஞ்ஞானம் தரும் நன்மைகளை பயன்படுத்தி நன்மைபெற வேண்டுமே ஒழிய தீயனவற்றிற்கு இடம் தரக்கூடாது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனிதகுலத்தின் நல்வாழ்விற்கு பயன்படவேண்டும். விஞ்ஞானத்தின் துணையுடன் வாழ்வு வளம்பெற வேண்டும். எனவே விஞ்ஞானத்தின் விருத்தி நல்ல வழியில் பயன்படுத்தப்பட வேண்டும்.

## 28 பாடசாலை வாரம்

கடந்த வாரம் நாடு முழுவதிலும் பாடசாலைவாரம் அனுஷ்டிக்கப்பட்டது. நாமும் எமது கல்லூரி அதிபர் தலைமையில் பாடசாலை வாரத்தை அனுஷ்டித்தோம். ஒரு கிழமைக்கு முன்பு ஒளியிழந்து காணப்பட்ட எமது பாடசாலை இன்று பளிச்சென்று தூய்மையாகக் காணப்படுகின்றது.

பாடசாலை வாரம் ஐந்து நாட்கள் அனுஷ்டிக்கப்பட்டது. கல்லூரியின் அனைத்து மாணவர்களும் விருப்புடனும், கடமையுணர்வோடும் பங்கெடுத்துக்கொண்டனர். முதல் நாள் பாடசாலை வளவிலும் மைதானத்திலும் காணப்பட்ட பற்றைகளும், புற்களும், முட்களும் வெட்டி அகற்றப்பட்டன. மைதானத்தில் காணப்பட்ட கற்கள், சிறுதடிகள் யாவும் அகற்றப்பட்டு சுத்தமாக்கப்பட்டன. பாடசாலைப்பூந்தோட்டத்தில் தேவையற்ற செடிகள் அகற்றப்பட்டு புதிதாக மலர்ச்செடிகள் நாட்டப்பட்டு பாத்திகள் செப்பனிடப்பட்டன.

இரண்டாவது நாள் பாடசாலை கட்டிடங்கள், வகுப்பறைகள், கூரைகள், தூசிகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வகுப்பறையிலும் வெளிச்சுற்று மதிலிலும் காணப்பட்ட உடைப்புகளும் திருத்தப்பட்டன.

மூன்றாவது நாள் பாடசாலை சுற்றுமதில், வகுப்பறை மற்றும் அதிபர் அறை, ஆசிரியர் இளைப்பாறும் அறை மற்றும் பிற கட்டிடங்களுக்கும் வண்ணப்பூச்சு பூசப்பட்டது. பாடசாலைச் சுற்றுமதிலின் வெளிப்புறத்தில் பாடசாலையின் விருத்தி, நகரசுத்தம், மாணவரின் கல்வி வளர்ச்சி மற்றும் நாட்டு அபிவிருத்தி பற்றிய நவீன ஓவியங்களும் மாணவர்களால் தீட்டப்பட்டன. வகுப்பறைகளின் கரும்பலகைகள் நிறந்தீட்டப்பட்டதுடன் வகுப்பறைகள் ஒவ்வொன்றிலும் மாணவர்களாகிய எம்மை நல்வழிப்படுத்தும் முதுமொழிகளும், ஆன்றோர் வாக்குகளும் எழுதப்பட்டன.

நான்காம் நாள் எமது ஊரில் ஒவ்வோர் வீடாகச் சென்று மாணவர்களால் பாடசாலை அபிவிருத்திக்காக நிதி சேகரிக்கப்பட்டது. வீடுகளிலும் சென்ற இடங்களிலும் மாணவர்களாகிய நாம் சில பணிகளைச் செய்து கொடுத்து சன்மானம் பெற்றுக்கொண்டோம். இவ்வாறு மாணவர்கள் பல குழுக்களாகப்பிரிந்து ஊரின் சகல பாகங்களிலும் சென்று நிதி திரட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் நாளன்று மாணவர்களால் திரட்டப்பட்ட நிதி எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் மாணவரால் ஒப்படைக்கப்பட்டது. இவ்விழாவின்போது அதிபர் ஆசிரியர்கள் யாவரும் சிறப்பாக பாடசாலை வாரத்தை அனுஷ்டித்து பாடசாலையைச் சுத்தமாக்கி, அழகுற செய்தமைக்கும், சிரமதானம் செய்து ஊர்மக்களிடம் பணம் சேகரித்து பாடசாலை நிதிக்கு வழங்கியமைக்கும் மாணவர்களாகிய எம்மைப் பாராட்டியதுடன், எமது கல்வி வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் வாழ்த்துக்களையும் கூறினர்.

கல்வி கற்கும் மாணவர்கட்கு பாடசாலை கோவில் போன்றது. அதனை பாதுகாத்து மதிப்பளித்து பேணவேண்டியதும் அப்பாடசாலையின் புகழ் ஓங்கும் வண்ணம் சிறப்பாக கல்விகற்று முன்னேற வேண்டியதும் மாணவராகிய எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

## 29 ''சிறுதுளி பெருவெள்ளம்''

சிறுதுளி பெருவெள்ளம் சிறு சேமிப்பு பெருந்தொகையாக மாறும் என்பதனை உணர்த்தவே இப்படி நம் முன்னோர் சொல்லிவைத்துச் சென்றனர். சிறு வயதிலிருந்தே நாம் சேமிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். எம் உழைப்பும் வருமானமும் என்றும் நிலையானதொன்றோ, எம்மிடம் செல்வம் குவிந்திருக்கும் போது பழுத்த மரத்தை நாடிவரும் பறவைகள்போல் நாடிவரும் சுற்றமும் சூழலும் நம்மிடம் அச்செல்வம் நீங்கி துன்பம் சூழும்போது கூடி நிற்பர் என்றோ எண்ணிவிட முடியாது.

எனவே எமது அந்தர ஆபத்திற்கு எமக்குக் கைகொடுப்பது எம் சேமிப்பே ஆகும். தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து சிக்கனமாகச் செலவு செய்து வருமானத்தில் ஒரு பகுதியையாவது சேமிக்க வேண்டும். தினமும் சிறுகச் சிறுக சேமிப்பது எம்மையறியாமலேயே பெரிதாக வளர்ந்துவிடும். எம் ஆபத்தில் கைகொடுக்கும். நாம் யாரிடமும் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படாது எமக்கு கைகொடுப்பதுவும் எம் சேமிப்பு.

தனி ஒரு மனிதனுக்கோ, ஒரு குடும்பத்திற்கோ குடும்பங்கள் பல சேர்ந்த ஒரு சமுகத்திற்கோ, சமூகங்கள் பல சேர்ந்துள்ள ஓர் நாட்டிற்கோ சேமிப்பு அவசியம். சேமிக்க பல வழிகள் உள்ளன.

வீட்டில் சிறிய சேமிக்கும் உண்டியலில் சிறுவர்கள் பணத்தைச் சேமிப்பதுண்டு. தபாலகங்கள், சேமிப்பு வங்கிகள், சிறுவர் சேமிப்பு நிதியங்கள் மூலமாகச் சேமிக்கலாம். வங்கிகள் மூலம் சேமிப்பது இரு நன்மைகளைக் கொடுக்கின்றன. ஒன்று, எமது பணம் நாட்டின் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கும் முதலீடாக வங்கி மூலம் பயன்படுத்தப்படுகின்றது. மற்றயது வங்கியில் எமது சேமிப்பின் அளவிற்கு ஏற்ப வட்டியுடன் எம்மையறியாமலேயே எம் பணம் வளர்கின்றது. எனவே எம் சேமிப்பு எமக்கு மட்டுமல்ல எம் நாட்டின் விருத்திக்கும் உதவுகின்றது.

எமது சேமிப்பு எமக்கு மட்டுமல்ல எம்மைப்போல் பலரின் ஆபத்திற்கும் உதவும் என்பதுவும் உண்மை. அண்மையில் இது பற்றிய ஓர் அனுபவம் எனக்கு ஏற்பட்டது. ஆம்! அன்று வானும் காற்றும் கங்கணம் கட்டிக்கொண்டு சீறிக்கொண்டன. புயலுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்தது. வெள்ளம் பாய்ந்தது. மரங்கள் முறிந்தன. வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 சேர். பொன். இராமநாதன்.

1851ம் ஆண்டு சித்திரை பதினாறாம் திகதி யாழ்ப்பாணம் மானிப்பாயிலே பொன்னம்பலவாண முதலியாரின் அருந்தவப் புதல்வனாகப் பிறந்தார் இராமநாதன். ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி முதலியவற்றைக் கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றார். உயர்கல்வியில் ஒரு பகுதியை சென்னையிலும் நியாயவாதிக்குரிய சட்டப்படிப்பை இங்கிலாந்திலும் கற்றுச் சிறந்த சட்டவல்லுனராகத் தன் 20 வது வயதிலேயே புகழ் பெற்றார்.

இலங்கையில் சட்ட நிருபண சபையில் மக்களின் பிரதிநிதியாக பதவி வகித்தார். அது மட்டுமன்றி இலங்கையின் சட்டதிட்டங்களில் பல சீர்திருத்தங்களையும் கொண்டு வர அரும்பாடுபட்டார்.

தமிழ்மக்களின் உயர்கல்வி வளர்ச்சி, பெண்கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் பெண்களிற்கான இராமநாதன் பெண்கள் கல்லூரியையும், திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியையும் நிறுவினார். பேராதனைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு அன்னார் எடுத்த முயற்சிகள் அளவிறந்தன.

தமிழிற்கு மட்டுமன்றி இந்து சமய வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய தொண்டுகள் பல உள்ளன. பொன்னால் வேயப்பட்ட கூரையையுடைய ஆலயம் என்ற பெருமைக்குரிய பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தை கொழும்பு நகரில் அமைத்தமை அவரின் சைவப்பற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

உண்மை, நேர்மை, சத்தியம் உண்மையான உழைப்பு, பேச்சுத்திறன் என்பவற்றால் வாழ்வில் மிகவும் முன்னேற்றமடைந்தார். தமிழ் முஸ்லிம், சிங்கள இனமக்கள் என யாவருக்குமாகவும், 1915 களில் நடந்த வகுப்புக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட மக்களிற்காகவும் பாடுபட்டார். இச்சமயத்திலேயே இங்கிலாந்து சென்று இலங்கை அரசியலின் சட்டங்களை திருத்தியமைக்க மேலதிகாரிகளுடன் வாதாடினார். யாழ்ப்பாணத்திற்கு புகையிரதப்பாதையமைப்பதற்கான இவரது முயற்சிகளும் முக்கியதோர் தொண்டாகும். இவரது ஆற்றல் கண்டே இவரிற்கு “சேர்” (Sir) பட்டம் வழங்கப்பட்டது.

இலங்கையின் பெரியார்களினது சிலைகள் பழைய பாராளுமன்றக் கட்டிடத்திற்கு முன் நிறுவப்பட்டுள்ளது நாமறிந்ததே. அவற்றுள் சேர். பொன். இராமநாதன் அவர்களது சிலையும் உள்ளமை குறிப்பிடக்கூடியது. இவ்வாறு தமிழிற்கும் சைவத்திற்கும் மட்டுமன்றி முழு நாட்டிற்கும் தொண்டாற்றிய காலத்தால் அழியாத இப்பெரியாரை நான் மிகவும் மதிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேரோடு பாறி விழுந்தன. கல்வீடுகள் ஏதோ கம்பீரமாய் நிற்க, மண்வீடுகள் ஏதும் செய்ய முடியாது கரைந்து போயின. எங்கள் ஊரில் அந்தக் குடிசை வீட்டில் ஒருவருக்கொருவர் துணையாக வாழும் அந்த வயோதிபப்பாட்டி , தாத்தாவின் மண்குடிசை கரைந்து போக வீட்டினுள் வெள்ளம் புகத் தம்மிடம் இருந்த ஓரிரு பொருட்களையும் தூக்கிக்கொண்டு அந்தக் கொட்டும் மழையிலும் கூனிக் குறுகிக் கொண்டு மாரியம்மன் கோவில் திண்ணையில் ஒதுங்கிக் கொண்டனர். மழை ஓய்ந்தது. மக்கள் மெல்ல மெல்ல வெளியே வரத் தொடங்கினர். வெள்ளத்தில் விளையாட எல்லாச் சிறுவர்களையும் போல எனக்கும் ஆசை.

மெல்ல வீட்டைவிட்டு வெளியேறிய நான் கோவில் மண்டபத்தில் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த வயோதிபர்களைக் கண்டேன். ஊரை உலுக்கிய மழை ஓய்ந்தபின்னும் அந்தச்சுருக்கம் விழுந்த விழிகள் நான்கினும் இன்னமும் வெள்ளம் வடிந்து கொண்டேயிருந்தது. என் மனதின் மகிழ்ச்சி அன்று மேகத்தினுள் மறைந்த சூரியனைப்போலானது. அவர்களது குடிசை மழையில் கரைந்து காற்றில் விழுந்து போன செய்தி அறிந்தேன். ஓடிச்சென்று என் சகமாணவ நண்பர்களிடம் சேதி சொல்லி யாவரும் அவர்கட்கு உதவி செய்ய தயாரானோம். எங்கள் வகுப்பாசிரியரின் ஆலோசனைப்படி எம் அனைவரிடமும் சேமிப்பு இருந்தது. எல்லோரும் எமது உண்டியல் பணத்தை எடுத்து அவர்கட்கு உதவுவதெனவும் ஊரில் பணம் திரட்டி அவர்களுக்கு வீடுகட்டி கொடுப்பதெனவும் முடிவுசெய்தோம். உடனேயே அதற்கான சகல நடவடிக்கைகளிலும் இறங்கினோம். ஒவ்வோர் வீடாகப் பணம் சேர்த்தோம். இறுதியில் எண்ணூற்றி ஐம்பது ரூபா இருந்தது. இப்படியே என் நண்பர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்த பணத்தையும், ஊரில் சேகரித்த பணத்தையும் கூட்டிப்பார்த்தபோது பதினாலாயிரத்து நானூற்றி அறுபத்தி ஆறு ரூபா சேர்ந்திருந்தது.

எம் உள்ளம் எங்கும் ஆனந்தம் பொங்கி வழிந்தது. கிராமசேவகரது அனுமதியுடன் வாசிகசாலை வளவினுள் ஒரு கிழமையில் அந்த வயோதிபர்கட்கு ஓர் சிறு வீடு கட்டினோம். பாடசாலை விடுமுறை ஆதலால் மாணவர்களாகிய நாம் எல்லோரும் இளைஞர் சங்கத்தின் உதவியுடன் வீட்டைச் சிக்கனமாக கட்டி முடிக்க வேலை செய்தோம். மொத்தமாக ஆறாயிரம் ரூபா மட்டுமே செலவாகியது. மீதிப்பணத்தை வங்கியில் அவர்கள் பெயரில் வைப்புச்செய்து வைப்புப்புத்தகத்தையும் வீட்டினையும் அந்த முதியோர் கையில் நாம் வழங்கிய போது அந்த விழிகளில் ஆனந்த வெள்ளம் பாய்ந்தது. எம்மை உச்சி மோந்து அந்த வயோதிபத் தாத்தாவும் பாட்டியும் வாழ்த்தி நன்றி கூறியபோது எம் உள்ளம் பூரித்தது.

முதிர்ந்த அந்த மனங்களில் மட்டற்ற மகிழ்ச்சி. அதனை சுருக்கம் நிறைந்த முகங்களின் பொக்கை வாய்களின் பூரித்த சிரிப்பு எடுத்துக்காட்டியது. இந்த மகிழ்விற்கு காரணமானது எது, சிறுகச் சிறுக நாம் சேமித்த அந்தச் சேமிப்பும் ஒவ்வொரு ரூபாயாக ஊரில் மக்களிடம் சேகரித்த அந்த பணமும்தானே. ஆம் சிறு துளி பெருவெள்ளம்தான். சேமிப்பு எப்போதும் எமக்கு உற்ற நண்பன் எனவே எந்த நிலையிலும் எவரும் சேமிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அது எப்போதும் எமக்கு நன்மையே தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 மகாகவி பாரதியார் பாடல்கள்.

**ஓடி விளையாடு பாப்பா நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**

என்று சிறுவர்களுக்குத் தன் பாடல்களால் ஊக்கமும் உற்சாகமும் தந்து நின்றவர் எட்டயபுரத்து கவிஞர் பாரதியார். எட்டயபுரத்திலே பிறந்த சுப்பிரமணிய பாரதியார் தன் வாழ்நாளிலே சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பல பாடல்களைப் பாடினார். அடிமை வாழ்வில் இருந்த இந்தியர்கள் அடிமை விலங்கை அறுத்தெறிய வீர முழக்கமிட்டார்.

**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**

என்று துணிவுடன் பாடினார். இறைவன் துதிப்பாடல்கள், இயற்கைப்பாடல்கள், பறவைகள், மிருகங்கள் எனப் பாரதியார் பாடாத அம்சங்கள் இல்லை. குழந்தைகளுக்காக பாரதியார் பாடியவை ஏராளம்.

குழந்தைகள் ஒற்றுமையாக இருக்கப்பழக வேண்டும். என்பதற்காக,

**............ கூடி விளையாடு பாப்பா ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா.......** என்றார்.

**சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா**
**செல்வக்களஞ்சியமே** என்று குழந்தைகளைப் பாடலாலே பாடினார்.

எட்டயபுரக்கவி உடலால் இன்று எம்மிடையே இல்லை, என்றாலும் அவர் பாடிய பாடல்கள் வடிவில் நம் எல்லோரிடமும் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார். அழியாப்புகழ் கொண்ட பாரதியார், பாப்பாப் பாடல்களை சிறுவரெல்லாம் இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் மிகவும் இலகு தமிழில் பண்ணோடு பாடினார்.

இதனையே ஒரு கவிஞர் பாட்டுக் கொரு பலவன் பாரதியடா என்று புகழ்ந்தார். இவ்வாறு பாட்டு என்றாலே பாரதியார் என நம் நெஞ்சங்களில் மகாகவி பாரதி நிறைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 ஔவைப்பாட்டி

**ஔவைக் கிழவி நம் கிழவி**
**அமுதின் இனிய சொற் கிழவி**
**செவ்வை நெறிகள் பற்பலவும்**
**தெரியக் காட்டும் தமிழ்க்கிழவி**

என்று இனிமையாகப் புகழப்பெறும் ஔவைப்பாட்டியார் வயதில் முதிர்ந்த தமிழ்ப்புலவர். ஆத்திசூடி, நல்வழி போன்ற சிறந்த நீதிநூல்களையும், வாழும் வழிகளையும் எமக்கு எடுத்துக்கூறியவர் இப்பாட்டியார்.

விநாயகப்பெருமான் மீது அதிக அன்புகொண்ட ஔவைப்பாட்டியார்.

**வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்**
**மாமலராள் நோக்குண்டாம் மேனிநுடங்காது**
**பூக்கொண்டு துப்பார் திருமேனித்தும்பிக்கையான்**
**பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு**

எனப்பாடி விநாயகப் பெருமானின் பேரருளைப் பெற்றார். முருகப்பெருமானிடம் நாவற்பழம் கேட்டு நின்றபோது முருகப்பெருமான் நாவல் மரத்தில் நின்று சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டபோது ஔவைப்பாட்டி அர்த்தம் புரியாது சுட்டபழம் கேட்டார்.

முருகப்பெருமான் நன்கு கனிந்த பழங்களை நிலத்தில் பறித்துப் போட்டார். அவற்றில் மணல் ஒட்டிக்கொண்டிருக்க அம்மணல்போக அவற்றை ஊதினார் பாட்டி. முருகப்பெருமான் மரத்தில் நின்றபடி "பாட்டி பழங்கள் நன்கு சுடுகின்றனவா, ஊது பாட்டி ஊது" என்று கூறினார். சிறுவன் என நினைத்த முருகன் அறிவை வியந்து "நீ யாரப்பா" என பாட்டி வினாவ முருகப்பிரான் தன் சுயகோலம்காட்டி ஔவைப்பாட்டிக்கு அருள்செய்தார்.

மாம்பழம் தனக்குக் கிடைக்கவில்லை என்று கோபித்து முருகப் பெருமான் பழநி மலையில் ஆண்டியாக சென்ற போதும் ஔவைப்பாட்டி,

**ஞானப் பழம் நீ அப்பா - பழநி அப்பா**

என்று முருகப்பெருமானது கோபம் தணித்தார். இவை மட்டுமன்றி அரசர்களை வாழ்த்திப் பாடியும் புகழ் சேர்த்தவர் ஔவைப்பாட்டி. இப்பாட்டியின் தமிழ்த்திறனைக் கேட்டு வியக்காதோர் இல்லை. ஒரு தடவை அரசன் ஒருவனை சபையில் எல்லோரும்புகழ்ந்து வாழ்த்தியபோது ஔவைப்பாட்டி "வரப்புயர" என்று மட்டும் வாழ்த்திவிட்டு அமர்ந்து விட்டார். சபையோர் அர்த்தம் புரியாது சிந்தித்தனர். இறுதியில் அரசன் ஔவைப்பாட்டியிடம் பணிவாக அர்த்தம் கேட்டான். அப்போது பாட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்புயர நீருயரும்
நீருயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்.

எனத் தன் வாழ்த்தின் உட்கருத்தை விரித்துக் கூறினார். சபையோரும் மன்னனும் ஔவைப்பாட்டியாரைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

இவ்வாறு ஔவைப்பாட்டி அமுதின் இனிய சொற் கிளவிதான். அவரின் அறிவுரைப்படி சிறுவர்களாகிய நாமும் நடந்து முன்னேறுவோமாக.

## 33 நான் கண்ட மறக்க முடியாத சம்பவம்.

அன்று எனக்கு விடுமுறை நாளாதாலால் மாலை தந்தையுடன் ஓய்வு நேரத்தைக் கழிக்க பூங்காவிற்கு சென்றிருந்தேன். வண்ண வண்ண மலர்களும், அழகாக வெட்டப்பட்டு வளர்க்கப்பட்ட புற்களும் என்னைக் கவர்ந்தன எனினும் வேறு ஓரிடத்தை நோக்கி விழிகள் நகர்ந்தன.

ஓரிடத்தில் வட்டமாக எல்லோரும் குழுமிநின்று ஏதோ பார்த்துக்கொண்டிருந்தனர். இடையிடையே மக்களின் கைதட்டல் ஒலியும் ஆரவாரமும் கேட்டுக் கொண்டிருந்தன.

எனக்கும் அது என்ன என்று பார்க்க வேண்டும்போல் ஆவலாயிருந்தது. பெற்றோரிடம் கேட்டு அவர்களுடன் அங்கு சென்றேன். அங்கு..... அங்கு கண்ட சம்பவம் இன்றும் என் மனதை நெகிழ வைத்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆம்! அங்கு ஓர் முதியவரும் ஓர் சிறுமியும் வேடிக்கை விளையாட்டுக்கள் காண்பித்துக்கொண்டிருந்தனர். நானும் ரசித்துக் கொண்டிருந்தேன். இறுதியில் அந்த முதியவர் ஓர் நீண்ட மூங்கில் தடியின் நுனியில் அந்தக் குழந்தையை வைத்து மூங்கிலை தன் உள்ளங்கைகளால் அந்தரத்தில் பிடித்துக்கொண்டிருந்தார். சிறுமியோ பயமும், பதறலுமாக மூங்கிலின் மறுமுனையில் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தாள். ஆனால் பார்ப்பவர்கள் கைதட்டி, கரவொலி எழுப்பி, ஆவாரித்துக் கொண்டிருந்தனர். அவர்களைப்போல் என்னால் ரசிக்க முடியவில்லை. எனக்கு மனமுழுவதும் பதற்றமாகவேயிருந்தது. சில வினாடிகளின் பின் மெல்ல மெல்ல அவளை இறக்கி விட்டார் அந்த முதியவர். எல்லோரும் அவர்கள் விரித்திருந்த துண்டின்மீது சில்லறைப் பணத்தை வீசிவிட்டு கலைந்து கொண்டிருந்தனர். ஆனால் என் மனமும், விழிகளும் அவர்களின்மேல் நிலைத்திருந்தன. முதியவரின் விழிகளும் பனித்திருந்தன. விம்மியபடி நின்ற சிறுமியை அணைத்தபடி அவளது முதுகைத்தட்டி விட்டார். அவர்களை நெருங்கி "ஏன் இப்படி கஷ்டப்பட்டு உயிரை பணயம் வைத்து வேடிக்கை காட்டுகின்றீர்கள்" என்றேன். கலங்கிய விழிகளுடன் அந்த முதியவர் என்னைப்பார்த்து "தம்பி இப்படி செய்வதினால்தான் எங்களுக்கு அரைவயிற்றுக் கஞ்சியாவது குடிக்க முடியுது." எனத் தள தளக் குரலில் சொன்னார். எனக்கு மனதில் தாங்க முடியாத துயரம் நிரம்பியது. உலகில் எத்தனை கஷ்டங்களின் மத்தியிலும் மக்கள் வாழுகின்றார்கள் என்று உணர்ந்தேன். அந்த முதியவரும் சிறுமியும் பட்ட துயரமும், அவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக உயிரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச்சமென மதித்துப்படும் கஷ்டமும் இன்று நினைத்தாலும் என் மனதை உலுக்கும் சம்பவமாகவேயுள்ளது.

## 34 நான் விரும்பும் தொழில்

தாய், தந்தையருக்கு அடுத்ததாக உலகில் போற்றப்படுபவர் ஆசிரியராவர். இதனையே,

**'அன்னை, தந்தை ஆசான் தெய்வம் என்னும் நான்கும் முதலாகும்'**

என்கின்றனர்.

இங்குதெய்வத்திற்கும் மேலாகவே ஆசான் - குரு - ஆசிரியர் போற்றப்படுகின்றார். அன்னை தந்தை எம்மை இவ்வுலகில் வாழ வழிசெய்தனர் என்றால், ஆசிரியர் வாழும் எம்வாழ்வை வளமாகவும், செழிப்பாகவும், மற்றோர் மதிக்கவும் வழிசெய்து வழிகாட்டுபவர் ஆகிறார்.

எம் அறிவுக் கண்ணைத் திறந்து வழிகாட்டி எம் வாழ்வை ஒளியூட்டுபவர் என்றால் அவர் ஆசிரியர் தான். காலத்தாலும், காற்று, தீ, மழை, வெள்ளம், புயல் என்பனவற்றாலும் அழிக்கமுடியாத செல்வம் கல்வியாகும். ''கல்வியே கருந்தனம்'' ஆகும். இக்கல்வியை வழங்குபவர் கண்போலப் போற்றப்பட வேண்டியவராகும். கல்வி கற்பிக்கும் ஆசிரியர் எம் வாழ்வின் உயர்விற்கு வழிகாட்டுபவர் என்பதாலேயே ஆசிரியர் ஏணி போன்றவர் எனப் போற்றப்படுகின்றார். ஆசிரியர் நாம் வாழ்வில் ஏற்றம் பெற வழிகாட்டுபராவார். இவ்வாறான ஆசிரியத் தொழில் செய்வோரை யாவரும் மதிப்பர். எங்கு சென்றாலும் என்றும் புகழும், மதிப்பும் கிட்டும்.

இத்தகைய புனிதத்தொழில் செய்வதனையே நான் விரும்பகிறேன். இத்தொழில் மூலம் வசதியற்றவர்களுக்கும் ஓர் சேவையாகக் கற்பிக்க முடியும். ஒரு தனிப்பட்டவரை, குடும்பத்தினரை, ஒரு சமூகத்தை, ஒரு நாட்டை, இந்த உலகையே இதன் மூலம் கட்டியெழுப்பி ஒளியூட்டி வழிகாட்டக்கூடிய வல்லமையுடைய தொழில் ஒன்று உள்ளதெனின் நிச்சயமாக அது ஆசிரியத் தொழிலேயாகும்.

இக் காரணங்களினாலேயே இப்புனிதத் தொழிலை, அள்ளி வழங்க வழங்கக் குறையாத சேவையான இவ் ஆசிரியத் தொழிலை, நான் மிகவும் விரும்பகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 நான் கேட்ட அறிவுரை

'காற்றுள்ள போதே தூற்றிக்கோள்'

ஆம்! இதுதான் நான் கேட்ட உன்னதமான அறிவுரைகளில் ஒன்று. காலம் பொன்னானது என்பர் சிலர். ஆனால் காலம் பொன்னைவிட மதிப்புக் கூடியது. பொன்னை இழந்தாலும் மீண்டும் பெறலாம். தேவையான போது விலை கொடுத்தும் வாங்கிவிடலாம். ஆனால் எமக்குக் கிடைக்கும் ஒவ்வோரு நாளும் பெறுமதி மிக்கது. இழந்தால் மீண்டும் பெறமுடியாது மட்டுமல்ல, வேண்டும் போது விலை. கொடுத்துப் பெறமுடியாது. காலம் எப்போது கிடைக்கின்றதோ அப்போதே அதனைப் பயன்படுத்திவிட வேண்டுமேயன்றி வீணாக்குதல் கூடாது.

சிறுவயதில் எமக்கு குடும்பப் பொறுப்புகளோ சுமைகளோ கிடையாது. கற்பிக்க நல்லாசிரியர், எமது தேவைகளைப் பூர்த்தி செய்ய எம் பெற்றோர் தேவையான அனைத்து வசதிகளும் இருக்கும் இக்காலமே கற்கச் சிறந்த காலம். இதனாலேயே 'இளமையில் கல்' என்றனர் நம் பெரியோர். இவ்வாறு இளமையிற் கற்பது கல் மேல் எழுத்துப் போல மனதில் என்றும் பதிந்து நிற்கும். இவ்வாறு இளமையில் கற்காது விட்டுவிட்டுப் பிற்காலத்தில்இதையிட்டு வருந்திப் பயனில்லை. இவ்வாறே எந்த ஒரு நாளை, மறுதினம் எனத் தள்ளிப்போடுதலாகாது.

'நன்றே செய், அதையும் இன்றே செய்' என்பது ஓர் முதியோர் வாக்கு. நாளை என்பது நிச்சயமில்லாதது. எனவே எந்தக் காரியத்தையும் காலத்தே செய்வதே நன்று. காலம் போனபின் நேரம் இல்லையே என்று வருந்துவது மடமை. எனவே எதையும் நல்லதாக நினைத்து நல்லதாக செய்வோம் அதிலும் காலத்தே செய்வோம். வாழ்வில் உய்வோம்.

## 36 நான் சென்ற கல்விச் சுற்றுலா

சென்ற விடுமுறை காலத்தல் ஓர் நாள் எமது பாடசாலை 5ம் ஆண்டு மாணவர்களை கல்விச் சுற்றுலா ஒன்றிற்கு அழைத்துச் சென்றனர். அன்று 10ம் திகதி செவ்வாய்க்கிழமை. விடிகாலை 5 மணியளவில் ஏற்கனவே தீர்மானித்தபடி மாணவர்கள் யாவரும் பாடசாலைக்கு வந்து சேர்ந்தனர். வகுப்பாசியர், சமூகக்கல்வி, வரலாற்றுப் பாட ஆசிரியர். சித்திர ஆசிரியர் இவர்களைத் தவிர மேலதிகமாக உப அதிபரும் சேர்ந்து கொண்டார். எல்லாமாக அறுபத்தேழு மாணவர்களும் நான்கு ஆசிரியர்களும் மொத்தம் எழுபத்தியொரு பேர் கலந்து கொண்டோம். நாங்கள் கல்விச் சுற்றுலாவிற்கென தேர்ந்தெடுத்த இடம் வரலாற்றுப் புகழ்மிக்க பழைய அரச கோட்டையாகிய சீகிரியா ஆகும்.

காலை ஆறுமணியளவில் எமது பாடசாலை வாகனம் பாடசாலையிலிருந்த புறப்பட்டது. வழியெங்கும் மாணவர்களாகிய நாமனைவரும் குதூகலமாக பாடியும், கைகளைத்தட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியுடன் பிரயாணம் செய்தோம். வழியில் 8.30 மணியளவில் காலையுணவருந்த வண்டி நிறுத்தப்பட்டது. ஒவ்வொருவரும் தாம் கொண்டு வந்த உணவை மற்றவர்களுடன் பிரிந்து உண்டனர். மீண்டும் 9.00 மணியளவில் பயணம் தொடங்கியது. பகல் 10.30 அளவில் சீகிரியா அமைந்துள்ள பொலநறுவையை அடைந்தோம். தொலைவிலேயே எமது சமூகக்கல்வி, வரலாற்று ஆசிரியர் சீகிரியா தெரிவதைக் காட்டினார். தட்டையான சுற்றாடலில் இப்படித் தனியான ஓர் குன்றாக இருப்பது எமக்கு வியப்பாக இருந்தது. ஆசிரியர் அது முற்காலத்தில் ஏற்பட்ட அரிப்புகளின் போது அரிக்கப்படாமல் எஞ்சிய ஓர் வன்மையான பாறையே அது என விளக்கினார். சீகிரியாவைக் கிட்ட நெருங்கினோம். வண்டி ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது.

மாணவர்கள் யாவரும் இரண்டிரண்டு பேராக வரிசையாக உள்ளே ஆசிரியர்களால் அழைத்துச் செல்லப்பட்டோம். கோட்டையைச் சுற்றி சற்று ஆழமானதும் அகலமானதுமான ஓர் அகழியின் இடிபாடு காணப்பட்டது. எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாக்கவே காசியப்ப மன்னன் சீகிரியாவினைத் தன் கோட்டையாகத் தேர்ந்து எடுத்தான் எனவும் எதிரிகள் உட்புகாது தடுக்கவே இவ் அகழி எனவும் ஆசிரியர் விளக்கினார்.

வழியே செல்லச் செல்ல தடாகங்கள், படிக்கட்டுகள், மேடைகள், கட்டிடங்கள் பாதுகாப்பு அரண்களின் இடிபாடுகளைக் காணக்கூடியதாகவிருந்தது. சிறிது தூரம் சென்றதும் மலையில் வெட்டப்பட்டும் இடையிடையே கட்டப்பட்டதுமான படிக்கட்டுகள் ஆரம்பித்தன. படிக்கட்டுகளின் வழியே சற்று அதிகமாகவே இருந்தது. எனினும் எமக்கு களைப்பத் தெரியவில்லை. சற்று நேரத்தின் பின் மலையை ஓரமாக குடைந்து பாதை வழியே உள்ளே சென்றோம். அதன் இரு பக்கச் சுவர்களிலும் பல வாசகங்கள் எழுதப்பட்டும், செதுக்கப்பட்டும் இருந்தன. ஓவியங்கள் உள்ள இடத்திற்கு சென்றடைந்து அழியாப் புகழ் பெற்ற சுவரில் வரையப்பட்ட அச் சுவரோவியங்கள் பற்றி சித்திர ஆசிரியர் விளக்கினர். அக்காலத்திலேயே எவ்வளவு நுட்பமாக இவை வரையப்பட்டிருக்கின்றன என்ற நினைத்து வியந்தபடியே ஓவியங்களை ரசித்தோம். மலர்த்தட்டுக்கள் ஏந்திய பெண்கள் போன்ற அழகிய ஓவியங்கள் காணப்பட்டன. எனினும் இவற்றுள் பல ஓவியங்கள் சிதைந்து விட்டதாக ஆசிரியர் கூறினார். எஞ்சியவை மேலும் சிதைந்து போகாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்றார்.

இவற்றின் பின் இன்னும் உயரே சென்றோம். அங்கு அரண்மனை வாயில் தென்பட்டது. சிங்கம் ஒன்று படுத்திருப்பது போலவும், அதன் முன்கைகள் வாயிலின் இரு பக்கத்தினதும் தூண்கள் போலவும், வாய்ப்பகுதி உள்ளே நுழையும் நுழைவாயிலாகவும் காணப்பட்டது. அவ்வழியே மேலே சென்று பார்த்த போது அங்கு அரண்மனையின் இடிபாடுகள் காணப்பட்டன. அவற்றில் மறைந்து கிடந்த கட்டிடக்கலையின் சிறப்பு அழகியற்கலையின் சிறப்பு என்பவற்றை ஆசிரியர்கள் விளக்கம் போது அற்புதமாக இருந்தது. மேலே பார்த்து முடிந்து கீழே இறங்கினோம். இறங்குவது மிகவும் இலகுவாக இருந்தது. வண்டி நிற்குமிடத்தை அடைந்து, அங்கு கைகால் கழுவி, மரநிழலிருந்து மதிய உணவருந்தினோம். பின்னர் சுமார் 2.00 மணியளவில் புறப்பட்டு பாடசாலையை மாலை 6.00 மணியளவில் வந்தடைந்தோம்.

அன்று முதல் இன்று வரை அந்த இனிய, பயனுள்ள கல்விச் சுற்றுலா என் மனதில் நிறைந்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37 எனது பாடசாலை

எனது பாடசாலை யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள திருமகள் தமிழ் வித்தியாலயமாகும். இது 1861 ம் ஆண்டு நல்லூரில் வசித்த காலஞ்சென்ற உயர்திரு. சபாபதிநாதர், தனது இறந்த மனைவி திருமதி. திருமகள் சபாபதிநாதரது நினைவாகக் கட்டிய பாடசாலையாகும்.

இதன் முதல் அதிபர் காலஞ்சென்ற திரு. வேலும்மயிலும் ஆவார். ஆரம்பத்தில் அதிபருடன் இரண்டு உதவியாசிரியர்களையும் 66 மாணவர்களையும் மட்டும் கொண்டு ஆரம்பித்த எனது பாடசாலையில் அப்போதைய கட்டிடம் ஒன்று மட்டுமே. தற்போது எனது பாடசாலையில் 51 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். சுமார் 2000 மாணவர்கள் வரை கல்வி பயில்கின்றனர். க.பொ.த உயர்தரம் வரை வர்த்தகம், விஞ்ஞானம், கலை ஆகிய துறைகளிலும் வகுப்புக்கள் உண்டு. ஆய்வுகூடம், நூலகம், விளையாட்டு மைதானம் உட்பட பல வசதிகளும் உண்டு.

வருடாவருடம் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் மாணவர் தின விழா, பரிசளிப்பு விழா, பெற்றோர், பழைய மாணவர் கூட்டங்கள் எனவும் பல சமய, சமூக, கலாசார நிகழ்ச்சிகள் நடை பெறுவதிலும் எனது பாடசாலை முன்னிற்கின்றது. எனது பாடசாலையை நான் மதிக்கின்றேன். எனது பாடசாலையையிட்டு நான் பெருமிதம் கொள்கிறேன்.

## 38 எனது நாடு

இந்து சமுத்திரத்தின் முத்து என ஐரோப்பியராலும் பிறராலும் பாராட்டப்பெற்ற சின்னஞ் சிறு தீவு எனது நாடாகும், இலங்கை என்பது நவீன பெயராக இருப்பினும் முன்பு மாணிக்க துவீபம், இரத்தினதுவீபம் சீலம், தப்ரபேன் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

எனது நாடு சின்னஞ்சிறிய தீவாக இருப்பினும் கல்வியறிவு, சமூக பண்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்குகின்றது.

மத்திய மலைநாடு அழகிய மலைக்காட்சிகள் நிறைந்த பகுதியாகும். பிரதான தொழில்களாக விவசாயம், மற்றும் ஏனைய சேவைத் துறைகள் யாவும் சேர்ந்து காணப்படுவதுடன் சில பாரிய கைத்தொழில்களும் பல சிறிய கைத்தொழில்களும் மேற்கொள்ளப்படகின்றன.

மேலும் கடற்கரை ஓரங்களில் மீன் பிடித்தொழில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொன்று தொட்டே இலங்கையின் இரத்தினக்கல் உலகப் பிரசித்தி பெற்றது. இன்றுங்கூட உல்லாசப்பிரயாணிகளைக் கவர்ந்த ஓர் அழகிய தீவாக எனது நாடு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39 எனது பொழுதுபோக்கு

எனது பொழுதுபோக்கு முத்திரை சேகரித்தலாகும். இந்தப் பொழுதுபோக்கைப் பற்றிய சுவையை எனக்கு ஊட்டியவர் எனது தந்தையாவார். அவரே முத்திரை சேகரிப்புப் பற்றி எனக்கு எடுத்துக் கூறியதுடன், அதற்குரிய முத்திரை சேகரிக்கும் ஆல்பத்தையும் (Stamp album) வாங்கிக் கொடுத்தார்.

நான் முத்திரைகளை நாடுரீதியாக, அவற்றின் வகைரீதியாக சேகரித்து வைத்துள்ளேன். வகைரீதியாக எனும் போது மனிதர்கள், விலங்குகள், பறவைகள், பூக்கள், இயற்கைக் காட்சிகள், விஞ்ஞான தொழில்நுட்பங்கள், விளையாட்டுகள் என அவற்றின் தரத்திற்கு ஏற்ப முத்திரைகளைத் தரம் பிரித்துள்ளேன்.

எனது சேகரிப்பில் சில முத்திரைகள் வட்டமானவை, சில நீள்சதுரமானவை, சில முக்கோணமானவை, சில சற்சதுரமானவை. இவ்வாறு மட்டுமன்றி ஒரு முத்திரையின் விடயத்தில் தொடர்ச்சி அடுத்த முத்திரையிலும் வருகின்ற மாதிரியும் சில முத்திரைகள் உள்ளன.

முத்திரைகள் மூலம் பலநாடுகளின் கலாச்சாரம், மற்றும் விசேட முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் அறிய முடிவதுடன், இவை வரலாற்று நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறுகின்றன. பயனுள்ளதும் விருப்பம் தரக் கூடியதுமான இப்பொழுதுபோக்கு என் கல்விக்கும். பொது அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றது.

## 40 எனது குறிக்கோள்

வாழ்வில் எல்லோருக்கும் ஒரு குறிக்கோள் இருப்பது அவசியம். ஏனோ தானோ என்ற வாழாமல், எப்படியோ என்று வாழாமல், இப்படித்தான் வரவேண்டும், இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஓர் வரையறைக்குள் வாழ்வது மிகவும் அவசியம்.

இந்த வகையில் எனது குறிக்கோள் வாழ்வில் சிறந்ததோர் சமூக சேவைகனாக வந்து சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்பது. நாட்டிற்கும், சமூகத்திற்கும் நாம் செய்ய வேண்டிய சேவைகள் நிறைய உள்ளன. சமூகத்தின் தேவைகளை அறிந்து, சமூகத்தின் உயர்விற்கும் விடிவிற்கும் பாடுபட வேண்டும். வறியவர்கள், வயோதிபர்கள் யாரும் இல்லாதவர்கள், ஏழைகள் என எல்லா வர்க்கத்தினருக்கும் உதவக் கூடியவர்களாக சமூக சேவையாளர்கள் இருப்பார்கள்.

தன்னலம் கருதாது பிறர் நலன் கருதிப் பிறருக்காகப் பாடுபட்டு பிறருக்காக வாழும் இச் சமூக சேவகர்கள் போல நானும் வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவின்றி வாடும் ஏழைகட்கு உணவு பெற்றத் தந்த அவர்கள் உண்டு வயிறாறவதைப் பார்த்து என் மனம் ஆற வேண்டும். வயோதிப காலத்தில் தள்ளாடி, தனியே வாழமுடியாது தவிக்கும் நம் முன்னோர்கட்கு, முதியவர்களுக்கு, வாழ்வில் தனித்துப் போனவர்கட்கு உற்ற உறவு போலாகி உதவி செய்வேண்டும். அவர்களது நிறைவுகண்டு மனம் குளிர வேண்டும்.

கல்வி கற்க மனமிருந்தும் வழியின்றி தவிக்கும் குழந்தைகளுக்கு அறிவுக்கண்களைத் திறந்து விட வேண்டும். இவ்வாறு தனிப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும், நாட்டிற்கும் எமது உலகிற்கும் இயன்றளவு சேவையாற்ற வேண்டும். இவற்றையெல்லாம் செய்கின்ற சிறந்த சமூக சேவகனாக வர வேண்டும் என்பதே என் வாழ்வின் குறிக்கோள் ஆகும்.

## 41 எனது அன்னை தந்தை

**'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'**

என்பது முதுமொழி

ஆம்! இவ்வுலகில் நாம் அறியும் முதல் தெய்வங்கள் எமது தாயும் தந்தையுமே, எம் பெற்றோர் இவ்வுலகில் நாம் பூஜிக்கும் தெய்வங்கள். எம்மை இவ்வுலகிற்கு கொண்டுவந்த புண்ணியர்கள் அவர்கள். இதற்காக மட்டுமன்றி பிறந்தபின் எம்மை ஒழுக்கமானவர்களாக, சிறந்த சீலர்களாக வளர்த்து சமூகத்தில் மற்றவர்கள் மதிக்கும் ஒரு சிறந்த மனிதனாக உருவாக்கியமைக்காக நாம் அவர்களை துதிக்க வேண்டும்.

அன்னை என்பவர் உயிர் கொண்டுலவும் தெய்வம் என்பர். ஆம்! எமக்காக அல்லும் பகலும் தன் நலம் மறந்து தன்னை எமக்காக அர்ப்பணிக்கும் எமது தெய்வம் எம் அன்னை. தான் பசியோடிருந்தும் எம் பசி வேளை எமக்கு வயிறார உணவு தந்து வளரவும் கல்வி கற்கவும் வழிகாட்டுபவர் எமது அன்னை. இதனாலேயே 'தாயிற் சிறந்த தொரு கோவிலுமில்லை..' என்பர். இரவு வேளை தன் தூக்கம் மறந்து எமக்காக எம் நலனிற்காக பாடுபடும் என் அன்னையை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

தந்தை என்பவர் எம்மை சிறந்த மனிதனாக்கிய சிற்பி. பெற்ற அன்னையுடன் சோந்து எமக்கு நல்லுணவு, நல்லுடை, நல்லறிவு ஊட்டி நாம் நற்பிரசைகளாக வாழ வழிவகுத்த பெரியோன். தந்தை நாம் தவறவிடும்போது திருத்தி நம்மை நேர்வழி நடக்க வைப்பவர். இதனாலே தான் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்பர்

இவ்வுலகில் நாம் அடையும் பெருமைகள் யாவற்றிற்கும் வழிகாட்டிகளாவும், ஒளியூட்டிகளாகவும் இருக்கும் எம் பெற்றோர் எமக்கு இருகண்களைப் போன்றவர்கள். எனது அன்னை தந்தையைத் தந்த இறைவனிற்கு நான் நன்றி செலுத்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42 எனது வீட்டுத் தோட்டம்

எனது வீட்டில் பயன் தரும் பல பயிர்கள் உண்டு. எனது ஓய்வு நேரத்தை அங்கேயே செலவழிப்பேன். காய்கறி வகைகளான கத்தரி, வெண்டி, தக்காளி முதலியனவும் பச்சைமிளகாய், எலுமிச்சை என்பனவும் இங்கு உண்டு. இவற்றுடன் வாழை, மாமரங்களும் உண்டு.

எனது தோட்டத்திலிருந்து கிடைக்கும் காய்கறி, பழவகைகளை எமது தேவைக்கு எடுத்தது போக மீதியை எமது அயல்லவர், நண்பர்கட்கும் கொடுப்போம்.

வாரம் ஒரு முறை அல்லது இருவாரங்கட்கு ஒரு முறை கத்திரி, பச்சைமிளகாய் முதலியன பறித்து அம்மாவிடம் கொடுப்பேன். அவற்றை சமைத்து உண்ணும் போது அவை மிகவும் சுவையாக இருப்பதுபோல் உணர்வேன். அதிலே ஒரு தனி மகிழ்ச்சி,

வீட்டுத் தோட்டத்து உணவுகள் சுத்தமானவை, இரசாயனப் பதார்த்தக் கலப்பு இல்லாதவை மட்டுமன்றி, எமக்கு சிக்கனம் தருபவை.

பழவகைகளில் வாழைப்பழம் மாம்பழம் என்பன மிகவும் சுவையானவை. எமது வீட்டுத் தோட்டத்தில் கதலி, இதரை முதலிய வாழைகள் உண்டு, இவை விற்றமின்கள் நிறைந்த பழங்கள், மேலும் கறுத்த கொழும்பு மாம்பழம் எல்லோராலும் விரும்பி உண்ணப்படுவது. மாம்பழக் காலங்களில் அவற்றை பதமாகப் பறித்து உண்போம். எமது நண்பாகளுக்கும் உறவினர்களுக்கும் கொடுப்போம். எமது நட்பையும் அன்பையும் வளர்க்கும் பயனுள்ள இவ்வீட்டுத்தோட்டம் எனக் மிகவும் பிடித்ததாகும்.

## 43 உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

**'அன்புதான் இன்ப ஊற்று**
**அன்புதான் உலகமாக சக்தி**
**அன்பு தான் உலக ஜோதி'** என்று கூறுவர்.

ஆம்! இந்த உலகில் பிறந்தவர்கள் வாழும் குறுகிய காலத்தினுள் எல்லோரிடத்திலும் அன்பு காட்டி, அன்பாக நடந்து அவர்களது அன்பையும் பெற்று பேரானந்தம் அடையலாம்.

மனிதராயினும் சரி, மிருகங்கள் பறவைகள் முதலிய உயிரினங்களாயினும் சரி நாம் எல்லாவுயிர்களிடத்தும் அன்பாகவிருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அன்பிற்குக் கட்டுப்படாத உயிர்கள் இல்லை. அன்பினால் நாம் இவ்வுலகில் எதனையும் சாதித்துவிட முடியும். கோபத்தினால் அதிகாரத்தினால் நாம் இன்னும் விரோதத்தையும், பகைமையையும் மட்டுமே வளர்த்துக் கொள்வோம். ஆனால் அன்புடன் மற்றவர்களுடன் பழகும் போது அது இன்னும் அதிகரித்து நன்மையையே செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேதான் ''அன்பே சிவம்'' என்பர். எந்த மதமானாலும் சரி, எந்த இனமானாலும் சரி மனிதர்கள் மனிதர்களே தான். அன்போடு யாவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். எல்லா மதமும் அனபுவழி நின்று எம்மை துய்மைப்படுத்துகின்றன.

மிருகங்கள், பறவைகள் மற்றும் உயிரினங்கள் கூட நாம் அன்பு செய்யும் போது எம்மோடு கனிவாகப் பழகுகின்றன. ஐந்தறிவு ஜீவனே இவ்வாறு செய்யுமாயின் ஆறறிவு படைத்த மனிதர்கள் எவ்வளவு தூரம் அன்பிற்குக் கட்டுப்படுவார்கள்.

வீண்சண்டைகளும், போர்களும், அழிவுகளும் மனிதநேயம் அற்றுப் போவதானாலேயே ஏற்படுகின்றன. மனிதர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அன்பாக நடக்கும்போது இவ்வாறு வீண் அனர்த்தங்களுக்கு இடமேயில்லை.

**'ஒன்றேகுலம் என்று பாடுவோம்**
**ஒருவனே தேவன் என்று போற்றுவோம்**
**அன்னை இதயமாக அன்புவடிவமாக**
**வந்து வழிகாட்ட வேண்டும் என்று வணங்குவோம்...'**

என்று ஒரு பாடல் கூறுகின்றது.

அன்பு அள்ள அள்ளக் குறையாதது. மற்றவர்கட்கு கொடுக்க கொடுக்கக் இன்னும் வளரும், பெருகும். நமக்கு நன்மையையும் மகிழ்வையும் கொண்டு வரும். சாந்தியும், சமாதானமும் தானாகவே தேடி வரும். இவ்வளவு நன்மைகளையும் செய்யும் அன்பினைச் செய்ய நாம் பின் நிற்கலாமா?

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்று திருவள்ளுவப் பெருமான் வினாவுகின்றார். ஆம்! அன்பினை யாராலும் அடைக்கவோ, தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. இத்தகைய அன்பினை மற்றவர்கள் மீதும் செய்து நாமும் மகிழ்வாக இருந்து, மற்றவர்களையும் மகிழ்வாக வைத்து அன்பு நிறைந்த அமைதியான உலகு சமைப்போமாக.

## 44 ஆசிரியர்

**'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'**

என்பர்.

இவ் எண்ணையும் எழுத்தையும் எமக்குத் தந்து, எம் இரு கண்களிற்கும் ஒளி ஊட்டுபவர்கள் ஆசிரியர்களே. ஆம்! எமக்கு வாழும் வழியைக் காட்டி நல்லறிவோடு நல்ல பழக்க வழக்கங்களையும் சொல்லித் தருபவர்கள் ஆசிரியர்களே.

ஏணியில் ஏறி மேலே செல்ல முடியும். இவ்வாறுதான் ஆசிரியர்களும் எமக்கு ஏணி போலாவார். எமக்கு உயர்ந்த வாழ்க்கையைப் பெற்றுத் தரும் ஏணி போலானவர்கள் எமது ஆசிரியர்களே. மாதா, பிதாவிற்கு அடுத்ததாக உலகில் மதிக்கப்படும் பெரியவர்கள் குருவானவர்களேயாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் ஒருவர் பெரிய வைத்தியராகவோ, இயந்திரவியலாளராகவோ, வேறு இன்னும் பல உயர் அதிகாரிகளாவோ, அறிஞர்களாகவோ வரலாம். ஆனால் அவர்களுக்கெல்லாம்ஆரம்பத்தில் இருந்து அறிஞர்களாகும் வரை அந்தந்த அறிவை ஊட்டிவிடுபவர்கள் ஆசிரியர்களே. இவ்வாறு எதிர்காலத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் அங்கத்தினர். இவ் ஒவ்வொரு தனிமனிதனதும். பழக்கவழக்கங்களுக்கும் பொறுப்பானவர். அவர்களை வழிநடத்தியவர் ஆசிரியர்களே, எனவே தனிமனிதனது வாழ்விற்கு மட்டுமன்றி ஒரு சமூகத்தினதும், ஒரு நாட்டினதும், ஏன் இந்த உலகினதும் எதிர்காலத்தை சமைக்கும் சிற்பிகள் ஆசிரியர்கள். இவ்வாறான ஆசிரியர்களை நாம் என்றும் மதிக்க வேண்டும். அவர்கள் கூறும் வார்த்தைகளைக் கேட்டு நாம் நடக்க வேண்டும். அவர்களது ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும். அது எமது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## 45 பேருந்து நடத்துநர்

இன்று பெருமளவிற்கு பொதுமக்களினது போக்குவரத்திற்குப் பயன்தரும் வாகனம் பேருந்தேயாகும். பேருந்தில் சாரதியும், நடத்துநரும் இருப்பார்கள்.

சாரதி சென்றடைய வேண்டிய இடத்திற்கு எம்மைப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் கருத்தாய் இருப்பார். பேருந்து நடத்துநர் பயணிகளிடம் பணத்தைப் பெற்று சீட்டுகளை வழங்குவார். இறங்க வேண்டிய இடத்தில் பயணிகள் இறங்கவும். பிரயாணம் செய்யும்போது பாதுகாப்பாக பயணம் செய்ய உதவபவர் இவரே. பிரயாணிகளிடையே ஏதேனும் பிணக்கு ஏற்பட்டால்கூட இவரே பேருந்தினுள் அதனைத் தீர்த்து வைப்பார்.

பேருந்தில் எவ்வளவு கூட்டம் இருந்தாலும் பொறுமையுடன் தன் கடமையைச் செய்து பொதுமக்கள் சிரமமின்றி பயணஞ் செய்ய உதவுபவர் பேருந்து நடத்துநர் ஆவார்.

## 46 தாதி

புனிதமான வெண்ணிற ஆடையுடுத்தி, பொறுமையுடன் வைத்தியசாலைக்குள் வலம் வரும் தாதியர்களும், வைத்தியர்கள் போல் எமது உடல் நலத்திலும், சுகத்திலும் கருத்துமாக இருப்பவர்களாவர். வைத்தியர் நோய்க்குரிய மருத்துவகைகளை எழுதிக் கொடுத்துவிட்டுப் போவார். அந்நிலையிலிருந்து நோய் குணமாகி நோயாளிகள் வீடு சேரும்வரை இரவும் பகலுமாக எமக்கு உழைப்பவர் தாதிமார்களே.

“புளோரன்ஸ் நைட்டிங்கெல்” அம்மையார் தாதிகளுக்கு எடுத்துகாட்டாக அயராது உழைத்தவர். தாதிகள் நேரந் தவறாது மருந்து தருதல், உணவு தருதல், நோயாளியின் சுத்தம், மட்டுமன்றி நோயாளியின் மனநிலையை எப்போதும் அமைதியாக பேணுவதிலும் கவனமாயிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளிகளுடன் அன்பாகப் பழகி, கனிவாகப் பேசி நோயாளிகள் தம் நோய்களை மறந்த மகிழ்வுடன் இருக்க உதவுபவர்கள் தாதிமார்களே. உயிரைக் காத்து எமக்கு நல்லாரோக்கியமும், நல்வாழ்வும் அளிப்பதில் தாதிமாரின் பங்கு மிகவும் முக்கியமானது.

## 47 நூலகம்

**'கண்டதும் கற்பக் பண்டிதனாவான்'**

ஆம்! வாசித்தல் ஓர் சிறந்த பொழுதுபோக்கு மட்டுமன்றி வாசிப்பதனாலேயே மனிதன் பூரணமாகின்றான். வாசித்தல் மூலம் மனிதன் உலகின் பலவேறு விஷயங்களையும் அறிந்து கொள்கின்றான்.

இவ்வாறு நூல்களைக் கொண்ட இடமே நூலகமாகும். இது ஒரு நூலகரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்கும். எமக்கு என்னென்ன விடயங்கள் வேண்டுமா அந்தந்த விடயங்களில் எல்லாம் வேண்டிய நூல்கள் யாவும் அங்கிருக்கும்.

எப்போதும் அமைதி காக்கப்பட்டிருப்பதால் எந்தவித இடையூறுமின்றி வாசிப்பதற்கோ, படிப்பதற்கோ சிறந்த இடமாக விளங்குவது நூலகமே.

உயர் வகுப்புகளிலோ, பல்கலைக்கழகங்களிலோ சரி பாடவிதானத்தில் ஒரு பகுதியை மட்டுமே கற்பித்துவிட்டு மீதி விளக்கங்களை நூலகத்தில் கற்கும்படி கூறுவர்.

சிறுவயதிலேயே நாம் நூலகத்தைப் பயன்படுத்திப் பழகிக் கொள்ள வேண்டும். பாடசாலை நூலகங்கள், கிராமிய நூலகங்கள் அலுவலகங்களில் உள்ள நூலகங்கள் என எங்கு பார்ப்பினும் நூலகங்கள் காணப்படும். ஆசிரியர்கள் போல உலக அறிவு விஷயங்களைத் தரும் நூலகங்கள் எமக்கு நல்ல நண்பர்கள் போன்றவாகும்.

## 48 எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

உலகில் பிறந்த எல்லோரும் உயர்வான வாழ்வு வாழவில்லை. சிலர் பணம் பொருள் இன்றி வறுமையில் துன்பப்படுகின்றனர். சிலர் பணம் பொருளிருந்தும் அதனைப் பாதுகாக்கவும், மேலும் நல்ல வழியில் பயன்படுத்தவும், அதனைப் பெருக்கவும் தெரியாது துன்பப்படுகின்றனர். இவ்வாறான துன்பங்கள் யாவற்றிற்கும் காரணம் அறியாமையே.

ஆம்! நல்லறிவு ஞானம் வரவேண்டுமாயின் கல்வி அவசியம் என எண்ணி அன்றாட வாழ்வில் கணக்கு வழக்குகளை அறிந்து கொள்ள எண்ணும் அதன் அறிவும் அவசியம். அத்தோடு பிறருடன் தொடர்பு கொள்ளவும். பிற விடயங்களைத் தெரிந்து கொள்வும் எழுத்தறிவு மிகவும் அவசியம். இவையிரண்டும் இல்லாத, எழுதப் படிக்கத் தெரியாத போதிய கணிதறிவு இல்லாதவர்களை யாரும் இலகுவில் ஏமாற்றிவிட முடியும். ஒரு சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம் ஆக வேண்டும் எனினும் கூட அதன் எழுத்து கணக்கு அலுவல்களைக் கவனிக்க நாம் அவர்கள் பின் அலைய வேண்டும். அவர்கள் சொல்வதே சரியென நம்பி இயங்க நேரிடும். இவ்வாறு இருப்பவர்களுக்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல பிரச்சினைகளும், சோதனைகளும் ஏற்பட்டிருப்பதும் நாம் அன்றாடம் கண்டவையே.

பணம், பொருள், சொத்துகளைத் திரட்டி வைத்திருப்போர் அதையே எந்நேரமும் சிந்தித்து காவல் காக்க வேண்டும். ஆனால் கல்வியறிவானது, கள்வராலோ, தீ, காற்று, மழை, சூறாவளி என எந்த சக்தியாலும் அழியாத, அழிக்க முடியாத சொத்தாகும்.

எனவேதான் நாம் இளமைக் காலத்தலேயே கல்வி கற்க வேண்டும். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பர்.

இவ்வாறாக எமது வாழ்விற்கு இருகண்கள் போன்று முக்கியத்துவம் பெறும் எண்ணையும், எழுத்தையும் நாம் கற்க வேண்டும். அதுவே என்றும் எச்சந்தர்ப்பத்திலும் எமக்கு விழிபோல வழிகாட்டும் என்பது திண்ணம்.

## 49 யாதும் ஊரே யாவரம் கேளீர்

இவ்வுலகில் பிறவி எடுத்த பின்பு நாம் எமக்கள் எமது அறியாமையாலும் வேறும் பல துரதிருஷ்டங்களாலும் பல ஜாதிகளையும், மதங்களையும் தோற்றுவித்து. அதனால் சண்டை. சச்சரவுகள் இட்டு இன்னல்பட்டுச் சீவிக்கின்றோம். மதத்தின் பெயரால்மதம் பிடித்து அலைகின்றோம். இனத்தின் பெயரால் கலகங்கள் ஏற்படுகின்றன. இன்று உலகின் எந்தக் கண்டத்தை எடுத்தாலும் இந்தச் சண்டைகள் இல்லாத இடமே இல்லை என்பது வெட்கப்பட வேண்டிய உண்மை.

இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நாகரீகத்தின் உச்சக்கட்டத்திலும் இன்னும் நாம் இந்த அர்த்தமாற்றவற்றுக்குச் சண்டையிட்டுக் கொள்கிறோம் என்றால் ஆறறிவு படைத்த எம் அறியாமையைப் பார்த்து ஐந்தறிவு மிருங்களும் பறவைகளும் கைகொட்டிச் சிரிக்கும். மதத்தைப் பார்க்காது மனிதனின் மனதைப் பார்த்தைப் பார்த்து மனிதநேயத்தை மதித்து மனிதரும் மனிதரும் இன. மத வேறுபாடின்றி, இன்புறும் நாள் என்று வரும் என்று மனது ஏங்குகின்றது.

எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் போல, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என நாம் நடத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தம் மதத்தை மதிப்பதுபோல் பிறர் மதத்தையும் மதிக்க வேண்டும். வேற்று மதத்தவன், வேற்று இனத்தவன் எனும் கொடிய சிந்தனை எம்மைவிட்டு நீங்கி நாம் எல்லோரும் மனிதர்கள், யாவரும் எமது சொந்தம், நாம் எல்லோரும் ஒரே இனத்தவர். பரந்து விரிந்த இந்த வானமும், பூமியும் கடலும் நம் அனைவரதும் சொத்து என்ற ஒற்றுமையடன் ஒன்றுபட வேண்டும்.

அங்கு **'யாதும் ஊரே யாவரும் கேளீர்'** எனும் கோஷம் முழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 "தர்மம் தலை காக்கும்"

'தர்மம் தலை காக்கும்' என்பது மூத்தோர் வாக்கு, நாம் செய்யும் தானதர்மங்கள் எம்மை என்றும் காத்து வாழ வைக்கும் என்பது இதன் கருத்து, ஆம்! எமக்குக் கிடைக்கும் செல்வங்களில் ஒரு பகுதியை நாம் இல்லாதவர்கட்கு கொடுக்கவென ஒதுக்க வேண்டும். எமது தேவைகளில் அத்தியாவசியமானவற்றை நிச்சயமாக பூர்த்தி செய்யத்தான் வேண்டும். ஆனால் எமது ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு, அத்தியாவசியமான தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாது தவிக்கும் எமது சமூக அங்கத்தவர்கட்கு நாம் வழங்க வேண்டும்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பாய்' என்ற ஓர் வாக்குண்டு. ஏழைக்கட்கு உதவி, அவர்கள் மனதார எம்மை வாழ்த்துவதை விட மேலான வாழ்த்து வேறெதும் இல்லை. ஏழைகள் பசியால் வாடும் போது நாம் பசி தீர்ந்தபின் அது செமிக்கவென மேலும் பழம் உண்ணுதல் நன்றா? நாம் உண்ணத்தான் வேண்டும். உடுக்கத்தான் வேண்டும், ஆயினும் எம்மைப் போன்ற பலர் இப்போது பசியால் துடித்துக் கொண்டிருப்பதையும நாம் உணர வேண்டும். சமூகத்து அங்கத்தினர் என்ற வகையில் அவர்களது பசியாற்ற நாம் என்ன செய்ய முடியும் எனச் சிந்திக்க வேண்டும். 'தனக்கு மிஞ்சித்தான் தானம்' என்பர். அது சரியானது தான். எனவே எமது தேவைகளைப் பூர்த்தி செய்து பின் ஏனையோருக்கு உதவ வேண்டும். சிலர் அதனை மறந்து உள்ளதெல்லாவற்றையும் பிறருக்கு வழங்கி விடுவதுண்டு. ஆனால் அது வரவேற்கத் தக்கதல்ல. காரணம் நாளை நம் தேவை எப்படிப் பூர்த்தியாகும் என்பதையும் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

எனவே எம்மால் குறைக்கக்கூடிய, கட்டுப்படுத்தக்கூடிய தேவையற்ற செலவுகளை, விரயங்களைக் குறைத்து, தவிர்த்து பிறருக்கு வழங்க வேண்டும். இல்லாதவர்களுக்கு வழங்குவது என்பது வங்கியில் சேமிப்புச் செய்வது போன்றது. பிறிதொரு நேரம் எமது ஆபத்தின்போது நாம் செய்த தானங்களும் தர்மங்களும் வேறு ஓர் உருவில் வந்து எம்மைக் காக்கும். எனவே சிறுவயதிலிருந்தே நாம் இந் நற்செயலைப் பழகிக் கொள்வோமாக.

'இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பாய்' என்ற பாரதியார் கனவு நனவாக நடப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51 "ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு"

எந்தக் காரியத்தை நாம் செய்தாலும் அதற்கு ஓர் வரையறை உண்டு. இவ்வாறே எவ்வளவு நாம் செலவழித்தாலும் நாம் அதனை கணக்குடனேயே செலவழிக்க வேண்டும். கைபோன போக்கில் செலவழித்தால் விரைவிலேயே எதுவுமற்ற ஏழைகளாகிவிடுவோம்.

பொருளும் பணமும், செல்வமும் புகழும் இருக்கும்வரை பழுத்த மரத்தை நாடி வரும் வௌவால்கள் போல் பிறரும் நம்மை நாடி வருவர். எம்மிடம் அவை இல்லை என அறிந்த மறுகணமே அவர்களும் மறைந்த விடுவர். எனவே தேவைக்கு அதிகமாகப் பணத்தை வைத்து சிந்திச் சிதற வேண்டியதில்லை. ஆனால் அளவோடு செலவழித்து வருதல் வேண்டும். ஒவ்வொரு செலவுக்கும் நாம் கணக்கு வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். இல்லையேல் எதற்காக, எவ்வளவு செலவழித்தோம் என்ற கணக்கு புரியாமல் நாம் தடுமாற நேரிடும். இது தவிர கணக்கு எழுதி, ஒவ்வொரு செலவினத்தையும்செய்து வருவோமாயின் தேவையற்ற செலவுகள் எவை, தேவையான செலவுகள் எவை என நாம் உணர்ந்து மறுமுறை அவ் வீண்விரயங்களைத் திருத்தி கட்டுமட்டாக செலவுசெய்து வாழப் பழகவோம். 'அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பது பழமொழி. அதற்கேற்பவே நம் செலவுகளும் ஏதோ ஒரு விஷயத்திற்காகவேனும் அளவிற்கு அதிகமாக இருத்தலும் கூடாது.

இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்றால் ஒரேவழி எதையும் கணக்கு வழக்குகளுடன் செய்வதே. எனவேதான் ஆற்றில் தானே போடுகிறோம் என்ற நினைத்து அதைகூடச் சும்மா போட்டு விடக் கூடாது. எதிலும் கணக்கு இருக்க வேண்டும் மென்பதற்காகவே இவ்வாறு நம் பெரியோர் சொல்லி வைத்தனர்.

## 52 'மாதாவை ஒரு நாளும் மறக்கவேண்டாம்'

இந்த உலகில் நாம் வந்து பிறக்கக்காரணம் அன்னையும் தந்தையுமே. இதனாலேதான் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பர் ஆம்! பத்துமாதம் எம்மைச் சுமந்து, எவ்வளவோ துன்பப்பட்டு நம்மைப் பெற்று, தன் உதிரத்தை பாலாக்கி, அன்பு கலந்து ஊட்டி, நாளும் பொழுதும் கண்ணிமை கண்ணைக் காப்பதுபோல் எம்மைக் காத்து, வளர்த்து, நல்ல பழக்க வழக்கங்களையும் நல்ல அறிவுரைகளையும், புத்திமதிகளையும், கதைகளையும் கூறி எம்மை ஆளாக்கிய அன்னைக்கு நாம் செய்யும் கைமாறு என்ன?

இன்று பலர் பெற்றோரை மதிக்காமலும், மறந்தும் தம் இச்சைப்படி நடக்கின்றனர். சிறகு முளைத்த பறவை போல, தம் காலில் தாம் நிற்க முடிந்தவுடனேயே பெற்றோரைப் பிரிந்துவிடுகின்றனர். பெற்ற மனது வாழ்த்தும்போது தான் நாம் உயர வளர முடியும். பெற்ற வயிற்றையும் மனத்தையும் துடிக்க வைத்து நாம் என்றும் நல்ல வர்வு வாழ முடியாது. அந்த மனது துன்பப்பட்டு வேதனைப்படலாம் பிள்ளைகளாகிய நாம் என்றும் முன்னேற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தந்தையைப் பேணி அவர்கள் ஆசீர்வாதம் பெற்று வாழும் வாழ்வே நம் உயர்விற்கு வழி. அவர்கள் என்றும் எம் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுபவர்கள், மகிழ்ச்சியடைபவர்கள்.

**'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய'**

என்ற திருக்குறள் வரிக்கிணங்க தன் மகனை நல்ல பெரும் அறிஞர்கள் சபையில் பெரிய ஓர் அறிஞர் என கேட்கும்போது அந்தத் தாய் அவனைப் பெற்றபோது பெற்ற இன்பத்தை விடப் பெரிய இன்பம் அடைவாளாம். நாம் எத்துணை துன்பம் செய்யினும் அவற்றையெல்லாம் நிலம் போலத் தாங்கி எம் வாழ்விற்கு தன்னை அர்ப்பணிக்கும் தெய்வப் பண்பைப் பூஜித்துப் போற்றி வருவோமாயின் அதுவே நம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழியாகும்.

**'அன்னையைப்போல் ஒரு தெய்வம் இல்லை - அவள்**
**அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை'**

என்பது உண்மை. இதே போலவே, இன்னம் ஓர் பாடல் எமக்குக் கூறும் அறிவுரை இவ்வாறு உள்ளது.

**'அம்மா என்றழைக்காத உயிரில்லையே....**
**அம்மாவை வணங்காது உயர்வில்லையே....'**

எனவே நாமும் எம் நடமாடும் தெய்வமாகிய அன்னையின் பாதம் தொழுது வாழ்வில் உயர்வோமாக.

## 53 'மண் குதிரை நம்பி ஆற்றிலிறங்கலாமா'

*'மண்குதிரை நம்பி ஆற்றிறங்கலாமா'* என்னும் பழமொழி இன்று திரிபடைந்து *'மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கலாமா'* என வந்துவிட்டது. எனினும் இரண்டினதும் கருத்து உணர்த்துவது ஒன்றே.

மண் குதிரை என்பது ஆற்றின் நடுவில் மண் திட்டுத் திட்டாக இருப்பதாகும். இது ஆற்றிற்கு வெளியில நின்று பார்க்கும்போது மண்திட்டாகத் தான் தெரியும், ஆனால் அது வன்மையான நிரந்தர மண்திட்டு அல்ல. இதனை நம்பி ஆற்றில் இறங்கி அல்லல் பட வேண்டியதுதான்.

இதைப் போலதேதான் மண்ணால் செய்யப்பட்ட குதிரையை, நம்பி அதில் ஏறி ஆற்றில் இறங்கினால் அது நீரில் கரைந்து விட நாம் ஆற்று நீரில் அமிழ்ந்து விடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் படி நாம் உணர்ந்து கொள்ளும் அறிவுரை யாது எனின், நிலையற்ற ஒன்றினை நம்பி நாம் எம் நடவடிக்கைகளைத் தொடங்குதல் ஆகாது என்பதேயாகும். எதற்கும் ஸ்திரமான நிலை வேண்டும். அவ்வாறில்லாத மாயையை நம்பி நாம் காரியங்களைத் தொடங்குதல் கூடாது. அந்த நிலையில்லாத தன்மை மறைந்து போனபின் நாம் நட்டாற்றில் தத்தளிப்பது போல தவித்துப் போக நேரிடும். எனவே எதையும் நாம் சிந்தித்து திட்டமிட்டு ஸ்திரமான ஆதாரங்களும், பக்கபலங்களும் இருக்கும் என உணர்ந்தே எந்தக் காரியத்தையும் செய்தல் வேண்டும்.

## 54 "கற்றாங்கு ஒழுகு"

**'கற்க கசடறக் கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக'**
என்பது திருக்குறள்.

ஆம்! நாம் கற்கும் போது ஐயம் இன்றிச் சிறப்பாக தெளிவாகக் கற்க வேண்டும். இவ்வாறு கற்றுக் கொண்டபடியே பின் நாம் ஒழுகுதல் வேண்டும். எனவே கற்கும் போது நல்ல விடயங்களைக் கற்க வேண்டும்.

பெற்றோரை மதித்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பாவச் செயல்களைச் செய்யாதிருத்தல் போன்ற நற்பண்புகளைக் கற்கின்றோம். ஆனால் நடைமுறை வாழ்வில் இதன்படி நடக்காவிடின் கற்பதில் அர்த்தம் எதுவும் இல்லை.

சூழலைப் பாதுகாக்க வேண்டும், மரங்களை நட வேண்டும் என்று கற்று விட்டு மரங்களை அழிப்பது நியாயமா? இல்லை. பல மரங்களை நட வேண்டும். சூழலைப் பாதுகாக்க வேண்டும். இச் சூழல் நன்றாக இருந்தாலேயே இதில் வாழும் நாமும் நன்றாக வாழ முடியும். தவிர *'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்'* என்று ஓர் வேடிக்கையான முதுமொழி உண்டு. சமய விடயங்களிலும் நாம் எல்லோரும் ஒரே மதத்தவர் என்ற உணர்வு வர வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் மதத்தைப் பின்பற்றுவதுடன் பிற மதங்களின் கருத்துக்களையும் மதித்து நடக்கப் பழகுதல் வேண்டும்.

நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளவே நாம் கல்வி கற்கின்றோம். அதன்படி நடந்தாலேயே நம் வாழ்வும், நல் வாழ்வாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 55 "சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது"

ஒரு காரியத்தைச் செய்து, அதனால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் அந்தக் காரியத்தைச் செய்ய விளைய மாட்டார்கள் என்பது இப்பழமொழி கூறும் கருத்தாகும். ஒரு குழந்தைக்கு நெருப்பச் சுடும் என்பது தெரியாது. அது முதல் தடவை நெருப்பைத் தொட்டு விளையாட நினைத்துத் தொட்டபோது அது சுட்டு விடும். அதன் பின் நெருப்பு சுடும் என்பது அறிந்த குழந்தை என்றுமே அதனைத் தொடாது அவதானமாக நடக்கப் பழகிக் கொள்ளும்.

தீய பழக்கவழக்கங்களினாலும் எமக்குத் தீமையே விளையும், இதனைச் சிறு வயதிலேயே உணர்ந்தால் சிறுவர்கள் தீய செயல்களைச் செய்ய மாட்டார்கள். உதாரணமாக பொய் சொல்லுதல் ஓர் தீய பழக்கம். அதனால் பின்னர் பல பொய்கள் சொல்ல வேண்டி ஏற்படும். நாம் சொன்னது பொய் எனப்பிறர் அறிந்து கொள்ளும் போது வெட்கித் தலைகுனிய வேண்டும். இதனை உணர்ந்தால் பொய் சொல்ல மாட்டோம்.

பெற்றோர் சொற் கேளாது நண்பர்களுடன் ஆபத்தான இடங்களிற்கு தனியே சென்று பெரும் ஆபத்தில் சிக்கி மீண்டவர்கள் இனி என்றும் இவ்வாறு என்றும் செய்ய மாட்டார்கள்.

எனவே தான் ஒரு தடவை ஓர் செயலால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் அச்செயலைச் செய்ய மாட்டார்கள். இதனையே 'நல்லமாட்டிற்கு ஒரு சுடு' எனும் பழமொழியும் உணர்த்துகின்றது.

## 56 விளையும் பயிரை முளையில் தெரியும்

எந்த ஒரு காரியத்திலும், அது ஆரம்பிக்கும் விதத்திலிருந்தே அது பிற்காலத்தல் எத்தகைய விருத்தியைக் கொண்டமையைப் போகிறது என்பது தெரியும். சிறுபிள்ளைகளாக இருக்கும்போது எமது பழக்கவழக்கம் நல்லதாக இருப்பின் அப்பிள்ளை பிற்காலத்தில் நற்பழக்கமுள்ள சிறந்த மனிதனாக விளங்குவான் என்பதில் ஐயமில்லை சிறுவயதில் நன்கு கல்வி கற்கும் குழந்தை பிற்காலத்திலும் சிறந்த கல்விமானாக விளங்குவான். அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கிய ஆபிரகாம் லிங்கன் சிறுவயதில் எவ்வளவோ வறுமையிலும் நன்கு கல்வி கற்று வந்தார். இதுவே பிற்காலத்தில் அவர் உலகம் புகழும் பெருமனிதனாக விளங்கியதற்குக் காரணமாகும்.

இதற்கு மாறாக 'முதற்கோணல் முற்றும் கோணல்' என்பது போல சிறுவயதிலேயே தீய பழக்கவழக்கங்களைக் கொண்ட பிள்ளை வாழ்நாள் பூராவம் தீய பழக்கவழக்கங்கள் நிறைந்த ஓர் சமூகவிரோதியாகவேயிருக்கும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது பழமொழி. எனவே சிறுவயதிலேயே தீய பழக்கவழக்கங்களைத் திருத்தி நற்பழக்கவழக்கங்களுடன் நற்பிரசை களாக வளர வேண்டும். இதுவே பிற்காலத்திலும் சிறந்த மனிதராக நாம் உருவாக வழி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சிறுவர்களாகிய நாமும் சிறுவயதில் இருந்தே நற்பழக்கவழக்கங்கள் கொண்ட நல்ல பிள்ளைகளாக, நற்கல்வி கற்று வளர வேண்டும். இது சிறந்த வாழ்வை எமக்கு ஏற்படுத்தித் தரும்.

## 57 சூரியன்

பகலவன், கதிரவன், ஆதவன், ஞயிறு எனப் பல பெயர்களால் வழங்கப்படும் சூரியன் சூரியக்குடும்பத்தின் பிரதானமான நட்சத்திரமாகும். சூரியனது ஒளிரும் கதிர்கள் எம் உலகிக்கு வந்தடைகின்றன. புவியிலிருந்து சூரியன் சுமார் 150 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இவ் ஒளிக்கதிர்கள் புவியை வந்தடைவதற்கு 8 1/3 நிமிடங்கள் எடுக்கின்றன.

பிரமாண்டமான இச் சூரியனது விட்டம் 1,390,000 மீற்றர் ஆகும். இதன் மேற்பரப்பு வெப்பநிலை நாம் எண்ணிக்கூடப் பார்க்க முடியாதளவாகும். மேற்பரப்பில் சூரியனது வெப்பநிலை சுமார் 6,000 செல்சியஸ் எனக் கணிக்கப்பட்டுள்து.

இவ்வாறான சூரியக் கதிர்களினாலேயே, அவை தரும் வெப்பத்தினாலேயே நாம் உலகில் உயிர் வாழ முடிகின்றது என்று சொன்னால் மிகையாகாது. சூரிய வெப்பத்தினாலேயே நீர் ஆவியாகி அதன் மூலம் மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. சூரிய வெப்பத்தினாலேயே ஒளித்தொகுப்பு நிகழ்ந்து மரங்கள் உணவு தயாரிக்கின்றன. இதனால் எமக்குத் தாவரங்கள் கிடைக்கின்றன. சூரிய வெப்பத்தனாலேயே இலட்சக்கணககான நுண்கிருமிகள் அழிகின்றன. இதனால் எமது சூழல் பாதுகாக்கப்படுகின்றது. சூரிய ஒளியினால் எமக்கு வெளிச்சம் கிடைக்கின்றது. உலகம் ஒளி பெறகின்றது.

உழவுத் தொழிலுக்கு உயிர்நாடி சூரியன் என்பதாலேயே, சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகத் தமிழர் திருநாள் தை முதலாம் நாளன்று தைப்பொங்கலாக கொண்டாடப்படுகின்றது. பண்டைக்காலத்திலிருந்தே இந்துக்கள் சூரியனைத் தெய்வமாக வணங்கி வந்திருக்கின்றனர். இவ்வாறு மட்டுமன்றி எம் உடலுக்கு பல நோய்களை வராமல் தடுக்கும் சக்தியும், வந்த நோய்களைத் தீர்க்கும் சக்தியும் இச்சூரிய பகவானுக்க உண்டு. இவ்வகையில் சூரியன் எமக்கு வாழ்வு கொடுக்கும் ஒளியாகும் என்றால் மிகப்பொருத்தமே.

## 58 தாவரங்கள்

தாவரங்கள் புவியின் உயிர்நாடிகள் எனப்படுகின்றன. தாவரங்கள்உலகின் இயக்கத்திற்கு பெரிதும் துணை புரிகின்றன. தாவரங்கள் எமது சுவாசத்திற்க வேண்டிய ஒட்சிசனை வெளிவிடுகின்றன. வளிமண்டலம் சுத்தமான காற்று நிறைந்த வளிமண்டலமாக இருப்பதற்கு தாவரங்களே உதவுகின்றன. தாவரங்கள் விலங்குகளுககு உணவாகின்றன. இதனால் மனிதர்கள், விலங்குகளிலிருந்தும் சிறந்த பயனைப் பெற முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரங்கள் குளிர்ச்சியைத் தருவதுடன் நிழலையும் தருகின்றன. தாவரங்கள் மண்ணின் மேற்பரப்பில் வேர்களைப் பரப்பி மண்ணைப் பற்றி வைத்திருக்கின்றன. இதனால் மண் அரிப்பு ஏற்படாமல் தாவரங்கள் மண்ணின் வளத்தைப் பாதுகாக்கின்றன. மேலும் தாவரங்களில் இருந்து நீர், ஆவியுயிர்ப்பு எனும் செயல்முறையால் ஆவியாகி வளிமண்டலத்தை அடைகின்றது. இதனால் மழைவீழ்ச்சியை ஏற்படுத்துவதில் தாவரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன எனலாம்.

இவை தவிர சில தாவரங்கள் அழகையும், மனதுககு இனிமையையும் தருகின்றன. இவ்வாறு எல்லா வழிகளிலும் தாவரங்கள் மனிதனுக்கு நன்மை செய்து பயனுள்ளவையாகவேயுள்ளன.

இத்தகைய பயனுள்ள தாவரங்களை அழியவிடாது பாதுகாப்பதும் புதிதாக பல தாரவங்களை உண்டாக்குவதும் நம் எல்லோரதும் கட்டாய கடமையாகும். தாவரங்கள் இல்லாது போனால் வரட்சி, மண்ணரிப்பு, பட்டினி, சூழல் அசுத்தமடைதல் போன்ற பல தீய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

எனவே தான் மரம் நடுகை, காடு வளர்ப்பு போன்ற நடவடிக்கைகட்கு தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஊக்கவிக்கப்பட்டு வருகின்றது. எனவே சிறுவர்களே, நீங்களும் மரம் நடுவீர்! மாட்சிமை பெறுவீர்!

## 59 வியத்தகு விஞ்ஞானம்

முற்காலத்தில் மனிதன் இயற்கைக்குப் பயந்தும், கட்டுப்பட்டும் வாழ்ந்தான். இயற்கை மனிதனை ஆட்கொண்டது. ஆனால் இன்றோ மனிதன் குறிப்பிடக்கூடியளவிற்கு இயற்கையை தன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் கட்டுப்படுத்துகின்றான். கட்டுப்படுத்த முடியாத வற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறான்.

மழை பெய்தாலும், கொடிய வெப்பத்துடன் சூரியன் எறித்தாலும், மனிதன் தன்னைப் பாதுகாக்க இன்று வசதியான வதிவிடங்களை அமைத்தது அதனுள் இருந்து தன்னைப் பாதுகாக்கிறான். புயல், சூறாவளி என மனதைக் கிலி கொள்ள வைக்கும் அபாயத்திலிருந்தும் இன்று விஞ்ஞானம் மனிதனைக் காக்கின்றது. புயல் உருவான இடத்தில் புயல் அல்லது சூறாவளியின் கண் எனப்படும் மையப் பகுதியில் ரொக்கட் போன்ற கண்டைச் செலுத்தி வெடிக்க வைத்து சூறாவளியைச் செயலிழக்கச் செய்து மனிதன் பாதுகாக்கப்படுகின்றான்.

இன்று விண்ணைத் துளைத்துக் கொண்டு செல்லும் ரொக்கட்டுகள் விஞ்ஞான, நிலப்பயன்பாட்டு ஆய்வு, மற்றும் போர் நடவடிக்கைகளிற்கெல்லாம் உதவுகின்றன. மேலும் விவசாயத்தில் உழுதலில் இருந்து விளைச்சல் அறுவடை செய்து பக்குவப்படுத்தும்வரை இயந்திரங்களே செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவத்துறையில் நோய்களைக் கண்டுபிடித்து அதற்குரிய வைத்திய நடவடிக்கைகளை மேற்கொள்வது வரை யாவும் இன்று இயந்திரங்களின் உதவியால் அற்புதமாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நோய் வரமுன்பே தடுக்கும் பல முன்னோடி நடவடிக்கைகளிலும் இன்று விஞ்ஞானம் வியத்தகு பங்களிக்கின்றது.

இவ்வாறு விளையாட்டு, சமையல், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, பொழுதுபோககு என எத்துறையிலும் இன்று விஞ்ஞானம் தன் கால்களைப் பதிப்பித்து நிற்பதனை நம் அன்றாட வாழ்வில் கண்டும் அனுபவித்தும் உணர்கின்றோம்.

மனிதன் இன்று விஞ்ஞான முன்னேற்றத்தால் உலகை சுருங்கச் செய்து விட்டான். நினைத்துவுடன் உலகின் எந்த இடத்திற்கும் போய் வரக் கூடியளவு விஞ்ஞானம் உலகைச் சுருங்க வைத்து விட்டது. ஆயினும் இன்றும் இயற்கை தன் கைகளைச் சில பாகங்களில் விரித்து வைத்து மனிதனைக் கட்டுப்படுத்துவதும் உண்மையே.

## 60 இறை வழிபாடு

மனிதன் விஞ்ஞான உலகில் ஓடும் இயந்திரங்களுடன் ஓடி அலைந்து இயந்திரமாகவே தானும் மாறிக் களைத்த வருகின்றான். ஆனால் எவ்வளவு தான் விஞ்ஞானம் முனனேறினாலும் நாம் மெய்ஞானத்தை விட்டு விலகி விடக்கூடாது. மெய்ஞ்ஞானம் இல்லாத விஞ்ஞான முன்னேற்றம் ஆபத்தானது. அது அழிவிற்கே வழிகோலும். அத்தகைய மெய்ஞானத்திற்கு இறை வழிபாடும் இன்றியமையாதது.

எந்த மதமாக இருந்தாலும், எந்த மொழியாக இருந்தாலும், இறைவன் என ஒருவனை வணங்குகின்றோம். எக் காரியத்தைத் தொடங்கும் முன்பும் இறைவனை வழிபட்டு அக்காரியத்தை நன்கு திறம்படச் செய்து முடித்துத் தரும்படி வேண்டிக் கொள்கிறோம்.

கல்வியில், விவசாயத்தில், மருத்துவதில், விளையாட்டில் என எதிலும் இறைவனை வழிபட்டே ஆரம்பிக்கின்றோம்.

நம் அன்றாட வாழ்விலும் இறைவழிபாட்டுடனே எமது தொழில்களை ஆரம்பிக்கின்றோம். இறைவழிபாடு எமது மனதிற்கு ஆறுதலையும் அமைதியையும் தருவதுடன் தைரியத்தையும் தெம்மையும் தருகின்றது. சிறுவயதிலிருந்தே இறைவழிபாட்டில் ஈடுபட்டுவரும் ஒருவரது மனம் பக்குவப்பட்டு, பதப்படுத்தப்படுவதுடன் அவரது வாழ்வில் தீய செயல்களுக்கு இடமே இருக்காது என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. இயந்திரமாக இருக்கும் இருபதாம் நூற்றாண்டு வாழ்விலிருந்து ஓரளவேனும் உடலும், உள்ளமும் அமைதி பெற வேண்டுமாயின் இறைவழிபாடே அதற்கு ஒரே வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 61 சந்தை நாள்

எங்கள் ஊரின் ஆலடிச் சந்தை வாரத்தில் மூன்று நாட்கள் கூடுவதுண்டு. ஞாயிறு, செவ்வாய், வெள்ளி என்பன அந்நாட்களாகும். ஏனைய நாட்களைவிட ஞாயிறு அன்று கூட்டம் இன்னும் அதிகமாக இருக்கும். அன்றும் ஞாயிற்றுக் கிழமை தான். சந்தையில் ஒரே கூட்டம். எம் ஊரிலும். அயலூரிலும் இருந்து உற்பத்தியாளர்கள் தம் பொருட்களைச் சந்தைக்கு கொண்டு வந்திருந்தனர்.

தரகர்கள், மொத்தவியாபரிகள், சில்லறை வியாபாரிகள், நுகர்வோர் எனப் பலதரப்பட்டோரும் காணப்பட்டனர். வாங்குவோரும், விற்போரும் பேசிக் கொள்வதும் பேரம் பேசுவதும் ஒரே இரைச்சலாகவேயிருந்தது.

மரக்கறி வகைகள் ஒருபுறம் கத்தரி, வெண்டி, பூசனி, பயிற்றங்காய், பாகற்காய், முருங்கைக்காய், கிழங்கு, தக்காளி, கோவா, கரட், பீற்றூட் போன்றனவும் கீரை வகைகள் தனியாகவும் இவற்றிற்கு அப்பால் பலா. மா, வாழை, விளாம்பழம், திராட்சை, அப்பிள் எனப் பழவகைகள் தனியாகவும காணப்பட்டன. பழக்கடைப்பகுதியின் வாசனை கவர்ந்து இழுத்தது.

மறுபுறம் மீன், இறைச்சி, முட்டை, கருவாடு தனியாக இருந்தன. பெட்டி, கடகம் சுளகு, பாய், தொப்பி எனப் பல வகைப் பொருட்களுடன் சட்டி, பானை, பாத்திர பண்டங்கள் தனியேயிருந்தன. இவை தவிர விளையாட்டுப் பொருளுட்கள், உடை வகைகள், அலங்காரப் பொருட்கள் என்பனவும் தனியே இருந்தன.

எங்கு பார்த்தாலும் பேரப்பேச்சும், ''இலாபம் இலாபம்'' என்ற சத்தமுமே விடாது ஒலித்துக் கொண்டிருந்தது. வெறுமனே என்னைப் போல பெற்றோருடன் வந்த சிறுவர்கள் விளையாட்டுப் பொருட்கள் பகுதியிலேயே முற்றுகையிட்டிருந்தனர்.

மற்றும் ஒருபுறுத்தே பெரிய வாகனங்களில் மரக்கறிவகைகள் வந்து இறங்கியபடியும், வேறு சில ஏற்றப்பட்டுக் கொண்டும் இருந்தன. சிறு வியாபாரிகள் பெட்டிகளிலும் பைகளிலும் பொருட்களைக் கட்டிக் கொண்டு தத்தம் வாகனங்களில் சென்றனர். மக்கள் கூடைகளிலும் கைகளிலும் வேண்டிய பொருட்களை நிரப்பிக் கொண்டு சென்று கொண்டிருந்தனர்.

காலை 5.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்தை நண்பகல் 12.00 மணிவரைகூட தொடர்ந்து காணப்படுவதுண்டு. சுமார் 12.00 மணியளவில் அனைத்துப் பொருட்களும் விற்கப்பட்டு வியாபாரிகள் தத்தம் பணத்தை எண்ணிச் சேகரித்துப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டும், அன்றைய சந்தை விலை வீழ்ச்சி, உயர்ச்சி பற்றி சம்பாஷித்தபடி இருப்பதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 62 புகையிரத நிலையம்

இலங்கையின் பிரதான நகரான கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் இரவு பகல் என எந்நேரமும் இயங்கிக் கொண்டேயிருக்கும். புகையியரதங்கள் பல்வேறு பாகங்களிலிருந்தம் வருவதும், போவதுமாக இருக்கும். பயணிகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பர்.

கண்டி. வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, மாத்தறை எனப் பல்வேறு திசைகளிலிருந்தும் புகையிரதங்கள் தலைநகர் நோக்கி வருகின்றன. இவ்வாறான பகுதிகளுக்குச் செல்லும் புகையிரதங்களும் உண்டு.

புகையிரதம் வரும் நேரம், செல்லும் இடங்கள், சென்றடையும் நேரம் போன்றன விபரங்கள் தொலைக்காட்சி அமைப்பிலான பெட்டிகள் மூலம் பல்வேறு இடங்களிலும் காட்டப்பட்டு இருக்கும். பிரயாணிகள் சிரமமின்றி அவற்றைப் பார்த்து தத்தம் புகையிரத நேரத்தை அறிந்து கொள்வர்.

இவை தவிர மூன்று மொழிகளிலும்அறிவிப்புகள் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கும். புகையிரதம் புறப்பட முன் அது செல்லவிருக்கும் இடம், இடையிடையே தரித்துச் செல்லும் இடவிபரங்கள் அவ்ஒலிபரப்பில் ஒலிபரப்பிக் கொண்டிருக்கப்படும். செல்லும் நேரம் வந்ததும் குகையிரத அலுவலக ஊழியர் பச்சைக் கொடியசைத்ததும் புகையிரதம் புறப்படும்.

கோட்டைப் புகையிரத நிலையத்தில் காணப்படும் அனைத்துப் புகையிரத மேடைகளும் எந்த நேரமும் இயங்கிபடியே இருக்கும், பிரயாணிகள் வசதி கருதியும் இடநெருக்கடி தவிர்ப்பு, போக்குவரத்து வசதிக்காகவும் மேற்பாகங்களினால் போய் வரக் கூடிய பாலப்பாதைகள் அமைக்கப்பட்டிருக்கிறன. மேலும் சிற்றுண்டிச்சாலை, ஓய்வெடுக்கும் அறை, பத்திரிகைச்சாலை என்பனவும் உண்டு.

கருமபீடங்களில் சுறுசுறுப்பாக, இயந்திர உதவியுடன் சீட்டுக்கள் விற்கப்பட்டு கொண்டிருக்கும். உள்ளே போவோரிடமும், வெளியே வருவோரிடம் காவலாளிகள் சீட்டுக்களைப் பரிசோதிப்பர்.

புகையிரத மேடைகளில் எந்நேரமும் மக்கள் அவசர அவசரமாக பொதிகள் பெட்டிகள் சகிதம் இயங்கிக் கொண்டேயிருப்பர். சிலர் ''சீற்'' களில் அமர்ந்திருப்பார். தமது உற்றார் உறவினரைப் பிரியும் துயரில் சிலர் சோர்ந்து காணப்பட வேறு சிலர் தம் உறவினரை வரவேற்க மகிழ்வுடன் காத்திருப்பர். எதையும் அறியாப் பருவச் சிறார்கள் இங்கும் இங்கும் ஓடி விளையாடியபடியும் இருப்பர்.

இவ்வாறு தினமும் சுறுசுறுப்படன் இயங்கி போக்குவரத்து சேவையாற்றும் பிரதான மையமாக இக்கோட்டைய புகையிரத நிலையம் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 63 பேனாவின் சுயசரிதை

இன்று இந்தக் குப்பைக் கூடையில் தூக்கி வீசப்பட்டு விட்டேன். இன்று என்னை வீசிய இதே கைகள் தான் இருப்பதிநான்கு வருடங்களுக்கு முன் என்னை அன்பாக தன் சட்டைப் பையில் வைத்துக் காத்து வந்தன. ஆம்! அன்று இந்த இராமநாதன் ஐயாவிற்கு 19 வயது. இவர் 10ம் தரம் சித்தியடைந்த போது இவரது மாமா என்னை இவருக்கு பரிசாகக் கொடுத்தார். இங்கிலாந்தில் என் பிறப்பு என்றாலும், அங்கிருந்து என்னை இலங்கைக்கு ஏற்றுமதி செய்து கொழும்பில் வைத்திருந்த பின் இரு தினங்ளில் யாழ்ப்பாணம் கொண்டு வந்தனர். இங்கு ஓர் புத்தகக் கடையில் காட்சிப் பெட்டியிலிருந்த என்னை இராமநாதன் ஐயாவிற்கு பரிசாக வாங்கி கொடுத்த அன்று இரவு அவர் தூங்கும்வரை என்னைத் தன் கைகளில் ஏந்தி புரட்டிப்புரட்டி ஆசையாசையாகப் பார்த்துக் கொண்டிருந்தார். தூங்கும் போதும் அவருடன் நானும் அவரது தலையணையின் அடியில் தூங்கினேன், மறுநாள் பாடசாலைக்கு என்னை எடுத்துச் சென்றார். அங்கும் என்னைப் பலரும் பார்த்துப் பார்த்து ஆசைப்பட்டனர். இராமநாதன் ஐயாவிற்கு ஏகப்பட்ட சந்தோசம், ஐயாவிற்கு சந்தோஷம் கொடுக்கின்றேனே, என்று எனக்கும் மிகவும் மகிழ்ச்சி.

இவ்வாறே தினமும் அவருடன் பாடசாலை சென்று வந்தேன். என் மூலமாகவே பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை எழுதினார். முதல் தடவையிலேயே வைத்தியக் கல்லூரிக்கு இடம் கிடைத்தது. அங்கிருந்து ஐயா கொழும்பு வந்து அங்கேயே மருத்துவப் படிப்பைத் தொடர்ந்தார். அங்கும் ஐந்து வருடங்களும் என்னாலேயே தன் பரீட்சைகளை எழுதினார். நான் அவருக்கு மிகவும் ராசி என்றுஅடிக்கடி எல்லோருக்கும் கூறுவார். என் ஐயாவின் திருமணப் பதிவிற்குக் கூட என்னாலேயே கையொப்பமிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். பின்னரும் மருத்துவ தொழிலில் ஈடுபடும்போது என்னைக் கொண்டு ஆயிரக்கணக்கானோரின் நோய் தீர்க்க மருந்து எழுதிக் கொடுத்தார். என்கு நான் பிறந்த பயனை முழுமையாக அடைந்துவிட்டதுபோல் ஒரு நிம்மதி.

இப்படியாக 20 வருட காலங்கள் ஓடி மறைந்தன. ஒரு நாள் ஐயாவின் சட்டைப்பயில் கம்பீரமாக இருந்தேன், ஐயா அன்று சர்வதேச மருத்துவ நிபுணர்கள் மாநாட்டில் பேசிக் கொண்டிருந்தார். எனக்குப் பெருமையாக இருந்தது. தலைக்கனமும் ஏறியது. அன்று மதியபோசனத்தின் பின் ஏதோ அலுவலாக ஐயா குனிந்த போது நான் விழுந்து விட்டேன், ஐயா பதறிப் போனார். உடனேயே என்னைத் தூக்கி எடுத்துப் பார்த்தார். வாழ்க்கையில் முதன்முதலாக நான் விழுந்த நாள். எனக்கு அடி மிகவும் பலமாகப் பட்டதால்வலி அதிகமாகவே இருந்தது. எனது பற்களில் ஒன்று முறிந்து போயிருந்தது. ஐயாவிற்கு மிகவும் கவலையேறிவிட்டது. வீட்டிற்குச் சென்றும் அம்மாவிடம் காட்டி கவலைப்பட்டார். அம்மா ஆறுதல் கூறினார். எனக்கு ஏற்பட்ட காயத்தின் வலியைவிட ஐயா படும் துயரமே எனக்கு கவலையாயிருந்தது. என் சேவையும் முன்போல இல்லை

ஐயாவ'க்கு சென்ற மாதம் ஓர் மகாநாடு இங்கிலாந்தில் நடைபெற்றது. அதற்கும் போய் வந்திருந்தார். அப்போதும் என்னையே கொண்டு சென்றனர். என் சுகயீனம் காரணமாக இவருக்கு என்னால்முழுமையாக சேவையாற்ற முடியவில்லை. இருந்தும் ஐயா என்னைக் கைவிடவில்லை ஆனால் அன்று வழமைபோல் தூய உடையணிந்து என்னையும் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு போனார். என் உடைந்த பல் வழியாக என் நீல இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் சட்டை முழுவதிலும் கசிந்து உடையை அசிங்கமாக்கியதோடு ஐயா கடமைக்கு நேரத்திற்கு செல்ல முடியாமல் ஆக்கிவிட்டது. வீட்டிற்கு உடனே திரும்பி வந்தவர் சட்டையை கழற்ற முன்பே என்னை எடுத்து இருதடவை திருப்பிப் திருப்பிப் பார்த்துவிட்டு குப்பை வாளியில் போட்டு விட்டுப் போனார்.

எனக்கு கவலை தாங்க முடியவில்லை. எனினும் என்னால் இயன்றவரை ஐயாவிற்கும் ஐயாவின் குடும்பத்திற்கும் இந்த வரைக்கும் சேவையாற்றிவிட்டேன் என்ற திருப்தி ஒரு புறம், பிறந்த ஊரை மீண்டும் ஒரு தடவை பார்க்க கொடுத்துவைத்தேனே என்ற நிறைவு ஒருபுறம் என் கவலையைக் குறைக்கின்றன. இனி என்னால் யாருக்கும் பயனில்லை. எனினும் இருந்த காலம் வரை எல்லோருக்கும் உதவினேன் என்ற பரமதிருப்தி எனக்கு உண்டு.

## 64 கடிகாரத்தின சுயசரிதை

ஜப்பான் நாட்டில் பிறந்தாலும் என் வாழ்விடம் இலங்கை தான். எனக்கு இன்று வயது 36 ஆம்! முப்பத்தி ஆறு வருடங்களின் முன் என் தாய்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டேன், இந்த வீடு குடிபுகுந்த அன்று என்னைப் பரிசாக அளித்தன '. அன்று முதல் இந்த வீட்டின் மத்தியில் அலங்காரப் பொருளாகவும் இருந்து வந்தேன்.

தினமும் வேதநாதனை காலை 4.30 மணிக்கு மணியடித்து எழுப்பி வைப்பது, மனைவிற்கு ஒரு மணிக்கு ஒரு தடவை மணி சொல்லி வேலையைத் துரிதப் படுத்துவது, பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பி வைப்பது, இதர வேளையில் வேதநாதனின் மனைவி சரியானபடி தன் கடமைகளைச்செய்ய வழி சொல்லுவது என நல்லபடியாகவே இயங்கி வந்தேன்.

முப்பது வருடங்களாக எதுவும் பிசகு இன்றி மிகவும் நன்றாகவே இருந்தேன், ஒரு வருடத்திற்கு முன் என் ஓட்டத்தின் வேகம் குறைந்து போனது, என்று என்னை ஓர் மணிக்கூட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு என்னைப்போல் பலர் இருந்தனர். சிலர் மாற்ற முடியாத நோயில் இருந்தனர் எனினும் அந்த வைத்தியர் என்னை ஒருவாறு திருத்திவிட்டார். எனக்கு மிகவும் மகிழ்ச்சி. பின்பு 4 வருடங்கள் எந்த ஒரு தடையும் இன்றி மீண்டும் சேவை செய்தேன். மீண்டும் இரு வருடத்தின் முன் என்னை சரிப்படுத்தும் போது என் திருகு ஒன்று உடைந்து விட்டது. மீண்டும் அதே மணிகூட்டு மருத்துவமனைக்க போய் ஒரு கிழமை வரை இருந்து வந்தேன். ஆனாலும் ஏதோ ஓர் குறையாயிருந்தது. அது எனக்கே தெரிந்தது.

நேற்று வேதநாதனின் மூத்த மகன் வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார். அவர் கொண்டுவந்த புதிய மணிக்கூட்டை என்னிடத்தில் மாட்டினார்கள். நான் ஒதுங்கிக் கொண்டேன். என் பதவியை ஏற்ற புதிய நண்பர் என்னைப்போல் இந்த வீட்டிற்கு உழைக்க வேண்டும் என வாழ்த்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 65 வாழைமரத்தின் சயசரிதை

எங்கள் வாழ்க்கையே எங்கள் குலைகள் கனியும் வரைதான் என்று முன்பே தெரியாமல் போயிற்று. இந்த கிணற்றடி ஓரத்தில் என்னை முதன் முதலில் வைத்து நீருற்றி பாதுகாத்தனர். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக நன்கு வளர்ந்தேன். எனக்கு நான்கு குட்டிகள் கூட இருந்தன. அவர்களது வளர்ச்சி கண்டு நான் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். சிறிது காலத்தில் நான் பெரியொரு குலை ஈன்றேன். குலையும் வரவர பெருத்து வந்தது.

வீட்டுக்காரரும் தினமும் வந்து என்னைப் பார்த்துக் கொண்டு போவார். என் குலையில் இருந்த பூவும் இதழ்கள் உதிர்ந்து சிறியதாக வந்துவிட்டது. ஒரு நாள் மதியம் வந்து வீட்டுக்காரரின் மனைவி என் குலையில்இந்த பூவை இரக்கமின்றி கத்தியால் வெட்டிப் போனாள். என் குலையிலிருந்து நீர் கசிந்து வடிந்தது. எனினும் என் குலையையும், என குட்டிகளையும் பார்த்து ஆறுதலடைந்தேன். என் குட்டிகளும் வேகமாக வளர்ந்து வந்திருந்தன. நேற்று என் குலையில் ஓர் பழம் பழத்திருந்ததை நான் பார்த்தேன். எனக்கு அது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் பட்ட மகிழ்ச்சி நீண்ட நேரம் நிலைக்கவில்லை. வீட்டுக்காரரும், வேலையாளும் ஓர் கத்தியுடன் வந்து என் குலையை வெட்டி என்னிலிருந்து பிரித்தெடுத்துச் சென்றார். அதுமட்டுமன்றி என்னையும் வெட்டி வீழ்த்தி துண்டு துண்டாக்கி எறிந்து போட்டனர். இன்று தான் உணர்ந்தேன் எங்களை மனிதர் வளர்த்துப் பாதுகாப்பது தமக்குப் பயன் பெறும் வரைதான். தாம் பயன் பெற்றதுமே என்மை வெட்டி வீசி விடுவர் என்பது. என்றாலும் இருக்கும் வரையும் இறந்த பின்பும் மனிதருக்கு நாம் உதவுகின்றோமே என்ற எம் இனத்திற்கு என்றுமே ஓர் பெருமை உண்டு.

## 66 குடையின் சுயசரிதை

வெய்யிலில் இருந்தும் மழையிலிருந்தும் மனிதருக்குப் பாதுகாப்பு அளிப்பதிலும் நாம் முன்னணியில் நிற்கின்றோம். இவ்வகையில் இன்று இவ்வாறு உருக்குலைந்து கம்பியும் கந்தல் துணியுமாக உருத்தெரியாது இருந்தாலும் நான் பெருமைப்படுகிறேன்.

இந்தியாவின் திருச்சி மாநிலத்தில் பிறந்த என்னை இந்த ஊரிற்கு வரும்போது ஒரு தடவை சீதாப்பாட்டி கொண்டு வந்திருந்தாள். தன் மருமகள் அலமேலுவிற்கு என்னை பரிசளித்து விட்டு தான் மீண்டும் ஊர் போய் விட்டாள். ஆரம்பத்தில் பிற இடம் எனக்கு கூச்சமாக இருந்தாலும் இங்கு அலமேலு அம்மாவும் ஏனையோரும் என்னை அன்போடு நடத்தியதில் இக் கவலைகள் ஓரளவு குறைந்தன.

அலமேலு அம்மா தன் குழந்தையைப் பாடசாலைக்குக் கூட்டிப் போகும் போதும் கூட்டிவரும்போது என்னை எடுத்துச் செல்வாள். அந்த பிஞ்சுக் குழந்தைக்கு நிழல் கொடுப்பதிலும், அதனை மழையிலிருந்த பாதுகாப்பதிலும் நான் மகிழ்வேன். இவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை வளர்ந்து வரும்பரை என்னைப் பயன்படுத்தியே வந்தாள். கடந்த வருடம் என் கம்பிகளில் இரண்டு கழன்றதில் புதிதாக சில கம்பிகள் மாற்றினார். அப்பொது தைத்தவலி இன்று நினைத்தாலும் வேதனையாக இருக்கும். எனினும் நான் நன்கு உழைத்தேன். என் துணி சற்று வெளிறியதாக இருந்தாலும் சேவையில் குறைவேயில்லை.

அலமேலு அம்மா சென்ற மாதம் என்னைப் பிடித்தபடி மழையில் சென்று கொண்டிருக்கும் போது வீசிய பலமான காற்றில் என் கைக்கம்பிகள் யாவும் முறிந்து போயின. திரும்பவும் என்னை நேராக்கவே முடியவில்லை.

இத்துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் கூட என் நோயைத் தீர்க்க முடியாது என்று கைவிட்டு விட்டார்கள். இதனால் அலமேலு தன் மகளிற்கு ஓர் புதிய குடை வாங்கிக் கொடுத்தாள். அதன் பின் என்னை இந்தப் பரண் மேல் போட்டு விட்டனர். எனினும் என் பழைய நினைவுகளை மீட்டிக் கொண்டு இருக்கிறேன்.

## 65 நண்பனுக்க கடிதம்

" பிருந்தாவனம்"
இல. 16, பணிமனை வீதி,
யாழ்ப்பாணம்

அன்புள்ள நண்பன் மாதவனுக்கு,

அவ்விடம் உனது நலம் நன்கு அமைய ஆண்டவனை வேண்டுகிறேன். உனது பரீட்சை முடிவுகளை எழுதிய மடல் கிடைத்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். உனக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உனது தந்தையாரின் இடமாற்றலைத் தொடர்ந்து நீயும் எனது பாடசாலையிலிருந்து உவ்விடம் மாற்றலாக வேண்டியிருந்தது. எமது பாடசாலையில் திறமையாகப் படித்து முதல் மாணவனாக சித்தியெய்தி ஆசிரியர்களினதும் மாணவ நண்பர்களினதும் பாராட்டுதலைப் பெற்ற நீ உவ்விடமும் திறமையாகப் படித்து முதல் மாணவனாக வந்திருப்பது எனக்கு மட்டுமல்ல, எமது பாடசாலைக்கே மகிழ்ச்சியையும் பெருமையையும் சேர்க்கின்றன.

உன்னுடைய திறமையும், ஆர்வமும் உன்னை மேலும் சிறந்தவனாக உயர்ந்தும்.இனிவரும் வகுப்புக்களிலும் நீ நன்கு கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெறுவாய் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

நண்பா, கல்வியில் மட்டுமன்றி விளையாட்டிலும் நீ வீரனாக இருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. நீ நன்கு கற்று சிறந்த கல்விமானாக ஒழுக்க சீலனாக உயர்வுபெற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்'**

என்ற திருவள்ளுவர் திருவாக்கிற்கு ஏற்ப உன் தாய் தந்தையர்க்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் சேர்க்க வேண்டும் என வாழ்த்துகிறேன். உனக்குச் சகல செல்வங்களையும் வழங்கிக் காக்கும்படி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உன் பெற்றோரையும் அழைத்துக் கொண்டு ஆவணி விடுமுறைக்கு இங்கு வா. என் நண்பர்கள் யாவரும் உன்னைப் பார்க்க ஆவலாக உள்ளனர்.

இங்ஙனம்,
அன் அன்புள்ள நண்பன்
வைகுந்தவாசன்.

## 68 ஆசிரியருக்குக் கடிதம்

க. பரசுராமன்,
இல. 6, ''கருணைஇல்லம்''
பணிமனை வீதி
தொல்புரம்,
13.03.2002

கனம் தங்கிய வகுப்பாசிரியர் அவர்கட்கு,
எனது பணிவான வணக்கம்

ஐயா,

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட விபத்து ஒன்றினால் காலில் ஏற்பட்ட முறிவு காரணமாக மூன்று நாட்களாக என்னால் பாடசாலைக்குச் சமூகம் அளிக்க முடியாமையை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

ஞாயிற்றுக்கிழமை பெய்த கடும் மழையின் காரணமாக எமது வீட்டின் கிணற்றடியில் வழுக்கி விழுந்துவிட்டேன். விழுந்ததினால் அருகில் இருந்த கற்பாறையில் எனது கால் பலமாக அடிபட்டுவிட்டது. இதனால் இரத்தம் அடிப்பட்ட இடத்திலிருந்து பீறி ஓடியது. முதலுதவி செய்து கொண்டிருக்கும் போதே அடிபட்ட இடத்தில்பெரிய வீக்கம் ஏற்பட்டுவிட்டது. தந்தையார் உடனேயே என்னை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார். அங்கு என்னைப் பரிசோதித்தபின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாக வைத்தியர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது காலில் பெரிய பந்தம் போன்று கட்டுகள் கட்டியுள்ளனர். மூன்று நாட்களும் வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப் பட்டிருந்தேன். நேற்று என்னை வீடு செல்ல வைத்தியர் அனுமதித்தார். எனினும் படுக்கையிலேயே இருக்க வேண்டும் எனவும் காலை அசைக்க வேண்டாம் எனவும் கூறினார். இன்னும் இரண்டு கிழமைக்கு இவ்வாறு ஓய்வெடுக்கும் படியும் அதன் பின்பு மீண்டும் பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வீட்டில் ஓய்வு எடுக்கின்றேன். எனது காலில் ஏற்பட்ட வீக்கமும் வலியும் இப்போது குறைவடைந்துள்ளன. எனினும் பாடசாலைக்குச் சமூகமளிக்கு முடியாமல் இருப்பது வேதனையாகவே உள்ளது. இன்னும் இரண்டு கிழமைக்கு பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாது இருக்கும் என்பதையும் மிகவும் தாழ்மையுடன் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

வணக்கம்.

இங்கணம்,
தங்கள் கீழ்ப்பணிவுள்ள மாணவன்.
க. பரசுராமன்.

## 69 மாமாவிற்கு நன்றி கூறிக் கடிதம்

ச. மேகலா
இல. 69, படுவத்தலை வீதி,
கண்டி
15.12.2002

அன்பும் மதிப்பும் மிக்க மாமாவிற்கு,
பணிவான வணக்கங்கள்.

மாமா உங்கள் நலத்தை எல்லாம் வல்ல இறைவன் காக்க வேண்டும் எனப் பரார்த்திக்கின்றேன் அவ்விடம் மாமி, மைத்துனன் ரிஷிகேஷன் ஆகியோரது நலம் அறிய ஆவல்.

மாமா நான் 7ம் ஆண்டுப் பரீட்சையில் சித்தியடைந்தமையை பாட்டி தாங்கள் எனக்குக் கட்டுரை மஞ்சரி எனும் நூலைப் பரிசாக அனுப்பியிருந்தமைக்கு எனது நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்நூலில் உள்ள அறுபது அனுபவக் கட்டுரைகளையும் படித்துப் பார்த்தேன். எனது கல்விக்கும், பொது அறிவு விருத்திக்கும் உதவக்கூடிய பல நல்ல கட்டுரைகள் அதில் உள்ளன.

கல்வி பயிலும் எனக்கு மிகவும் பொருத்தமான பரிசைத் தெரிவு செய்து அனுப்பி, என்னை ஊக்குவித்து மகிழ்வித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி இக்கடிதத்தை முடிக்கிறேன்.

நன்றி

இப்படிக்கு,
உங்கள் அன்பு மருமகன்,
ச. ஹரிகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 70 விடுமுறையைக் கழித்த விதம் பற்றி நண்பனுக்குக் கடிதம்

க. எழில்முருகன்
''பழமுதிர்ச்சோலை''
சங்கானை வீதி,
யாழ்ப்பாணம்
05.01.2002

அன்பு நண்பன் மதனுக்கு,

உனது நலம் அறிய மிகவும் ஆவல், இறைவன் கிருபையால் நான் நலமேயுள்ளேன், நான் கடந்த மார்கழி மாத விடுமுறைக்குக் கண்டியில் உள்ள எனது அக்கா வீட்டிற்குச் சென்றிருந்தேன். இவ்விடுமுறைக் காலத்தில் எனக்குப் பல புதுமையான அனுபவங்களும் அறிவும் கிடைத்தன.

மார்கழி மாதம் ஏழாம் திகதி அதிகாலை ஐந்து மணிக்குப் பேருந்து மூலம் நானும் அப்பாவும் கண்டிக்குப் புறப்பட்டோம். மாலை நான்கு மணிக்கு நாம் கண்டி பேருந்து நிலையத்தை அடைந்தோம், அங்கு என் அக்காவின் கணவர் எம்மை வரவேற்று வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

பச்சைப்பசேல் என்ற மலைகளும் குளிர்மையுடன் ஒடும் ஆறுகளும். மலைகளைத் தடவிச் செல்லும் முகிற் கூட்டங்களும் என்னைக் கவர்ந்தன. மறுநாள் காலை கட்டுக்கலை விநாயகர் ஆலயத்திற்கு சென்று வழிபட்டோம். மாலை 4.00 மணியளவில் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று புத்தபிரானின் புனிதச் சின்னங்களை வழிபட்டோம்.

அதன்பின் மறுநாள் கண்டி நூதனசாலையைப் பார்வையிட்டோம் பழைய அரசர்கள், மகாராணிகள் பாவித்த உடைகள், கருவிகள், ஆபரணங்கள், ஆயுதங்கள், வீட்டுத் தளபாடங்கள், அவர்கள் வசித்த வீடுகள் எனப் பல்வேறு விடயங்களைப் பார்க்க முடிந்தது. கண்டி தலதாமாளிகைக்கு முன்னுள்ள தடாகத்தில் படகு ஓட்டியின் உதவியுடன் படகோட்டி மகிழ்ந்த அனுபவம் மறக்க முடியாயதது.

11ம் திகதி அங்கிருந்து வாடகைக்கார் ஒன்றில் கொத்மலை, விக்டோறியா நீர்த்தேக்கங்கள், மின் உற்பத்தி நிலையங்கள் முதலியவற்றையும் பார்வையிட்டோம்.

12ம் திகதி பேராதனைப் பௌதீக தாவரப் பூங்காவைப் பார்வையிட்டோம். பல வருடங்கள் பழமை வாய்ந்த தாரவங்கள், மரங்கள், பூச்செடிகள் என எத்தனையோ வகைத் தாவரங்களைப் பாதுகாத்து வைத்துள்ளனர். மலர்ப் பகுதிகளில் அழகழகான மலர்கள், ஓக்கிட் மலர்கள் என எழுத்திலடங்கா வண்ணங்கள், இம்மலர்களின் அருகிலேயே இருந்துவிடலாமே என்ற எண்ணத் தூண்டும் வண்ணமலர்கள்.

13ம் திகதி தேயிலை பதனிடும் தொழிற்சாலை ஒன்றிற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு சென்ற அவற்றைப் பற்றி அறிந்து கொண்டேன். மறுநாள் பேராதனைப் பல்கலைக்கழகம், குறிஞ்சிக் குமரன் கோவில் யாவற்றிற்கும் சென்றோம். மேற்படிப்புப் படிக்க நானும் இந்தப் பல்கலைக்கழகத்திற்குத் தான் வரவேண்டும் என நினைத்துக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டிற்கு உயர்வு உற்பத்தி, வேலை வாய்ப்பு, செழிப்பு, மின்சக்தி என யாவும் வழங்கி வளம் தரும் மகாவலி கங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பக்க எல்லையாக உள்ளது.

இயற்கை எழில் பொங்கும் மலைநாட்டின் தலைநகரில் இயற்கையுடன் செயற்கையும் ரசித்து அறிந்து மகிழ்ச்சி கொண்டேன். பயனுள்ளதாக இவ்விடுமுறை கழிந்தது என்று மகிழ்ச்சி கொண்டேன். நண்பா உனக்கும் சந்தர்ப்பம் கிடைக்கம்போது இவ்விடங்களிற்குச் சென்று பார்வையிடு. இது உனக்கு கல்வி கற்பதற்கும் பொது அறிவு விருத்திக்கும் உதவும்

இத்துடன் எனது கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

என்றும் உன் அன்பு நண்பன்,
ச. இராஜமோகன்.

## 71 பாடசாலைப் பொருட்காட்சியைப் பார்வையிட்ட வரும்படி நண்பனுக்கு கடிதம்.

உப்போடை தமிழ் மகா வித்தியாலயம்,
உப்போடை,
06.03.2002

அன்பின் நண்பன் விசாகன்,

இறையருளால் நீ நலமுடன் இருக்கப் பிரார்த்திக்கின்றேன். நண்பா, எமது பாடசாலையில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றியக் கல்விக் கண்காட்சி ஒன்று 10.04.2002 திகதி முதல் 13.04.2002 வரை நிகழவிருக்கின்றது. அதன் மூலம் மகாவலி பற்றிய அறிவு கிடைப்பதுடன் மேலதிக தகவல்களும் கிடைக்கும்.

இதனை நீ நிச்சயம் வந்து பார்வையிட்டுப் பயன் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் உனது வகுப்பு நண்பர்களையும் அழைத்து வரவும்.

உன்னை ஆவலுடன் எதிர்ப்பாத்திருக்கிறேன்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்,
ச. தவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 72 பெற்றோரது திருமண நாளுக்கு வாழ்த்துக் கடிதம்

சி. தர்மசீலன்,
''இந்து வாலிபர் விடுதி''
தர்மபால மாவத்தை,
கொழும்பு - 10,
11.12.2002.

என் அன்பும் மதிப்பும் மிக்க அப்பா, அம்மாவிற்கு,

அநேக நமஸ்காரம்.

உங்கள் நலனிற்கு இறைவனைக் பிராத்திக்கின்றேன். அப்பா, அம்மா உங்களது 16வது திருமண நாள் 15.12.2002ம் திகதி வருகின்றது. உங்களுக்கு என் பணிவான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறையருளால் சகல வளங்களும் பெற்ற நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்தித்து பணிவுடன் விடைபெறுகிறேன்.

வணக்கம்

இப்படிக்கு,
உங்கள் அன்பு மகன்,
சி. தர்மசீலன்.

## 73 விண்ணப்பக் கடிதம்

ச. ஜானகி
''சாரங்கம்''
இல. 173, வேதாந்த வீதி,
பதுளை,
04.01.2002

''நிர்வாகி''
திருக்குறள் மன்றம்,
இல. 15. வள்ளுவர் வீதி,
மாதுனூர்.

ஐயா,

கடந்த 03.01.2002 திகதி ''அறிவு'' தினப் பத்திரிகையில் தங்கள் மன்றத்தினால் திருக்குறள் உரைநூல் புதிதாக வெளியிடப்பட்டிருப்பது பற்றி அறிந்தேன்.

எனக்கு அதன் ஓர் பிரதி தேவைப்படுவதால் அதற்கான பெறுமதி ரூபா 80 இற்கான காசுக் கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவுசெய்து திருக்குறள் உரை புதிய பதிப்பில் ஓர் பிரதியை எனது மேலுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இங்ஙனம்,
உண்மையுள்ள
ச. ஜானகி.

## 74 புதுமனைப் புகுவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 15ம் நாள் (28.04.2002) புதன்கிழமை காலை 6 மணிக்கு, சுபவேளையில் எம்மால் அமைக்கப்பட்ட புதிய வீடு ''பிருந்தாவனத்தில்'' குடியுக இறையருள் கூடியிருப்பதால் அச்சமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்
தங்கள் நல்வரரை நாடும்,
திரு. திருமதி ஆலவாய் அரசரட்னமும்
குடும்பத்தினரும்.

## 75 அறிவித்தல்

அதிபர்
இந்துக்கல்லூரி,
அனுராதபுரம்,
10.01.2002

பெற்றார், பாதுகாவலருக்கு,

எமது பாடசாலையில் ஆண்டு ஆறுக்கான புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்படிவங்கள் எமது கல்லூரி அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன. ஆண்டு ஆறில் புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்பும் பெற்றார் பாதுகாவலர்கள் மேற்படி விண்ணப்பத்தைப் பெற்ற பூர்த்தி செய்து கல்லூரி அலுவலகத்தல் 30.03.2002 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக சேர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

நன்றி

இங்ஙனம்,
பாடசாலை அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 76 விளம்பர அறிக்கை

பள்ளி செல்லும் சின்னஞ் சிறார்களின்
பாடசாலைத் தேவைக்கான சகல விதமான

***புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள்,***

***மற்றும் பாடசாலை உபகரணங்கள்***

யாவற்றையும் மலிவான விலையில் பெற
இன்றே நாடுங்கள்

**"கல்வியகம்"**
**இல. 163, மேட்டுத் தெரு,**
**புத்தளம்.**

மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு கழிவுண்டு
தொலைபேசி இலக்கம் : 6342163

## 77 பத்திரிகைச் செய்தி

(இரத்தினபுரி நிருபர்)

கடந்த இரு தினங்களாகப் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் இரத்தினபுரி பிரதான வீதியருகில் மண்சரிவு ஏற்பட்டு வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மின் கம்பங்கள் முறிந்து வீழ்ந்திருப்பதால் மின்விநியோகமும் தடைப்பட்டுள்ளது.

மண்சரிவு காரணமாக புகையிரதப் பாதைகளும் பாதிக்கப்பட்டிருப்பதால் இரத்தினபுரி ஊடாகச் செல்லும் புகையிரதச் சேவைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். மண் சரிவினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் தொண்டர் ஸ்தாபனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

மேலும் உதவி வழங்குபவர்களைச் சமூக சேவையாளர் மன்றத்துடன் தொடர்பு கொள்ளும்படி சமூக சேவைகள் மன்றப் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாத்துயரில் ஆழ்த்திவிட்டுமீளாய்த் துயில் கொண்ட எமது குடும்ப நண்பன்

# பொன். சக்திவேல்

## அவர்களுக்கு



# எமது கண்ணீர் அஞ்சலி

**மலர்வு** **28.01.1956**

**உதிர்வு** **30.01.2010**

நண்பா உன் மூச்சு உள்ள வரை உன் அருகில் நின்று உன் கடைசி மூச்சு நிற்கும் வரை உன்னோடு தோள் சாய்ந்து இறுதிவரை உன் மூச்சு உன்னை விட்டு செல்லும் வரையிலும் உன் உயிர் மூச்சுக்கு மரியாதை செலுத்திய உன் ஆத்ம நண்பன் என்ற வகையில் நம் கடந்த கால நினைவுகளை கூறுகின்றேனடா நண்பா சக்தி. நாம் பிறந்த இல்லத்திலும் புகுந்த இடத்திலும் அருகில் இருந்தோமடா இதை விட எங்களுக்குள் வேறென்ன ஒற்றுமை வேண்டுமடா, இந்த நட்புக்கு இவ்வளவு விரைவில் பிரிவு வரும் என்று ஒரு கணம் தன்னும் நினைக்கவில்லை நண்பா. நாம் ஒரு பொழுது தானும் பேசாமல் இருந்ததில்லை நண்பனே இப்பொழுது மட்டும் எப்படி நண்பா பேசாமல் சென்று விட்டாய். நீ எங்கு செல்ல நினைத்தாலும் என்னை அழைக்காமல் செல்லமாட்டாய். இப்பொழுது மட்டும் காலன் உன்னை அழைக்கும் போது நம் அருகில் இருந்தும் கூட ஒருவருக்கும் சொல்லாமலேயே காலனுடன் சென்று விட்டாய். எமது நட்பு எப்போதும் பிரியக்கூடாது என்று தொலைபேசியில் அழைத்த வண்ணம் இருப்பாய்! ஆனால் காலன் என்னை அழைக்கிறான் என்று மட்டும் சொல்ல மறந்து விட்டாயே! என்னைத் தெரியாத உன் நண்பர்களுக்கெல்லாம் உன் நண்பன் நான் என்று அறிமுகம் செய்து வைத்தாயே! இனி எப்போதடா உன் சாந்தமான முகத்தை நாம் காண்போம். நீ எம்மோடு இருந்த அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேனடா அந்த நாட்களை எம் வாழ்நாளில் மறக்க முடியாதவை. வெகு விரைவில் உன்னைப் பிரிவோம் என்று உன் குடும்பமும் நாமும் நினைக்கவில்லை நண்பா! நீ ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் எந்த ஜென்மத்திலும் நீயே என் நண்பன். நீ எங்கள் குடும்ப உறவினன் நண்பா! உன் பிரிவால் துயருறும் உன் குடும்பத்துக்கும், மற்றும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு உன் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
நாகராசன் குடும்பத்தினர்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் **பொன். சக்திவேல்**

## அவர்களுக்கு எமது

# கண்ணீர் அஞ்சலி

**மலர்வு**

**28.01.1956**



**உதிர்வு**

**30.01.2010**

அன்புள்ள நண்பா,

பிறைற் புக் சென்டர் நிறுவகனாய் எங்களையும் அதனோடு இணைத்துக் கொண்டாய், ஆசானாய், நல்ல ஆலோசகராய் இனிய நண்பனாய் அறிவுரைகள் பல பகிர்ந்தாய். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல் நாமும் உன்னோடு நாளல்ல, மாதங்களல்ல பல்வருடங்களாய் பழகி நண்பர்களாய் மகிழ்ந்தோம். பகிடிகள் விடுவாய் வேடிக்கை பல செய்வாய். வாசலில் கண்டதும் முகம் மலர "வாடா" என எம்மை அழைத்து ஆனந்தம் கொள்வாய்.

சிவன் கோவில் வாசலில் தாண்டவப் பிள்ளையார் முன்றலில் சதுர்த்திப் பொங்கல் வைத்து எம்மையெல்லாம் அழைப்பாய். அதிகாலை பொழுதினில் சிவனுக்குத் தொண்டு செய்வதில் பூரிப்பாய். பகல் பன்னிரண்டு மணிக்கு தொலைபேசி செய்து என்னைப் பார்க்க வரவில்லையா என அழைப்பாய், இன்றும் பன்னிரெண்டு மணி வந்தது - எனினும் நின்று போனதோ உன் தொலைபேசி!

ஆழ்ந்த அஞ்சலியில் அமைதி பெறுவது தவிர வேறொன்றும் அறியோம் பராபரமே!

**உன் பிரிவால் துயருறும் நண்பர்கள்,**

**கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கலாநிதி பொன். சக்திவேல் அவர்கள்

## 30.01.2010 மறைவை முன்னிட்டு

# எமது

# கண்ணீர்

# அஞ்சலி



கண்ணியவானே கனவானே கலங்கரை விளக்கே கல்விமானே!
கல்விமழை பொழியும் ஆசானே உன் அறிவு நிழலில் சான்றோர் ஆயிரம் பேர்
கல்வியை ஏழைக்காய் கொடுத்து நல் ஆசானாக திகழ்ந்தவன்
நீ கற்ற கல்வி மருங்கிடாமல் சக்திகொடுத்து மேலானவர்கள்
சக்திவேலாகி நின் நாமத்துடன் தலை நிமிர்ந்து வாழும் காலம் இது.
கற்பக தருவே தரு நிழலே உன் மறைவுச்செய்திகேட்டு
நம்ப முடியவில்லை ஐயா !
காலனுக்கு கண் இல்லை என்று தான் சொல்வோம்.
காத்திருந்தவன் இன்னும் பல ஆண்டுகள்
காத்திருக்கலாமே நினைப் பறிக்க
குறிஞ்சிப்பூவாய், அனிச்சம் பூவாய் மகிழம் பூவாகி மாசிலாபாரிஜாதமாகி
பூமிப் பூந்தோட்டத்தில் மலர்ந்த மனிதப்பூவே
நின் வாசம்
எம் தேசத்தோடு, நேசத்தோடு நீடூழி வாழும் .........
இறை பாதம் சேர சிவனருளைப் பெற பிரார்த்திக்கும்

உன்பிரிவால் துயருறும்
யுனிலாங்காஸ்,
வே. பாலேந்திரா குடும்பத்தினர்,
கொழும்பு - 13.

31.01. 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி சிந்தும் நீராறு . . .

மலர்வு
28.05.1956

உதிர்வு
30.01.2010



அன்பின் இருப்பிடமாக
அறிவின் உறைவிடமானவரே
தமிழ் பேசும் மக்களின்
கல்விக்கு கலங்கரை விளக்கானவரே!
பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கல்விக்கனியை மாணவர் சுவைக்க பல ஆயிரம் அறிவு நூல்களையும் கையேடுகளையும் வெளியிட்டவரே!
ஆங்கில அறிவை மேலும் மெருகூட்ட "பிறைற்" எனும் பெயரில் தபால் மூலம் ஆங்கிலக்கல்வி எனும் புதிய பரிணாமத்தை தோற்றுவித்தவரே
கலாநிதியாய், பேராசிரியராய்
பல கௌரவங்கள் பெற்ற நீர் இன்று இறைவனடி சேர்ந்ததேனோ?
வருந்துகிறோம் வருந்துகிறோம் மறுமலர்ச்சி
மன்ற சமூகமே வருந்துகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

காலையடி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரும் பிறைற் புத்தக நிலையத்தின் உரிமையாளரும் எழுத்தாளருமான
(பேராசிரியர். பொன். சக்திவேல்)

## அமரர் பொன்னுத்துரை சக்திவேல்

அன்னாரின் பிரிவால் துயருறும்
காலையடி
மறுமலர்ச்சி மன்றம்

**RAVI KARUNANAYAKE** F.C.M.A

MEMBER OF PARLIAMENT - UNITED NATIONAL PARTY
ORGANISER - SRI JAYAWARDANAPURA KOTTE
CHAIRMAN - COLOMBO DISTRICT
SECRETARY - INTERNATIONAL RELATIONS

02-02-2010

திருமதி கௌரி சக்திவேல்
77/24 ஜம்பட்டா வீதி
கொழும்பு 13

இரங்கல் செய்தி

அன்புடையீர்,

உங்கள் குடும்பத் தலைவர் திரு. பொன். சக்திவேல் அவர்களின் பிரிவில் உறக்கமின்றி வாடும் உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கும் அதேவேளையில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் நான் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

ரவி கருணாநாயக்க
பாராளுமன்ற உறுப்பினர் / கட்சித் தலைவர்
கொழும்பு மாவட்டம்

Political Office : No. 239, Sri Jayawardanapura Mawatha, Welikada, Rajagiriya. Tel : 011-2884807, 2885624/5 Fax : 011-5355555
Parliament : Sri Jayawardanapura, Kotte, Sri Lanka.
Correspondence Office : No 40, Church Street, Colombo 01, Sri Lanka. Tel : 011-2434500 Ext :155/115 Fax :011- 2454687
Residence : No. 1291/6, Rajamalwatta Road, Battaramulla. Tel : 011-2872287 Fax : 011-2863138
E-mail : ravik@eureka.lk Web : www.ravik.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள்இல்லறச் சோதியும், அன்புக் கோயிலுமாகிய கணவரின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்து அனுதாபங்கள் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உள் நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் தொலைபேசி, தந்தி, கடிதங்கள் மூலம் எங்கள் துயரில் பங்குகொண்டோருக்கும், பலவழிகளிலும் உதவிகள் புரிந்த நண்பர்கள், அயலவர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் அன்னாரது சபீண்டிக்கரண நிகழ்வில் பங்கு கொண்டு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்த அனைவருக்கும், குறுகியகாலப் பகுதியில் திறம்பட அச்சிட்டுத்தந்த கொழும்பு, கௌரி அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
**குடும்பத்தினர்**

77/24 ஜம்பட்டா வீதி,
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு பொன்னுத்துரை சக்திவேல் அவர்களின்
## வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org